விலை : 20.00
பக்கங்கள் : இருபது

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
உலகத்தர ISO 14 001, 9001
சான்றிதழ் பெற்றுள்ள
ஒரே சீமெந்து ராம்கோ

சங்கு 15 வள்ளுவர் ஆண்டு 2045 வைகாசி 15 வியாழக்கிழமை (29.05.2014) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 161

# இராணுவத்தை வெளியேற்று; மக்களை மீள்குடியமர்த்து

## கிளிநொச்சியில் நேற்று போராட்டம்

(யாழ்ப்பாணம்)

**வடக்கிலிருந்து இராணுவமே வெளியேறு, இடம் பெயர்ந்த மக்களை அவர்களின் சொந்த இடங்களில் மீள்குடியேற்று என்ற கோரிக்கை கோஷம் முழங்க கிளிநொச்சியில் நேற்று கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்று நடத்தப்பட்டுள்ளது.**

தமிழ் மக்களின் காணிகளைப் படையினர் ஆக்கிரமிப்பதற்கு எதிராகவும் ஆக்கிரமித்த நிலங்களை மீளவும் ஒப்படைக்கக் கோரியும் கிளிநொச்சி மாவட்ட செயலகத்திற்கு முன்னால் நேற்று புதன்கிழமை காலை 11.00 மணியளவில் கவனயீர்ப்பு போராட்டம் நடைபெற்றது.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்தப் போராட்டத்திற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஜனநாயக மக்கள் முன்னணி மற்றும் தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கம் ஆகிய அமைப்புகள் தங்கள் ஒத்துழைப்பை வழங்கியிருந்தன.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் சார்பில் அதன் தலைவர்

19 ஆம் பக்கம் பார்க்க....




## வடக்கில் இராணுவம்தான் மிகப் பெரிய பிரச்சினை

### முதலமைச்சர் மீண்டும் சுட்டிக்காட்டு



(யாழ்ப்பாணம்)

வட மாகாணத்தில் இராணுவம் தான் மிகபெரிய பிரச்சினை என்பதை மீண்டும் சுட்டிக்காட்டியுள்ள முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், வட மாகாணத்திற்கு முன்னுரிமை வழங்கப்படுவதாக ஜனாதிபதியும், ஆளுநரும் கூறினாலும் நடைமுறையில் அவ்வாறில்லை என்பதையும் எடுத்துக் கூறியுள்ளார்.

வடக்கு மாகாண சபையின் முதலமைச்சருடன் இலங்கைக்கான அவுஸ்திரேலிய நாட்டின் உயர்ஸ்

19 ஆம் பக்கம் பார்க்க....

## அதிகாரத்தை பரவலாக்க தயாரென்றால் அரசிற்கு ஐ.தே.க. ஆதரவு வழங்கும்

### ஊடக சந்திப்பில் கிரியெல்ல எம்.பி. தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கைக்குள் அதிகாரத்தை பரவலாக்க தயார் என்றால் அதறகாக ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்திற்கு ஆதரவு வழங்கும் என ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனை கூறினார் அவர் மேலும் தெரிவிக்கையில்,

13-வது அரசியல் அமைப்புத் திருத்தச் சட்டத்திற்கு அப்பால் சென்று தீர்வை வழங்குமாறு இந்தியாவின் புதிய பிரதமர்நரேந்திர மோடி இலங்கை அரசிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

மகிந்த ராஜபக்ஷ அரசாங்கம் ஆட்சிக்கு வந்த பின்னர் ஐக்கியநாடுகள் அமைப்பு மற்றும் இந்தியா ஆகியவற்றிடம் 13-வது திருத்தச் சட்டத்திறகு அப்பால்சென்று தீர்வை வழங்குவதாக எழுத்து மூலம் உறுதயளித்தது.

அதனை அமுல்படுத்தும் நேர்மையான நோக்கத்துடன் அரசாங்கம் இந்த உறுதிமொழியை வழங்கியதா என

20 ஆம் பக்கம் பார்க்க....

## நாடா? ராஜபக்ஷ குடும்பமா?

### அரசுக்கு எதிராக ஐ.தே.க அறிக்கை

(கொழும்பு)

அபிவிருத்தி என்ற அழகான வார்த்தையின் போர்வையில் வீண விரயம், மோசடி, கமிஷன் வர்த்தகத்தைத் தவிர இன்று நாட்டில் அரசாங்கத்தின் நிர்வாகம் நடப்பதில்லை என ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைத்துவச் சபையின் தலைவர் கரு ஜயசூரிய தெரிவித்துள்ளார். கரு ஜயசூரிய நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

நாட்டின் அரச நிர்வாகம் நடப்பதில்லை என்பதால், போக்குவரதது, சுகாதாரம், கல்வி, சட்டம், ஒழுங்கு,

19 ஆம் பக்கம் பார்க்க....

## போராட்டக்காரர் கிளிநொச்சி அல்ல - இராணுவம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி நகரில் இராணுவத்தினர் நிலைகொண்டுள்ள காணிகளை மக்களிடம் ஒப்படைக்குமாறு நேற்று புதன்கிழமை போராடடம் நடத்தியவர்கள் யாழ்ப்பாணம் சாவகச்சேரி பிரதேசத்திலிருந்து கொண்டுவரப்பட்டவர்கள் என்று இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் ருவன்வணிகசூரிய தெரிவித்துள்ளார்.

அவர்களிடம் காணிகளை உரிமைகோருவதற்கான சட்டபூர்வ ஆவணங்கள் இருக்கவில்லை என்றும் பாதுகாப்பு அமைச்சின் ஊடக மையத்தில் நேற்று நடந்த ஊடக வியலாளர் சந்திப்பில் இராணுவப் பேச்சாளர் கூறினார்.

19 ஆம் பக்கம் பார்க்க....

## மன்மோகனுக்கு வழங்கிய வாக்குறுதியை மகிந்த அரசு நிறைவேற்ற வேண்டும் - அசாத்

### மோடியும் அதையே வலியுறுத்தியுள்ளார்

(புதுடில்லி)

இந்திய பிரதமரின் பதவியேற்பு விழாவில் கலந்து கொண்ட ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஏற்கெனவே பிரதமர் மன்மோகன் சிங்கிடம் வழங்கிய வாக்குறுதியை நிறைவேற்றுமாறு புதிய இந்திய பிரதமர் நரேந்திர மோடி ஜனாதிபதி மகிந்தவை வலியுறுத்தியுள்ளதாக தேசிய ஐக்கிய முன்னணி தெரிவித்துள்ளது.

கொழும்பில் நேற்று நடைபெறற ஊடகவியலாளர் சந்திப்பில் முன்னணியின் தலைவர் அசாத் சாலி இதனை கூறியுள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்தியாவில் கைது செய்யப்பட்டுள்ள மீனவர்களை விடுதலை செய்வதற்காக இலங்கையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள மூன்று இந்திய போதைப் பொருள் விற்பனையாளர்களை விடுதலை செய்வதா என்பது குறித்து கவனத்தில்கொள்ள வேண்டும்.

இந்தியாவின் 15-வது பிரதமராக பாரதிய ஜனதாக் கட்சியின் சிரேஷ்ட தலைவர் நரேந்திர மோடி தெரிவானார். இலங்கை அரசாங்கம் நினைப்பது போல் புதிய பிரதமர் மோடி ஒரு மூடன் அல்ல.

இந்தியாவில் ஆட்சி மாறியதால அங்கு அனைத்தும் மாறி விடும் என்று இலங்கை அரசாங்கம் எண்ணுகிறது. அது அப்படியல்ல. இந்தியாவில் ஆட்சி



19 ஆம் பக்கம் பார்க்க....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கான வினைதிறன்காண் மீள்பரீட்சை

வடக்கு மாகாணசபையில் கடமையாற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர்களில் கடந்த 2011 ஆம் ஆண்டில் நடைபெற்ற பரீட்சையில் சித்திபெறத் தவறிய உத்தியோகத்தர்களுக்கான இரண்டாவது வினைதிறன்காண் மீள்பரீட்சை எதிர்வரும் யூன் மாதம் 22, 23 ஆம் திகதிகளில் (22-06-2014, 23-06-2014 ஆகிய சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில்) வடக்கு மாகாணப் பொதுச்சேவை ஆணைக் குழுவினால் நடத்தப்படத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இப்பரீட்சையில் முகாமைத்துவப் பாடத்திற்கான பாடத்திட்டமானது 31-07-2011 வரை அமுலில் இருந்துவந்த வடக்கு மாகாண சபையின் அபிவிருத்தி உதவியாளர் சேவை பிரமாணக்குறிப்பிற்கமைவாகவும், ஏனைய பாடங்களாகிய அலுவலக நிர்வாகமும் தாபனவிதிக்கோவையும் மற்றும் நிதிப்பிரமாணங்கள் எனும் பாடங்கள் தற்போது (01-08-2011 இல் இருந்து) வடக்கு மாகாண சபையில் அமுலில் இருந்துவரும் அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவைப்பிரமாணக் குறிப்பிற்கமையவும் இடம்பெறவுள்ளது.

எனவே உரிய பாடத்திட்டங்களில் ஏற்பட்டுள்ள மாற்றங்களைக் கருத்தில் கொண்டு பரீட்சார்த்திகள் பரீட்சைக்கான முன்னாயத்தங்களை மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். (பரீட்சை வழிகாட்டி மற்றும் உசாத்துணை நூல்கள் என்பனவற்றினை எமது உத்தியோகபூர்வ இணைய தளமாகிய www.gsgunp.org இல் பார்வையிடலாம்.) (செ-11)

## மனைப் பொருளியல் கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக மனைப்பொருளியல் அலகினால் நடத்தப்படும் மனைப் பொருளியல் கண்காட்சி எதிர்வரும் யூன் மாதம் 4,5-ம் திகதிகளில் மு.ப 10.30 மணி தொடக்கம் பி.ப 4 மணிவரை யாழ். பல்கலைக்கழக புதிய கலைக் கட்டிடத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக கலைப்பீடாதிபதி பேராசிரியர் வி.பி. சிவநாதன் கலந்து கொண்டு சிறப்பிப்பார்.

இவ் மனைப் பொருளியல் கண்காட்சியானது மனை நிர்வாகம், மனிதவிருத்தி நடையையும் ஆடை அமைத்தலும் உணவும் போசனையும் எனும் 4 பிரதான பிரிவுகளை உள்ளடக்கியதுடன் உணவு கூடம் (Food court) எனும் பகுதியில் இலங்கைத் தமிழர்களின் பாரம்பரிய உணவு வகைகள், உடனடி பழப்பானங்கள், வெதுப்பகஉற்பத்திகள் என்பவற்றுடன் விருந்தோம்பல் முகாமைத்துவம், ஹொட்டல் தொழில் துறை தொடர்பான காட்சிப்படுத்தல்களும், விளக்கவுரைகளும் வழங்கப்படவுள்ளது. (செ)


## மாபெரும் மாட்டுவண்டி சவாரிப்போட்டி

ஸ்ரீ கனக துர்க்கை அம்மன் ஆலய வளர்ச்சி நிதிக்காக நடாத்தப்படும் மாபெரும் மாட்டுவண்டி சவாரிப் போட்டி



காலம்:- 01.06.2014
நேரம் :- பிற்பகல் 2.30 மணி
இடம் :- நீர்வேலி சவாரித் திடல்

(6510)

பூலசிட்டி அச்செழு, நீர்வேலி.

இப்படிக்கு திருப்பணிச் சபை



## அறிவித்தல்

மானிப்பாய் கிராம உப அலுவலகம், ஆனைக்கோட்டை
வட்டாரம் :- 01
ஆதன இலக்கம் :- 53 (புதிய பதிவு)
அண்ணாமலை வீதி, சுதுமலை

வட்டாரம் 01 அண்ணாமலை வீதி, சுதுமலை ஆதன இலக்கம் 53 (புதிய பதிவு) இல் அமைந்துள்ள (உறுதிப்படி வட மாகாணம் யாழ்ப்பாணம் வலிகாமம் மேற்குப் பகுதி மானிப்பாய் கோவில்பற்று சுதுமலை இறை "பழவிறாக்கையும் மறுபிரிவும்") என்னும் பெயருள்ள விஸ்தீரணம் நிலப்பரப்பு 01 கொண்ட இவ்வாதனமானது பருத்தித்துறையைச் சேர்ந்த சுபர்ணனும் பெண் பிரியங்கா ஆகிய இவர்களால் அறுதி உறுதி மூலம் சுதுமலையைச் சேர்ந்த கருணானந்தராசா டுசேந்திரன் என்பவருக்கு குறித்த ஆதனமானது பிரசித்த நொத்தாரிஸ் திரு.எஸ்.சிவபாதம் முகதாவில் நிறைவேறிய 6924 ஆம் இலக்க 2014.03.03 ஆம் திகதிய அறுதி உறுதி மூலம் தமக்கு சொந்தம் என தெரியப்படுத்தி எமது மானிப்பாய் கிராம உப அலுவலக (ஆனைக் கோட்டை) ஆதனப்பதிவேட்டில் தமது பெயரை உட்புகுத்துவதற்கு விண்ணப்பம் செய்துள்ளார். "பழவிறாக்கையும் மறுபிரிவும்" நிலப்பரப்பு 01 கொண்ட இவ்வாதனத்திற்கு உரிமை கோருபவர்கள் யாராவது இருந்தால் அவ்வுரிமையை உறுதிப்படுத்தும் உறுதிகள் ஆவணங்களுடன் எழுத்து மூலமாக 14 நாட்களுக்குள் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன். அவ்வாறு யாராவது எவ்வுரிமையும் கோரப்படாதவிடத்து இவ்வாதனம் கருணானந்தராசா டுசேந்திரன் என்பவர் பெயருக்கு மேற்குறித்த ஆதனத்தினை பெயர்மாற்றம் செய்ய உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதை அறியத்தருகின்றேன்.

தவிசாளர்,
வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை,
மானிப்பாய். (6504)

## மரண அறிவித்தல்



### செல்லையா ஆச்சாரி தவராசா சிற்ப ஆச்சாரி (தவம்)

வவுனியா கோயில் புதுக்குளத்தை பிறப்பிடமாகவும் மதவுவைத்த குளத்தை வசிப்பிடமாகவும் கொண்ட தவராசா சிற்ப ஆச்சாரி (தவம்) நேற்று முன்தினம் (27.05.2014) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் செல்லையா ஆச்சாரி - சிவபாக்கியம் தம்பதியரின் அன்பு மகனும், ரஜனியின் அன்புக் கணவரும், தக்ஷினி (பிரான்ஸ்), பிரசன்னாத், டினேஸ் (ஜேர்மன்), கஜன், சாரங்கன் ஆகியோரின் பாசமிகு தந்தையாரும், ஜெயானந்தம் சிற்ப ஆச்சாரி (காயத்திரி சிற்பாலயம்- பருத்தித்துறை), நித்தியானந்தன், கலாவதி, இந்திராவதி, கமலாவதி (யாழ்.போதனா வைத்தியசாலை ஊழியர்), பத்மாவதி, புஷ்பவதி ஆகியோரின் பாசமிகு சகோதரனும், கெங்காதேவி, காலஞ்சென்ற சீலலதா, சிவகுமாரன் (மெக்கானிக்), தங்கலிங்கம், தமிழ்மாறன் (புகைப்படப் பிடிப்பாளர்), ஜெயகுமார் (மெக்கானிக்), பாலகுமார் ஆகியோரின் அன்பு மைத்துனரும், ரதீஸ்குமார் (பிரான்ஸ்), துஷா ஆகியோரின் மாமனாரும், ரக்ஷிதாவின் (பிரான்ஸ்) அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (29.05.2014) மாலை 3 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று தகனக்கிரியை வவுனியா தோணிக்கல் இந்து மயானத்தில் இடம்பெறும்.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.

மதவுவைத்த குளம்,
வவுனியா. (சி-7503)

தகவல்:
குடும்பத்தினர்.

## அமைச்சர் யாப்பா மலேசியா பயணம்

நாடாளுமன்ற நடவடிக்கைகளை வலுப்படுத்தும் வேலைத்திட்டத்தின் அனுசரணையில் உலக வங்கியின் நாடாளுமன்ற ஒன்றியம் ஒழுங்கு செய்யும் ஆசிய பிராந்திய பொதுக்குழு மற்றும் செயற்குழுவின் கூட்டத் தொடரில் கலந்து கொள்வதற்காக அமைச்சர் அனுர பிரியதர்ஷன யாப்பா நேற்று மலேசியா சென்றுள்ளார்.

இந்த கூட்டத் தொடர் எதிர்வரும் 29 ஆம் திகதி முதல 30 ஆம் திகதி வரை மலேசிய தலைநகர் கோலாலம் பூரில் நடைபெறவுள்ளது.

இதில் இலங்கை, பங்களாதேஷ், பூட்டான், இந்தோனேசியா, தாய்லாந்து, மாலைத்தீவு, வியட்நாம் நாடுகளின் நாடாளுமன்ற பொதுக்குழு பிரதிநிதிகள் கலந்து கொள்ள உள்ளனர். (செ-11)

## கடந்த 5 வருடங்களில் வாகன விபத்துக்களால் 2728 மாணவர்கள் பலி

(கொழும்பு)

2009 ஆம் ஆண்டு முதல் இதுவரை 2 ஆயிரத்து 728 பாடசாலை மாணவர்கள் வாகன விபத்துக்கள் காரணமாக உயிரிழந்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹன தெரிவித்துள்ளார்.

இந்த காலப் பகுதியில் 8 ஆயிரத்து 524 மாணவர்கள் படுகாயடைந்து அங்கவீனமடைந்துள்ளனர் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த நிலைமைக்கு பாடசாலை மாணவர்களை ஏற்றிச் செல்லும் வாகன சாரதிகள் மட்டுமின்றி பெற்றோர் உட்பட பாதுகாவலர்களும் பொறுப்புக் கூறவேண்டும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கந்தான பிரதேசத்தில் பாடசாலை ஒன்றின் வாகன தரிப்பிடத்தில் வாகனம் ஒன்றில் மோதுண்டு ஒரு மாணவன் உயிரிழந்ததுடன் மேலும் 4 பிள்ளைகள் காயமடைந்தனர். இந்த சம்பவம் சாரதியின் தவறு காரணமாக ஏற்பட்டுள்ளது.

இவ்வாறான விபத்துக்களை பொலிஸாரினால் மட்டும் தடுக்க முடியாது.

விபத்தை ஏற்படுத்திய சாரதி 35 வருடங்கள் ஆசிரியராக பணியாற்றி பின்னர் அதிபராக இருந்து ஓய்வுபெற்றவர். சாவியை பயன்படுத்தி வாகனத்தை இயக்க முடியாததால், தள்ளி இயக்க முயற்சித்த போது இந்த விபத்து ஏற்பட்டுள்ளது எனவும் அஜித் ரோஹன குறிப்பிட்டுள்ளார். (செ-11)

## இலத்திரனியல் அடையாள அட்டை 2016 ஆம் ஆண்டில் அறிமுகம்

(கொழும்பு)

இலங்கையில் 2016-ம் ஆண்டு முதல் இலத்திரனியல் அடையாள அட்டை அறிமுகப்படுத்தப்படும் என ஆட்பதிவுத் திணைக்களத்தின் பிரதி ஆணையாளர் ஜீ.ஏ.ஆர். தேசப்பிரிய தெரிவித்தார்.

இதன் பின்னர் தற்போது பயன்பாட்டில் இருக்கும் அடையாள அட்டை இரத்துச் செய்யப்படும் எனவும் 15வயது பூர்த்தியானவர்கள் முதல் அனைவருக்கும் இலத்திரனியல் அடையாள அட்டை வழங்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

இம்முறை கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையில் தோற்றும் ஒரு லட்சத்து 25 ஆயிரம் மாணவ மாணவிகள் அடையாள அட்டைகளை கோரி விண்ணப்பித்துள்ளனர்.

விண்ணப்பிப்பதற்காக அவர்களுக்கு வழங்கப்பட்ட காலம் இந்த மாதம் 31 ஆம் திகதியுடன் முடிவடைகிறது.

மாணவர்களிடம் இருந்து மேலும் 4 லட்சம் விண்ணப்பங்கள் கிடைக்கும் என எதிர்பார்ப்படுகிறது.

ஒக்டோபர் 31 ஆம் திகதி பிறந்த 16 வயது பூர்த்தியாகும் மாணவர்களுக்கு தேசிய அடையாள அட்டை கட்டாயமாக்கப் பட்டுள்ளது. 16 வயதுக்கும் குறைந்த வயதுடைய மாணவர்கள் அஞ்சல் அடையாள அட்டைகளை பயன்படுத்த முடியும் எனவும் தேசப்பிரிய குறிப்பிட்டுள்ளார். (செ-11)


வலம்புரி விளம்பர தொடர்புகளுக்கு
0213210815, 0215671532
valampurii@yahoo.com


## தவறிவிட்டது

கலைப்புலவர் வீதி யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சந்திரமோகன் பத்மினிதேவி என்பவருடைய 698190230V எனும் இலக்கமுடைய அடையாள அட்டை தவறவிடப்பட்டுள்ளது. கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். (6501)

தொடர்புகளுக்கு:- 0212220963, 0776741127


## விற்பனைக்கு

டொபமன் (Doberman) ஆணும் பெண்ணும் ஒரே இனத்தைச் சேர்ந்த 60 நாட்களுக்கு உட்பட்ட நாய்க்குட்டிகள் விற்பனைக்கு உண்டு. (6506)

தொடர்பு:- யோ.மரியநாயகம்
42, மார்டின் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.இல:- 0214901276


## 2 ஆம் ஆண்டு நினைவலைகள்



அமரர்
### சுந்தரலிங்கம் ஜெயச்சந்திரன்

ஆண்டுகள் இரண்டு ஓடி
மறைந்தாலும்
ஆறாத துயர் மட்டும் இன்னும்
ஓய்ந்ததில்லை
அப்பா உமையிழந்து ஆண்டுகள்
இரண்டு ஆனதுவோ?
ஆசை முகம் மறைந்து அவலம்தான்
சூழ்ந்ததுவோ?
உதித்த ஒளி மழுங்கி ஈராண்டா
னாலும்
உதிரத்து உறவுகளின் உதட்டில்
உம் நாமம்
ஆண்டுகள் எத்தனை தான்
ஆனாலும்
ஆறாத உம் நினைவுகளுடன்
என்றும் நாம் இருப்போம்.

நீங்காத நினைவுகளுடன்:
மனைவி, மக்கள்,
சகோதரர்கள்

பண்ணாகம் தெற்கு,
சுழிபுரம். (6509)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புகையிலை ஒழிப்பு தினத்தில் மாபெரும் விழிப்புணர்வு பேரணி

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணத்தில் பாடசாலை மாணவர்களுக்கிடையே புகைத்தல் பழக்கம் அதிகரித்து வருகின்றது என யாழ். மருத்துவர் சங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

யாழ்.போதனா வைத்தியசாலையில் நேற்று முற்பகல் 11.30 மணியளவில் நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பொன்றின் போதே மருத்துவர் சங்கம் இதனை தெரிவித்துள்ளது.

மேலும் எதிர்வரும்31 ஆம் திகதி சர்வதேச புகையிலை ஒழிப்பு தினத்தில் புகையிலை ஒழிப்பு எனும் தொனிப் பொருளில் மாபெரும் பேரணி ஒன்றை நடத்த திட்டமிட்டுள்ளதாகவும் ஏற்பாட்டுக்குழுவினர் தெரிவித்தனர்.

இப் பேரணி யாழ். விஞ்ஞான சங்கத்தின் மருத்துவ விஞ்ஞானப் பிரிவு, யாழ்.பல்கலைக்கழக சமுதாய மற்றும் குடும்ப மருத்துவத் துறையுடன் இணைந்து நடத்தப்படவுள்ளது.

சர்வதேச புகையிலை ஒழிப்பு தினமான எதிர்வரும் 31 ஆம் திகதி புகைத்தல் பொருட்களை விற்பனை செய்வதனை தவிர்க்குமாறும் ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர்.

இப் பேரணியில் சிவில் அமைப்புக்கள், பொது அமைப்புக்கள், கிராமிய அமைப்புக்கள் என்பனவும் இணைந்து கொண்டு புகைத்தலுக்கு எதிராக குரல் கொடுக்கமுடியும் எனவும் ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர்.

அன்றைய தினம் காலை 8 மணிக்கு நல்லூர் கந்தன் ஆலய முன்றிலில் ஆரம்பமாகும் இப்பேரணி பருத்தித்துறை வீதி, ஸ்ரான்லி வீதி, கே.கே.எஸ்.வீதி, யாழ். மத்திய பேருந்து தரிப்பிடம் ஊடாக சென்று முற்பகல் 11 மணியளவில் யாழ்.வீரசிங்கம் மண்டபத்திற்கு சென்று அங்கு விழிப்புணர்வு விரிவுரைகள், கருத்தரங்குகள் இடம்பெறும் எனவும் அவர்கள் தெரிவித்தனர். இச் சந்திப்பில் யாழ்.மருத்துவர் சங்க செயலாளர் வைத்திய கலாநிதி இ.சுரேந்திரகுமாரன், யாழ். விஞ்ஞான சங்கத்தின் மருத்துவப் பிரிவு தலைவர் திருமதி தெய்வி தபோதரன், யாழ். விஞ்ஞான சங்கத்தின் செயலாளர் செல்வி வினித்திரா வேலாயுதபிள்ளை ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர். (அ-4)

# இந்து கட்டடக்கலை, சிற்பக்கலை பயிலரங்கிற்கு விண்ணப்பிக்கலாம்

(கொழும்பு)

இந்துசமய,கலாசார அலுவல்கள் திணைக்களம், அரச பாடசாலைகளில் இந்து நாகரிகம், இந்து சமயம் ஆகிய பாடநெறிகளைப் பயிலும் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களின் கலை தொடர்பான அறிவினை விருத்தி செய்யும் பொருட்டு இந்துக் கட்டடக்கலை, சிற்பக்கலை தொடர்பான பயிற்சிப் பயிலரங்கு மன்னார், வவுனியா, கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த மாணவர்களும் ஆசிரியர்களும் பயன்பெறும் வகையில் எதிர்வரும் ஜுலை மாதம் முதலாம் திகதி தொடக்கம் 6 ஆம் திகதி வரை நடத்துவதற்கான ஒழுங்குகளை மேற்கொண்டுள்ளது.

அதற்கமைய ஜுலை மாதம் 1,2 ஆம் திகதிகளில் வவுனியா, சுத்தானந்தா இந்து இளைஞர் மன்ற மண்டபத்திலும் 3,4 ஆம் திகதிகளில் கிளிநொச்சி மாவட்ட கூட்டுறவு சபை மண்டபத்திலும் 5,6 ஆம் திகதிகளில் முல்லைத்தீவு வித்தியானந்தா கல்லூரி மண்டபத்திலும் இப் பயிலரங்கு நடைபெறவுள்ளது.

இப் பயிலரங்கின் மூலம் பயன் பெறவிரும்பும் ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் தமது பாடசாலை அதிபர் ஊடாக விண்ணப்பங்களை முன்கூட்டியே திணைக்களத்தில் விண்ணப்பித்து தம்மை பதிவு செய்து கொள்ளும்படி திணைக்களம் விடுத்துள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலதிக விபரங்கள் அவசியமெனில் 011 2552641 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு திணைக்கள ஆய்வுப் பிரிவில் தகவல்களை பெற்றுக்கொள்ள முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# மின்னியலாளர் பயிற்சிக்கு விண்ணப்பிக்கலாம்

தேசிய பயிலுநர் கைத்தொழிற் பயிற்சி அதிகார சபையின் கீழ் வீட்டு மின்னியலாளர் பயிற்சி நெறிக்கு (NVQ சான்றிதழ்) யாழ்ப்பாணம் பயிற்சி நிலையத்தால் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இதற்கு விண்ணப்பிப்பதற்கு க.பொ.த. (சா/த)வரை கல்வி கற்றிருத்தல் வேண்டும்.

விண்ணப்பதாரி விண்ணப்ப முடிவுத் திகதியன்று 16 வயதிற்கும் 35 வயதிற்கும் உட்பட்டவராக இருக்க வேண்டும். தகுதியுடையவர்கள் முழுப் பெயர், முகவரி, தொலைபேசி இல., பிறந்த திகதி, தேசிய அடையாள அட்டை இலக்கம், கல்வித் தகைமைகள் என்பவற்றைக் குறிப்பிட்டுச் சுயமாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப் படிவத்தை மாவட்ட முகாமையாளர், NAITA, இல. 44, சோம சுந்தரம் வீதி, சுண்டுக் குளி, யாழ்ப் பாணம் என்னும் முகவரிக்கு 02.06.2014 இற்கு முன்னர் அனுப்பி வைக்கவேண்டும்.

அத்துடன் காகித உறையின் இடது பக்க மேல் மூலையில் வீட்டு மின்னியலாளர் பயிற்சி நெறிக்கான விண்ணப்பம் என தவறாது குறிப்பிட வேண்டும் என மாவட்ட உத்தியோகத்தர் கி.கிருஷ்ண பாலன் அறிவித்துள்ளார். (அ)



ஸ்ரான்லி வீதியில் அமைந்துள்ள இலங்கை வங்கியின் இரண்டாவது கிளையில் 18+ கணக்கினைப் பேணிய திருமணத் தம்பதிகளுக்கு பரிசில்(தங்கப்பவுண்) வழங்கும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. இந் நிகழ்வில் திருமதி யோகானந் லக்ஷிதாவுக்கு வாடிக்கையாளர் சேவை முகாமையாளர் தி.ஸ்ரீஸ்கந்தராசா தங்கப் பதக்கத்தை வழங்குவதையும் அருகில் முகாமையாளர் செ.தர்மராஜா, பிரத்தியேக வங்கி அதிகாரி திருமதி எஸ்.தயானந்தன் ஆகியோர் நிற்பதை படத்தில் காணலாம்.

# உள்ளூராட்சி சபைகளின் அபிவிருத்திக்கு ஆஸி.உதவி

(யாழ்ப்பாணம்)

உள்ளூராட்சி சபைகளின் அபிவிருத்திக்கு அவுஸ்திரேலிய அரசாங்கம் இலங்கைக்கு 25 ஆயிரம் அவுஸ்திரேலிய டொலர் வழங்குவதற்கு முன்வந்துள்ளது.

யாழ்ப்பாணத்திற்கு நேற்றைய தினம் விஜயம் செய்திருந்த இலங்கைக்கான அவுஸ்திரேலிய தூதுவர் ரொபின் மூடி யாழ். மாகாண சபை ஆணையாளர் செ.பிரணவநாதனை நேற்று சந்தித்து கலந்துரையாடினார்.

இதன்போதே அவுஸ்திரேலிய தூதுவர் ஆணையாளரிடம் உள்ளூராட்சி சபைக்கான உதவி வழங்கப்படும் என தெரிவித்துள்ளார்.

இச் சந்திப்பு தொடர்பில் யாழ். மாநகர சபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா தெரிவிக்கையில், உள்ளூராட்சி சபைகளை வலுப்படுத்தும் முகமாக இலங்கைக்கான அவுஸ்திரேலிய தூதுவர் யாழிற்கு விஜயம் மேற்கொண்டிருந்தார்.

இதன்போது நெல்சிப் உதவித் திட்டம் தொடர்பிலும் விரிவாக கலந்துரையாடப்பட்டிருந்தது.

மேலும் இச் சந்திப்பில் தெற்காசியாவிற்கான அவுஸ்திரேலிய தூதுவர், உலக வங்கி பிரதிநிதி உட்பட பலர் கலந்து கொண்டிருந்ததாகவும் அவர் தெரிவித்தார்.(அ-4)

# அருணலு விருது வழங்கும் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

கொமர்ஷல் வங்கியின் அனுசரணையுடன் தரம் 5 இல் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கான அருணலு விருது வழங்கும் நிகழ்வு நாளை மறுதினம் சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ்.ஆஸ்பத்திரி வீதியிலுள்ள கொமர்ஷல் வங்கிக் கிளை யில் நடைபெறவுள்ளதாக சிரேஷ்ட முகாமையாளர் அறி வித்துள் ள்ளார். (2)

# வடமாகாண கல்வி பணிப்பாளர் வெற்றிடம் நிரப்பப்படும்

## வடக்கு ஆளுநர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

வடமாகாண கல்வி பணிப்பாளர் வெற்றிடத்தை நிரப்புவதற்கான நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு மத்திய கல்வி அமைச்சிடம் வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் கோரிக்கை விடப்பட்டதன் பிரகாரம் இந் நியமனங்கள் துரிதமாக வழங்கும் நடவடிக்கையை மத்திய கல்வி அமைச்சு மேற்கொண்டு வருவதாக வடக்கு மாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி தெரிவித்துள்ளார்.

மாகாண கல்வி பணிப்பாளர் நியமனம் தொடர்பான அதிகாரம் மத்திய கல்வி அமைச்சிற்கு உட்படுத்தப்பட்டுள்ளது எனவும் முல்லைத்தீவு வலயக் கல்விப் பணிப்பாளர் நியமனம் தொடர்பாகவும் தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் விசாரணைகள் துரிதப்படுத்தப்பட்டு பூர்த்தியடைந்ததும் இந் நியமனம் குறித்து நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (அ)

# இராசி பலன்

**29.05.2014**

**(வைகாசி 15, வியாழக்கிழமை)**

**சூரிய உதயம் காலை 5.53 மணிக்கு**
**பிரதமை பின்னிரவு 1.01 மணிவரை**
**ரோகினி முன்னிரவு 7.29 மணிவரை**
**இராகுகாலம் 1.22-2.52 மணிவரை**
**சுபநேரம் 7.22 - 8.52 மணிவரை**

வளவன்

**மேடம்:** எடுத்த காரியத்தில் கண்ணும் கருத்துமாக செயற்படுவீர்கள், வீட்டை அழகுபடுத்தும் எண்ணம் மேலோங்கும், குடும்பத்தேவைகள் பூர்த்தியாகும், வார்த்தைகளில் நிதானம் தேவை.

**இடபம்:** கொடுக்கல் வாங்கல்களை ஒழுங்குபடுத்த முற்படுவீர்கள், நண்பர்கள் நம்பிக்கையுரியவர்களாக நடந்து கொள்வர், குடும்ப பொறுப்புக்கள் கூடும் நாள்.

**மிதுனம்:** நண்பர்கள் தொடர்பான வேலைகளுக்காக சற்று அலைய நேரிடலாம், சயனசுகக் குறைவான நாள், முயற்சிகளை முடிப்பதில் சில தாமதங்கள் ஏற்படலாம்.

**கடகம்:** வருமானம் பெருகி வளம் காண்பீர்கள், அரசுவழியில் அனுகூலமுண்டு, செய்தொழில் சிறப்புகள் ஏற்படலாம், குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும்.

**சிம்மம்:** மற்றவர்களின் உதவிகள், ஒத்தாசைகள் என்பன கிடைக்கப் பெறுவீர்கள், தூரதேசச் செய்திகளால் நன்மையுண்டு, எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும், ஆரோக்கியமான நாள்.

**கன்னி:** மாற்றுக் கருத்துடையோர் மனம் மாறுவர், பித்த சம்பந்தமான ரோகங்கள் ஏற்படலாம், புதிய திட்டங்கள் எளிதில் கைகூடும், ஆன்றோர் சந்திப்புண்டு.

**துலாம்:** எதிர்பாராத வகையில் சில மனஸ்தாபங்கள் ஏற்படலாம், முயற்சிகள் தாமதமாகும், அதிகாரிகளை அனுசரித்துச் செல்வது நல்லது, உடல் நலனில் கவனம் தேவ்வ.

**விருச்சிகம்:** செய்தொழில் மேன்மையுண்டு, நண்பர்களின் சந்திப்புக்கள் இடம் பெறலாம், எடுத்த காரியங்கள் [illegible] முண்டு.

**தனுசு:** அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர், இனிமையான அனுபவங்கள் ஏற்படும் நாள், வெளியூர்த் தொடர் புகளால் நன்மையுண்டு செய் தொழில் மேன்மையுண்டு.

**மகரம்:** உள்ளம் மகிழும் விதத்தில் உதிரி வருமானங்கள் வந்து சேரலாம், பிள்ளைகளின் கல்வி நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், புண்ணிய காரியங்களில் ஆர்வம் கூடும்.

**கும்பம்:** மைத்துநர் வழியில் மனதிற்கினிய தகவல்கள் வந்து சேரலாம், சுப செலவுகள் அதிகமாகும், பெற்றோர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள்.

**மீனம்:** உடன் பிறப்புக்கள் மூலம் எதிர்பாராத உதவிகள் கிடைக்கப் பெறுவீர்கள், பயணங்களால் பலனுண்டு, நீண்ட நாளைய பிணக்குகள் முன்னேற்றம் தரும், வருமானம் திருப்தி தரும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சுயதொழில் கடன் வழங்க ஊக்குவிப்பு செயலமர்வு

இளைஞர் விவகார மற்றும் திறன்கள் அபிவிருத்தி அமைச்சு இலங்கை மத்திய வங்கியின் செயற்றிட்டத்தின் கீழ் யாழ்.தொழில் நுட்பவியல் கல்லூரி தொழில் வழிகாட்டல் மையத்தினால் நடத்தப்படும் சுயதொழில் கடன் செயலமர்வு இன்று வியாழக்கிழமை காலை 9 மணிக்குதொழில்நுட்பவியற்கல் லூரி





தொழில் வழி காட்டல் மையத்தில் நடைபெறவுள்ளதாக யாழ்.தொழில்நுட்பவியல் கல்லூரி இயக்குநர் என்.யோரா ஜன் அறிவித்துள்ளார்.

எனவே இளைஞர் விவகார மற்றும் திறன்கள் அபிவிருத்தி அமைச்சின் கீழ் இயங்கும் தொழில்நுட்பவியல் கல்லூரி, தொழிற் பயிற்சி அதிகார சபை, தேசிய பயிலுநர் கைத்தொழில் பயிற்சி அதிகாரசபை மற்றும் இளைஞர் சேவைகள் மன்றம் போன்றவற்றில் பயிற்சிநெறிகளை பூர்த்தி செய்த மாணவர்களை இத்திட்டத்தில் இணைந்து கொள்ளுமாறு அவர் கேட்டுள்ளார்.

மேலதிக விபரங்களை தொழில் வழிகாட்டல் மையம், தொழில்நுட்பவியல் கல்லூரி, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியிலோ அல்லது 021 222 0028 என்ற தொலைபேசி இலக்கத்துடனோ தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ள முடியும். (2)

நன்றி-மிரர்



# காணியை சுவீகரித்து நிரந்தர படைமுகாம் அமைக்க முயற்சி

## வழக்கு தொடர காணி உரிமையாளர்கள் முடிவு

(யாழ்ப்பாணம்)

**வடமராட்சி திக்கம் பகுதியில் ஸ்ரீலங்கா பாடசாலைக்கு பின்புறமாகவுள்ள 8 ஏக்கர் காணியை சுவீகரித்து நிரந்தர படைமுகாம் அமைக்க இராணுவத்தினர் மேற்கொண்ட முயற்சிகளுக்கு அக்காணிகளுக்கு சொந்தக்காரர்களான பொதுமக்கள் கடும் எதிர்ப்பைத் தெரிவித்துள்ளதோடு நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யவும் தீர்மானித்துள்ளனர்.**



குறித்த 8 ஏக்கர் காணிகளையும் சட்டப்படி சுவீகரிக்கும் நோக்கில் நில அளவைத் திணைக்கள அதிகாரிகளைக் கொண்டு அளக்கும் பணியில் நேற்றைய தினம் இராணுவத்தினர் ஈடுபட்ட போதே அக்காணிகளுக்கு சொந்தக்காரர் தமது எதிர்ப்பைத் தெரிவித்துள்ளனர்.

அதேவேளை மக்கள் பிரதிநிதிகளான வடக்கு மாகாண சபையின் ஆளும்கட்சி உறுப்பினர்களிடமும் முறையிட்டுள்ளனர்.

இதுதொடர்பில் வடக்கு மாகாண சபையின் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் உறுப்பினரான ச.சுகிர்தன் தெரிவிக்கையில்,

யாழ்.மாவட்டத்தில் உயர் பாதுகாப்பு வலயமாக இராணுவத்தினரால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள வலிகாமம் வடக்கு பகுதியிலுள்ள 6 ஆயிரத்து 500 இற்கும் மேற்பட்ட ஏக்கர் காணிகள் தவிர்ந்த மக்கள் குடியிருக்கும் பகுதிகளிலும் இராணுவத்தினர் காணிகளைச் சுவீகரிக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர்.

காணி விவகாரம் குறித்து பல முறைப்பாடுகள் மாகாணசபை உறுப்பினர்களிடம் வந்து குவிகின்றன.

இந்த எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே செல்கிறது.

இதன் தொடர்ச்சியாக நேற்றுக் காலை யாழ்.வடமராட்சி திக்கம் பகுதியிலுள்ள ஸ்ரீலங்கா பாடசாலைக்கு பின்புறமாகவுள்ள தமிழ் மக்களுக்கு சொந்தமான 8 ஏக்கர் காணியை சட்டப்படி சுவீகரிக்கும் முயற்சியில் இராணுவத்தினர் ஈடுபட்டுள்ளனர்.

ஏற்கனவே அங்கு முகாம் அமைத்து தங்கியுள்ள இராணுவத்தினர் பாரிய படைமுகாம் ஒன்றினை அமைக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ள நிலையில் எதிர்காலத்தில் சட்ட சிக்கல் ஏற்படக் கூடாது என்ற காரணத்திற்காக குறித்த காணியை அளந்து சட்டப்படி சுவீகரிக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர்.

இதன்பிரகாரம் நேற்றுக் காலை 9.30 மணியளவில் நிலஅளவைத் திணைக்கள அதிகாரிகளை கொண்டு குறித்த காணிகளை அளக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

இதனை அவதானித்த அந்தக் காணிகளின் சொந்தக்காரர்கள் மாகாணசபை உறுப்பினர்களான எம்.கே. சிவாஜிலிங்கம், வே.சிவயோகன் மற்றும் எனக்கும் அறியத் தந்தனர்.

இதனையடுத்து மூவரும் சம்பவ இடத்திற்கு சென்றிருந்தோம். எம்மோடு பருத்தித்துறை பிரதேச சபையின் தவிசாளர் பூ.சஞ்சீவன், வல்வெட்டித்துறை நகரசபை உப தவிசாளர் எஸ்.சதீஸ் ஆகியோரும் வருகை தந்திருந்தனர்.

இராணுவத்தினரால் முன்னெடுக்கப்படும் காணி சுவீகரிப்புக்கு எதிராக காணி உரிமையாளர்களுடன் இணைந்து நாம் எதிர்ப்பை தெரிவித்த போதும் அதனைப் பொருட்படுத்தாத இராணுவத்தினர் நில அளவை அதிகாரிகளை தமது முகாமிற்குள் அழைத்துச் சென்றனர்.

யுத்தம் காரணமாக சொந்த இடங்களை விட்டு இடம் பெயர்ந்த தமிழ் மக்கள் வாழ்விடங்களையிழந்து அலைந்து திரியும் போது அவர்களின் காணிகளில் இராணுவத்தினர் படைமுகாம்களை அமைத்தும், ஆடம்பர மாளிகைளை அமைத்தும் ஹோட்டல்கள் அமைத்தும் மக்கள் மத்தியில் நீங்காத எதிர்ப்பையும் பகையுணர்வையும் வளர்த்து வருகின்றனர்.

எனவே, மேற்படி விடயத்தில் அதி காரிகள் அதிக கவனம் செலுத்தி மக்களின் பிரச்சினைகளை தீர்த்து வைக்க உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென மாகாண சபை உறுப்பினர் சுகிர்தன் மேலும் தெரிவித்தார். (2-6-24)

# சுகவாழ்வு சுபீட்சம் தரும் கண்காட்சி

(பொற்பதி)

வடமராட்சிக் கிழக்கு வத்திராயன் காவேரி கலாமன்றத்தின் ஏற்பாட்டில் எஸ்.டி.சி.நிறுவனத்தின் அனுசரணையில் வத்திராயன் வாழ் மக்களால் நடத்தப்படும் சுகவாழ்வு சுபீட்சம் தரும் என்ற தொனிப் பொருளிலான கண்காட்சி இன்று வியாழக் கிழமை பிற்பகல் 4.30 மணி தொடக்கம் பிற்பகல் 7.30 மணி வரை வத்திராயன் கடற்கரை திடலில் வத்திராயன் கிராம அலுவலர் அ.விமலேசன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந் நிகழ்விற்கு பிரதம விருந்தினராக வடமராட்சி கிழக்கு பிரதேச செயலக திட்டமிடல் பணிப்பாளர் க.ரேணுகா கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார்.

சிறப்பு விருந்தினராக வடமராட்சி கிழக்கு மருதங்கேணி பிரதேச வைத்தியசாலை வைத்திய அதிகாரி ஜெனார்த்தனன் மற்றும் கௌரவ விருந்தினராக வடமராட்சி கிழக்கு பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர் ரி.கார்த்திகேயன் ஆகியோரும் கலந்து கொண்டுசிறப்பிக்கவுள்ளனர். (2-64)

# நிரந்தர வைத்திய அதிகாரி நியமனம்

வடமராட்சி கிழக்கு மருதங்கேணி பிரதேச வைத்தியசாலைக்கு தற்போது நிரந்தர பொறுப்பு வைத்திய அதிகாரியாகவைத்தியகலாநிதிஜெனார்த்தனன் நியமிக்கப்பட்டுள்ளார்.

குறித்த வைத்தியசாலையானது யுத்தத்தின் பின்னர் மீள ஆரம்பிக்கப்பட்டு இதுவரைக்கும்நிரந்தரவைத்திய அதிகாரி நியமிக்கப்படவில்லை.

இந்நிலையில் தற்போது குறித்த வைத்திய அதிகாரி நிரந்தர நியமனம் பெற்றமை குறிப்பிடத்தக்கது. (2-64)



வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறியுடன் இலங்கைக்கான அவுஸ்திரேலிய தூதுவர் திருமதி.ரொபின்மூடி தலைமையிலான குழுவினரும் உகண்டா வெளிவிவகார அமைச்சர் ஹென்றி துர்யென் ஒக்செலோவுடன் வந்த குழுவினரும் நேற்றைய தினம் வடமாகாண பணிமனையில் சந்திப்பொன்றை மேற்கொண்டனர். இதில் வடமாகாணத்தில் முன்னெடுக்கப்படும் அபிவிருத்தி தொடர்பாக கலந்துரையாடிய போது... (படங்கள்:-என்.குமார்)

# குற்றச்சாட்டை ஒப்புக்கொண்ட பெண்ணுக்கு நீதிமன்றம் அபராதம்

(சாவகச்சேரி)

கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட பெண்ணொருவருக்கு 50 ஆயிரம் ரூபா அபராதமும் 6 மாத கால சமூக சேவைப் பணிக்கும் சாவகச்சேரி நீதிமன்றநீதவானால் உத்தரவிடப்பட்டது.

இதில் சாவகச்சேரி கெருடாவிலில் வசிக்கும் பெண்ணுக்கே இவ்வாறு அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது, குறித்த பெண் தனது வீட்டின் சமயலறையில் நீண்ட நாட்களாக கசிப்பு உற்பத்தி செய்யும் பணியில் ஈடுபட்டு வந்துள்ளார்.

இது தொடர்பாக சாவகச்சேரி பொலிஸ் பிரிவுக்கு இரகசிய தகவல் கிடைத்தமையையடுத்து குறித்த பெண் கடந்த 14 ஆம் திகதி கைது செய்யப்பட்டதுடன் கசிப்பு உற்பத்திக்கு பயன்படுத்தப்பட்ட பொருட்களும் கைப்பற்றப்பட்டன.

அன்றைய தினமே சாவகச்சேரி நீதிமன்றத்தில் நீதவான் ஸ்ரீநிதி நந்தசேகரம் முன்னிலையில் ஆஜர் படுத்தப்பட்ட போது வழக்கினை விசாரித்த நீதிபதி 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

விளக்கமறியல் நேற்று முன் தினம் முடிவுற்ற நிலையில் மீண்டும் விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

இதன்போது குறித்த பெண் குற்றத்தை ஒப்புக் கொண்டதையடுத்து மேற்குறித்த அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. (2-29)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிராம அபி. சங்கங்களை அபிவிருத்தி செய்யுங்கள்

## அமைச்சர் டெனீஸ்வரன் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

பல கிராமங்களினதும் அக்கிராம மக்களினதும் முன்னேற்றத்துக்கு காரணமாக அமைவது கிராம அபிவிருத்திச் சங்கங்களும் மாதர் அபிவிருத்திச் சங்கங்களும் தான். கடந்த காலங்களிலே கிராம அபிவிருத்தியின் பல திட்டங்கள் இச்சங்கங்களூடாகவே முன்னெடுக்கப்பட்டிருந்தன. இருப்பினும் வட மாகாணத்தில் உள்ள மாவட்டங்களில் பல கிராம அபிவிருத்தி சங்கங்கள் இயங்காது இருப்பதும் பல கிராம அபிவிருத்திச் சங்கங்களில் நிதி மோசடி ஏற்பட்டிருப்பதாகவும் எமக்கு தகவல்கள் கிடைத்துள்ளன. இவ்வாறான சங்கங்கள் மீது கடும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என வடமாகாண கிராம அபிவிருத்தி அமைச்சர் பா.டெனீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை மன்னார் இலுப்பக்கடவையில் இடம்பெற்ற கிராம அபிவிருத்திச் சங்க கூட்டத்திலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார். மக்கள் அனைவரையும் ஒன்றிணைத்து அவர்களின் தேவைகளை நிறைவேற்றவென மக்களினால் தெரிவு செய்யப்படும் பிரதிநிதிகளை கொண்ட ஒரு அமைப்பே கிராம அபிவிருத்திச் சங்கமாகும். இது மக்களின் ஒருமித்த கருத்தாக அமைய வேண்டும். இதில் எந்த பாகுபாடும் இருக்கக் கூடாது அனைத்து மக்களும் பங்காளிகளாக இருக்க வேண்டும் .அவ்வாறு செயற்படுவதன் ஊடாகவே அடைய வேண்டிய இலக்கை அடைய முடியும் எனவும் அவர் தெரிவித்தார்.அத்துடன் வடமாகா ணத்திலுள்ள அனைத்து கிராம அபிவிருத்திச் சங்கங்களினதும் கணக்குகளை சீர்செய்யவும், இயங்காது இருக்கும் கிராம அபிவிருத்திச் சங்கங்களை புனரமைப்பு செய்யவும் உரிய உத்தியோகத்தர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டதுடன். இது தொடர்பான முறைப்பாடுகளை பொதுமக்கள் 0755 451485 என்ற புதிய இலக்கத்துக்கு முறையிடலாம் என்றும் தெரிவித்தார். (2-6)


**வாழ்க்கையில் வெறுப்பா?**

பிரச்சினை எதுவானாலும், எம்முடன் தொலைபேசியில் அல்லது நேரில் பேசுங்கள். இரகசியங்களைப் பேணுவோம்.

காலை 9.00-பி.ப.1.00

**கைகொடுக்கும் நண்பர்கள்**

104,4ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்.

021 222 8117


# சுஷ்மாவின் பதவிக்கு இலங்கை வரவேற்பு

இந்திய வெளிவிவகார அமைச்சராக சுஷ்மா சுவராஷ் நியமிக்கப்பட்டதை இலங்கை தலைவர்கள் வரவேற்றுள்ளனர்.

சுஷ்மா சுவராஜ் அனைத்து கட்சி உறுப்பினர்களுடன் கடந்த 2012ஆம் ஆண்டு இலங்கை வந்த போது அவருடன் உரையாடியதாகவும் அவர் சர்வதேச உறவுகள் குறித்து பரந்த அறிவு கொண்டவர் எனவும் வெளிவிவகார அமைச்சில் சிறப்பாக செயற்படக் கூடியவர் எனவும் இலங்கை பிரதி வெளிவிவகார அமைச்சர் நியூமல் பெரேரா தெரிவித்துள்ளார்.

சுஷ்மா சுவராஜிடம் நற்குணம், கவரும் தன்மை இருப்பதால் இந்தியாவுக்கு மாத்திரமன்றி தெற்காசிய வலயத்திற்கே சிறந்த கீர்த்தி ஏற்படுத்துவார் என்றார்.

இதேவேளை, இந்திய வெளிவிவகார அமைச்சை கையாள சுஷ்மா சுவராஜ் மிகவும் பொருத்தமானவர் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார். எனினும் இலங்கை வந்தபோது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை பாராளுமன்ற தெரிவுக் குழுவில் பங்கேற்குமாறு சுஷ்மா சுவராஜ் கோரியதால் அவருக்கு ஒரு குழு எதிர்ப்பு தெரிவித்தது.

எனினும் அது குறித்து த.தே.கூ. தரப்பில் சுஷ்மா சுவராஜ்க்கு விளக்கமளிக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

சுஷ்மா சுவராஜின் நியமனம் நம்பிக்கை அளிக்கக்கூடிய வகையில் இருப்பதாக சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

இலங்கை தொடர்பான அனுபவம் சுஷ்மா சுவராஜ்க்கு இருப்பதாகவும் இலங்கை - இந்திய உறவில் சாதக நிலையை ஏற்படுத்த அவரால் முடியும் என்றார்.

சுஷ்மா சுவராஜின் நியமனம் சிறந்த நடவடிக்கை எனவும் அவர் மூலம் இந்திய வெளியுறவுக் கொள்கையில் மாற்றம் ஏற்பட்டு இலங்கை இனப்பிரச்சினைக்கு சாதகமான முடிவு கிடைக்கும் என ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ஆர்.யோகராஜன் தெரிவித்துள்ளார்.

இலங்கை விஜயத்தின் போது சுஷ்மா சுவராஜ் இலங்கை தலைவர்களுடன் நல்ல தொடர்பை பேணியதாக ஜாதிக ஹெல உறுமய பாராளுமன்ற உறுப்பினர் அத்துரலிய ரத்ன தேரர் தெரிவித்துள்ளார். (2)

# விசேட பொலிஸ் பிரிவை ராவணாபலய முற்றுகை

மத விவகாரங்கள் தொடர்பில் விசாரணை நடத்த உருவாக்கப்பட்டுள்ள விசேட பொலிஸ் பிரிவு அமைந்துள்ள கட்டடத்தில் ராவணா பலய அமைப்பினர் முகாமிட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த விசேட பொலிஸ் பிரிவு மத அலுவல்கள் மற்றும் புத்தசாசன அமைச்சு அமைந்துள்ள கட்டடத்தில் உள்ளது.

மத விவகாரங்கள் தொடர்பில் விசாரணை நடத்த உருவாக்கப்பட்டுள்ள விசேட பொலிஸ் பிரிவை கலைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாத காரணத்தால் முற்றுகை முன்னெடுக்கப்பட்டுள்ளதாக ராவணாபலய அமைப்பின் செயலாளர் இத்தேகந்தே சத்தாதிஸ்ஸ தேரர் தெரிவித்துள்ளார்.

மத விவகாரங்கள் தொடர்பில் விசாரணை நடத்த உருவாக்கப்பட்டுள்ள விசேட பொலிஸ் பிரிவு காரணமாக இலங்கை தொடர்பில் சர்வதேசத்திற்கு தவறான தகவல் வழங்கப்படுவதாக ராவணா பலய அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

வெசாக் போயா தினத்தின் பின்னர் குறித்த பொலிஸ் பிரிவு கலைக்கப்படாவிட்டால் பிரிவு அமைந்துள்ள அலுவலகம் முற்றுகையிடப்படும் என ராவணா பலய அமைப்பினர் முன்னதாக அறிவித்திருந்த நிலையில் நேற்றைய தினம் அதனை செயற்படுத்தியுள்ளனர்.

எச்சரிக்கை விடுக்கும் வகையில் தான் உள்ளிட்ட பிக்குகள் படுக்கை, தலையணை, விரிப்பு சகிதம் மத அலுவல்கள் மற்றும் புத்த சாசன அமைச்சு அமைந்துள்ள கட்டடத்தில் முகாமிட்டுள்ளதாக இத்தேகந்தே சத்தா திஸ்ஸ தேரர் தெரிவித்தார். குறித்த பொலிஸ் பிரிவு அகற்றப்படும் வரை வெளியில் செல்லப் போவதில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார். (2)


**றியல் எஸ்ரேற்**

**முகவர்களை இணைக்கும் விசேட திட்டம்**

வடமாகாணத்தில் தனியொரு நிறுவனமாக...

உங்களுக்குத் தேவையான காணி, வீடுகளை வாங்கித்தரவும் உங்கள் காணி, வீடுகளை விற்றுத்தரவும் அங்கீகாரம் பெற்ற ஒரே நிறுவனம்

காணி, வீடுகளை விற்றும் வாங்கியும் கொடுக்கும் பணியில் ஈடுபட்டுள்ளவர்கள் இந்நிறுவனத்துடன் தங்களை இணைத்துக்கொண்டு, தங்கள் பணியைச் சுலபமாக்கிக் கொள்ளலாம்.

றியல் எஸ்ரேற்றில் உங்களை இணைத்து விற்பனையை விரைவாக்க

உங்கள் முழு விபரம் அடங்கிய விண்ணப்பங்களை (தொலைபேசி இலக்கத்துடன்)கீழ்வரும் முகவரிக்கு விண்ணப்பியுங்கள்.

விளம்பர இல:- 1000
மே.பா: வலம்புரி
இல.3, 2ஆம் ஒழுங்கை, பிறவுண்வீதி,
யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு
அனுப்பி வைக்கவும்.

(சி-6356)



**கல்யாண மாலை**

**இவர்களுக்கு மணமகள் தேவை**

பிறப்பு: 1979 இந்து
நட்சத்திரம்: திருவோணம் 1
கி.பா: 55 செவ் 12 இல்
உயரம்: 5'2"
தகைமை/தொழில்: A/L / சொந்த வியாபாரம்
தொ.இ: B/1409

பிறப்பு: 1977 இந்து
நட்சத்திரம்: ரோகினி 3
கி.பா: 15.5 செவ் 8 இல்
உயரம்: 5'5"
தகைமை/தொழில்: O/L / UK - Citizen
தொ.இ: B/1410

பிறப்பு: 1976 இந்து
நட்சத்திரம்: உத்தராடம் 1
கி.பா: 35.25
தகைமை/தொழில்: A/L / (கொங்கொங் - Work Permit)
தொ.இ: B/1413

பிறப்பு: 1985 இந்து
நட்சத்திரம்: பூரம் 2
கி.பா: 18 செவ் 2 இல்
உயரம்: 5'3"
தகைமை/தொழில்: A/L, BSc – Part II / e-Database Administrator
தொ.இ: B/1415

**இவர்களுக்கு மணமகன் தேவை**

பிறப்பு: 1982 இந்து
நட்சத்திரம்: விசாகம் 1
கி.பா: 13.75 செவ் 4 இல்
உயரம்: 5'3"
தகைமை/தொழில்: BSc Maths / Programme Assistant-
தொ.இ: G/2027

பிறப்பு: 1978 இந்து
நட்சத்திரம்: பூரம் 3
கி.பா: 62 சூரி செவ் 1 இல்
உயரம்: 5'
தகைமை/தொழில்: A/L (பிரான்ஸ்)
எதிர்பார்ப்பு: PR உள்ள வரன்
தொ.இ: G/2031

பிறப்பு: 1983 இந்து
நட்சத்திரம்: ரேவதி
கி.பா: 34.5 செவ் 7 இல்
உயரம்: 5'1"
தகைமை/தொழில்: A/L / அரச உத்தியோகம்
தொ.இ: G/2032

பிறப்பு: 1975 இந்து
நட்சத்திரம்: உத்தராடம் 1
கி.பா: 33.75 செவ் 12 இல்
உயரம்: 5'2"
தகைமை/தொழில்: A/L / பயிற்றப்பட்ட ஆசிரியர்
தொ.இ: G/2034

**கல்யாண மாலை**
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாடு கடத்தப்பட்ட மூவரின் பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டும்

## மனிதவுரிமை கண்காணிப்பகம் தெரிவிப்பு

(கொழும்பு)

மலேசியாவிலிருந்து இலங்கைக்கு நாடு கடத்தப்பட்ட புகலிடக் கோரிக்கையாளர்களின் பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டுமென் மனிதவுரிமை கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது. மலேசியாவிலிருந்து அண்மையில் மூன்று இலங்கையர்கள் நாடு கடத்தப்பட்டிருந்தனர்.

இவர்கள் தமிழீழ விடுதலைப் புலிகளின் சிரேஷ்ட உறுப்பினர்கள் என இலங்கை அரசாங்கம் குற்றம் சுமத்தியுள்ளது.எவ்வாறெனினும், நாடு கடத்தப்பட்ட புகலிடக் கோரிக்கையாளர்கள் சர்வதேச சட்டங்களின் அடிப்படையில் நடத்தப்பட வேண்டும் எனவும், துன்புறுத்தப்படக் கூடாது எனவும் மனித உரிமை கண்காணிப்பகம் கோரியுள்ளது.

நாடு கடத்தப்பட்ட இருவருக்கு ஐக்கிய நாடுகள் அகதிகளுக்கான முகவர் நிறுவனம் அகதி அந்தஸ்து வழங்கியுள்ளதுடன் ஏனைய நபருக்கு அகதி அந்தஸ்து வழங்குவது தொடர்பிலான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வந்த தருணத்தில் இவர்கள் கைது செய்யப்பட்டு நாடு கடத்தப்பட்டுள்ளனர். பலவந்தமான அடிப்படையில் மலேசியா குறித்த இலங்கையர்களை நாடு கடத்தியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நாடு கடத்தப்பட்டவர்களை இலங்கை அரசாங்கம் எவ்வாறு நடத்தும் என்பது குறித்து சர்வதேச சமூகம் கண்காணித்து வருவதாக மனித உரிமை கண்காணிப்பகத்தின் ஆசிய பிராந்திய வலய பிரதிப் பணிப்பாளர் பில் ரொபர்சன் தெரிவித்துள்ளார்.

புகலிடக் கோரிக்கையாளர்கள் துன்புறுத்தப்படுவதனை தடுத்து நிறுத்த மலேசியா நடவடிக்கை எடுக்க வேண்டுமென அவர் குறிப்பிட்டுள்ளார்.

மலேசியா பலவந்தமாக நாடு கடத்தியதனை சாதகமாக பயன்படுத்தி புகலிடக் கோரிக்கையாளர்கள் துன்புறுத்தப்படக் கூடாது என அவர் வலியுறுத்தியுள்ளார்.

மலேசிய அரசாங்கம் சர்வதேச புகலிடக் கோரிக்கையாளர் சட்டங்களுக்கு மதிப்பளிப்பதனை விடவும், இலங்கையுடனான இராஜதந்திர உறவுகளை வலுப்படுத்திக் கொள்வதில் கூடுதல் நாட்டம் காட்டி வருவதாக அவர் குற்றம் சுமத்தியுள்ளார். (2)

# சட்டவிரோதமாக கொண்டுவரப்பட்ட அரியவகை உயிரினங்கள் மீட்பு

(கொழும்பு)

தாய்லாந்திலிருந்து சட்டவிரோதமான முறையில் கொண்டு வரப்பட்ட பறவைகள் உள்ளிட்ட சில அரிய உயிரினங்களை சுங்கப் பிரிவினர் கைப்பற்றியுள்ளனர்.

ஓணான்கள், முயல்கள், லவ்வேர்ட்ஸ் பறவைகள், புறாக்கள் மற்றும் இனம் காணப்படாத பறவைகள் என்பன இவற்றுள் அடங்கும்.

சுமார் 26 விலங்கினங்கள் சட்டவிரோதமான முறையில் நாட்டுக்குள் கொண்டு வர முயற்சிக்கப்பட்டுள்ளது.

சட்டவிரோதமான முறையில் மிருகங்களையும் பறவைகளையும் நாட்டுக்குள் கொண்டு வர முயற்சித்தவர் நீர்கொழும்பைச் சேர்ந்த பெண் எனத் தெரிவிக்கப்படுகிறது.

குறித்த பெண், கட்டுநாயக்க விமான நிலையத்தின் ஊடாக விலங்குகளையும் பறவைகளையும் கடத்த முயற்சித்துள்ளார். (2)




நெல்லியடி லயன்ஸ் கழகத்திற்கு உத்தியோக பூர்வ விஜயத்தை மேற்கொண்ட சர்வதேச லயன்ஸ் கழக 306 பி 1 இன் மாவட்ட ஆளுநர் ரஞ்சித்பெர்னாண்டோ மாணவி ஒருவருக்கு கற்றல் உபகரணங்கள்வழங்குவதை படத்தில் காணலாம். (படம்:-தும்பளை செய்தியாளர்)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்


| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 100 | 100 | 110 | 120 |
| உருளைக்கிழங்கு | 90 | 100 | 90 | 90 |
| பச்சைமிளகாய் | 240 | 180 | 130 | 200 |
| தக்காளி | 160 | 150 | 100 | 140 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 40 | 40 | 40 |
| கோவா | 100 | 120 | 90 | 100 |
| கரட் | 120 | 120 | 130 | 140 |
| பூசணி | 70 | 80 | 70 | 60 |
| புடோல் | 70 | 60 | 80 | 80 |
| வாழைக்காய் | 30 | 40 | 45 | 40 |
| சின்ன வெங்காயம் | 120 | 90 | 130 | 120 |
| பெரிய வெங்காயம் | 90 | 90 | 100 | 90 |
| பாகற்காய் | 160 | 180 | 140 | 120 |
| வெண்டிக்காய் | 70 | 80 | 80 | 80 |
| கருணைக் கிழங்கு | 40 | 40 | 50 | 80 |
| பயற்றங்காய் | 40 | 100 | 100 | 50 |
| லீக்ஸ் | 80 | 80 | 100 | 80 |
| பீற்றூட் | 60 | 90 | 80 | 120 |
| கறிமிளகாய் | 120 | 130 | 110 | 160 |
| முருங்கைக்காய் | 50-80 | 120 | 100 | 100 |
| போஞ்சி | 240 | 160 | 160 | 200 |
| கத்தரிதம்புள்ள | 80 | 80 | — | 100 |
| கீரை - 1 பிடி | 10 | 30 | 20 | 20 |
| தேசிக்காய் | 70-120 | 130 | 120 | 120 |
| தேங்காய் (ஒன்று) | 15-45 | 30 | 35 | 25-30 |
| இராசவள்ளி | 90 | 120 | — | 100 |

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 28

### இந்துமதி ராஜ்குமார்




### சத்தியா ஆனந்



### அபி ரேகா

கண்ணாடிதான் எனது சிறந்த நண்பன் ஏனெனில் நான் அழும்போது அது ஒருபோதும் சிரித்ததில்லை

-சார்லி சாப்ளின்

### பூரணி ஜெயக்கோடி


வாழ வேண்டும் என்று நினைப்பவனுக்கு எந்த விமர்சனத்தையும் தூக்கி எறியும் தைரியம் வர வேண்டும்.

### சுலக்ஷன் ரதன்



### கனித் ரஞ்சன்

ஒரு ரீச்சராலேயே ஒரு சப்ஜெக்டுக்கு மேல நடத்த முடியல...



அப்போ நாங்க மட்டும் எப்படி எல்லா சப்ஜெக்டையும் படிக்க முடியும்...

நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valam.puri.16 எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பால்மா விலையை குறைக்க அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும்

**தலதா அத்துகோரல எம்.பி.கோரிக்கை**

பால்மா விலையை குறைப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் தலதா அத்துகோரல தெரிவித்துள்ளார்.

சிங்கள ஊடகமொன்றுக்கு அளித்த நேர்காணலில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். அவர் தொடர்ந்து கூறுகையில்,

உலக சந்தையில் பால்மாவின் விலை வெகுவாக வீழ்ச்சியடைந்துள்ளது. ஒரு மெற்றிக் தொன் பால்மா 450 டொலர்களுக்கும் குறைவாகவே விற்பனை செய்யப்படுகின்றது.

இவ்வாண்டின் ஆரம்பத்தில் ஒரு மெற்றிக் தொன் பால்மாவின் விலை 5 ஆயிரத்து 200 டொலர்கள் வரையில் உயர்வடைந்திருந்தது. இதன் காரணமாக அரசாங்கம் பால்மாவின் விலைய்ய வெகுவாக உயர்த்தியிருந்தது.

எனினும், உலக சந்தையில் பால் விலை குறைவடைந்துள்ள போதிலும் இலங்கையில் பால்மாவின் விலை வெகுவாக அதிகரித்துள்ளது. கூட்டமைப்பு அரசாங்கம் கறுப்புச் சந்தை வியாபாரத்தில் ஈடுபட்டு வருவ்தாக அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

இதேவேளை, தற்போது கையிருப்பில் உள்ள பால்மா பழைய விலையின் கீழ் கொள்வனவு செய்யப்பட்டவை எனவும் இதனால் விலையை குறைக்க முடியாது எனவும் உயர் கல்வி பிரதி அமைச்சர் நந்திமித்ர ஏக்கநாயக்க தெரிவித்துள்ளார். (2)

# சீனாவிடமிருந்து இலங்கை கப்பல்கள் கொள்வனவு

இலங்கை அரசாங்கம் சீனாவிடமிருந்து கப்பல்களை கொள்வனவு செய்யவுள்ளது. வழமை போன்று சீனாவிடமிருந்து கடன் பெற்றுக்கொண்டு இந்தக் கப்பல்கள் கொள்வனவு செய்யப்படவுள்ளன. இரண்டு சரக்குக் கப்பல்களை இலங்கை அரசாங்கம் சீனாவிடமிருந்து கொள்வனவு செய்யவுள்ளது.

கடற்படைத் தளபதியும், கப்பற் கூட்டத்தாபனத்தின் தலைவருமான வைஸ் அட்மிரல் ஜயனாத் கொலம்பகே மற்றும் மக்கள் வங்கியின் பொதுமுகாமையாளர் வசந்தகுமார் ஆகியோர் கப்பல் கொள்வனவு குறித்த உடன்படிக்கையில் கைச்சாத்திட்டனர். இந்நிகழ்வு நேற்றுமுன்தினம் கொழும்பில் நடைபெற்றுள்ளது.

எதிர்வரும் 2015 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதத்தில் ஒரு கப்பலும் 2016ஆம் ஆண்டு ஜனவரி மாதம் மற்றைய கப்பலும் கொள்வனவு செய்யப்படவுள்ளன. பாரியளவில் சரக்குகளை இந்தக் கப்பல்களின் மூலம் கடத்த முடியும் எனத் தெரிவிக்கப்படுகிறது. (2)

# புலி உறுப்பினர்களுக்கு ஐ.நா.அகதி அந்தஸ்து

## விசாரணை ஆரம்பம்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளின் சிரேஷ்ட உறுப்பினர்களுக்கு எவ்வாறு ஐக்கிய நாடுகள் அமைப்பின் அகதி அந்தஸ்து வழங்கப்பட்டது என்பது குறித்து விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.மலேசிய பயங்கரவாத தடுப்புப் பிரிவினரும் இலங்கை புலனாய்வுப் பிரிவினரும் கூட்டாக இணைந்து இந்த விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் வான்படைப் பிரிவின் இரண்டாம் தலைவர் குஷான்தன் மற்றும் புலனாய்வுப் பிரிவின் நான்காம் தலைவர் அன்தராஜன் ஆகியோருக்கு ஐக்கிய நாடுகள் அகதிகளுக்கான உயர்ஸ்தானிகராலயம் எவ்வாறு அகதி அந்தஸ்து வழ்ங்கியது என்பது குறித்து விசாரணை நடத்தப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. குறித்த இருவருக்கும் ஐக்கிய நாடுகள் அகதிகளுக்கான அகதி அடையாள அட்டை உயர்ஸ்தானிகராலயத்தால் வழங்கப்பட்டுள்ளது.

குஷான்தனின் கடவுச் சீட்டும் மீட்கப்பட்டுள்ளது. சர்வதேச பொலிஸாரினால் தேடப்பட்டு வரும் குஷான்தன், தான் ஓர் சாதாரண பிரஜை எனத் தெரிவித்துள்ளார்.

கைது செய்யப்பட்டு இலங்கைக்கு நாடு கடத்தப்பட்ட புலி உறுப்பினர்களுக்கு, மலேசிய பிரிவினைவாதத்தலைவர் ஒருவர் ஒத்துழைப்பு வழங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

புலி உறுப்பினர்கள் கைது செய்யப்பட்டமையினால் புலம் பெயர் புலி ஆதரவாளர்கள் அதிர்ச்சியடைந்துள்ளதாக சிங்களப் பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டுள்ளது. (2)

# சிறப்புப்பூசை

இந்துசமயப் பேரவையும் இலங்கை-இந்திய இந்து மக்கள் நட்புறவுக் கழகமும் இணைந்து நடத்தும் பாரதப் பிரதமர் ஸ்ரீமத் நரேந்திர மோடியை வாழ்த்தி நடைபெறும் சிறப்புப் பூசையானது எதிர்வரும் ஜூன் மாதம் முதலாம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு இந்துசமயப் பேரவை வளாக ஸ்ரீ சிவகாமி சுந்தரி சமேத ஸ்ரீநடராஜப் பெருமான் ஆலயத்தில் நடைபெறும்.

மேலும் இந்நிகழ்வில் இலங்கை மக்களுக்கு அமைதி வேண்டியும் இலங்கை- இந்திய நாடுகளிடையே பரஸ்பர உறவை மேம்படுத்த வேண்டியும் இச்சிறப்புப் பூசை நிகழ்வு நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்து பெருமக்கள் அனைவரையும் இந்நிகழ்வில் கலந்து சிறப்பிக்குமாறு விழா ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர். (2)

**வலம்புரி விளம்பர தொடர்புகளுக்கு:**
**021 321 0815, 021 567 1532**

# மரண அறிவித்தல்

## செல்வநாயகம் ரவீந்திரன் (ரவி)



மாதகலை பிறப்பிடமாகவும் நிற்சாமம் சங்கானையை வசிப்பிடமாகவும் கொண்ட செல்வநாயகம் ரவீந்திரன் (யாழ். போதனா வைத்திய சாலை இரத்த வங்கி உதவி யாளர்) அவர்கள் 25.05.2014 அன்று அகால மரண மாகி விட்டார். இவரின் இறுதி நிகழ்வு (29.05.2014) இன்று 11.00 மணியளவில் நடை பெற்று விளாவெளி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல் லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

நிற்சாமம்,
சங்கானை (6502)

தகவல்:
குடும்பத்தினர்.

# அறிவித்தல்

**கொடிகாமம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வ-து)**

**கிளைக்குழுத் தெரிவு-31.05.2014 சனிக்கிழமை**

யாழ்ப்பாணம் மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் குமாரசிங்கம் அருந்தவநாதன் ஆகிய நான், 1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் (இடைநேர் விளைவுகள் ஏற்பாடுகள்) சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் 1983 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்தச்) சட்டத்தினாலும் 1992 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்கக் கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்தச்) சட்டத்தினாலும் திருத்தம் செய்யப்பட்ட 1972 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் வடக்கு மாகாண ஆளுநரினால் வெளியிடப்பட்ட 08.04.2009 ஆம் திகதிய 1596/17 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி மூலம் எனக்கு உரித்தாக்கப்பட்ட அதிகாரங்களுக்கு அமைவாகவும் கொடிகாமம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் உப விதியின் பிரிவு 22 (2) இற்கமைவாக என்னால் உருவாக்கப்பட்டு 10.07.2010 ஆம் திகதி வெளியிடப்பட்ட ***"பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கிளைக் குழுவினை தெரிவு செய்தல்"*** என்ற ஒழுங்கு விதிகளின் பந்தி 9 இற்கமைய கீழ் குறிப்பிடப்படும் அட்டவணைப்படி நடைபெறும் என சங்கத்தின் எல்லா உறுப்பினர்களுக்கும் இத்தால் அறிவிக்கின்றேன்.

*01. கிளைப் பொதுச் சபைக் கூட்டம் ஆரம்பம்- 31.05.2014 சனிக்கிழமை மு.ப. 10.00 மணிக்கு*
*02. கூட்டம் நடைபெறும் இடங்களின் விபரங்கள் வருமாறு,*

| தொ. இல. | கிளை இல. | கிளைப் பெயர் | கூட்டம் நடைபெறும் இடம் | தவிசாளர் பெயர் |
|---|---|---|---|---|
| 01 | 207,219 | மந்துவில், இயற்றாலை | மந்துவில் பாலர் பகல் பராமரிப்பு நிலையம். | திரு. க.பிரதீபன் |
| 02 | 208,209 | கச்சாய், அல்லாரை | வெள்ளாம் போக்கட்டி பாலர் பாடசாலை | திரு. க.சசிகரன் |
| 03 | 210பி,210சி | கொடிகாமம்- பி, கொடிகாமம்-சி | தலைமைக் காரியாலயம், கொடிகாமம் | திரு. ச.சசீந்திரன் |
| 04 | 211,211சி | தவசிகுளம், பாலாவி | கொடிகாமம் தெற்கு பாலர் பகல் பராமரிப்பு நிலையம் | திரு தா. தவமன்னன் |
| 05 | 212 | உசன் | கொடிகாமம் தெற்கு பாலர் பகல் பராமரிப்பு நிலையம் | திரு.பொ.மகேஸ்வரன் |
| 06 | 213,215 216 | மிருசுவில், எழுதுதரவை எழுதுமட்டுவாள் | வடமிருசுவில் வன்னியர் பாலர் பாடசாலை | திரு. அ.தயாளன் |
| 07 | 214 | வடக்கு மிருசுவில் | வடமிருசுவில் வன்னியர் பாலர் பாடசாலை | திரு.க.பாலகிருஷ்ணன் |
| 08 | 217,221 | நாவற்காடு, தனிவளை | நாவற்காடு பாலர் பாடசாலை | திரு.பொ.கோகுலன் |
| 09 | 218,223 | இடைக்குறிச்சி, முத்தட்டு | கரம்பைக்குறிச்சி பாலர் பாடசாலை | திரு. இ.புவன்ராஜ் |
| 10 | 220,222 | வடவரணி, கறுக்காய் | வடவரணி முன்பள்ளி | திரு.வ.விபுலன் |
| 11 | 224 | குமுக்களை | வரணி மத்தி சனசமூக நிலையம். | திரு.பா. சிவபாலன் |

*முக்கிய கவனத்திற்கு:- கிளைக்குழு தெரிவுக்கான தகுதி, தகுதியீனங்களை ஏற்கனவே சங்க காரியாலயத்திலும் சங்க கிளைகளிலும் விளம்பரப்படுத்தப்பட்ட விளம்பர அறிவித்தலில் பார்வையிடலாம்.*

கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர், அலுவலகம்,
[illegible] வீதி,
யாழ்ப்பாணம். (சி-7487)

ஒப்பம்
கு. அருந்தவநாதன்,
கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# தீனாவின் தீபாவளி!



தீனா. சமீப காலமாக வீட்டில் தங்குவதே இல்லை. இதனால், அம்மாவுக்கு ரொம்பக் கவலை.

தீனாவின் அப்பாவுக்கு, ஊர் ஊராகச் செல்லும் விற்பனை பிரதிநிதி வேலை. விடிந்தால் தீபாவளி.

அவர் எப்போது வேண்டுமானாலும் வீட்டுக்கு வந்துவிடுவார். அவர் வரும் நேரம் வீட்டில் தீனா இல்லை என்றால்... நினைத்தாலே பதறியது அம்மாவுக்கு.

ஞாயிற்றுக்கிழமைகளில் அம்மாவுக்கு டேக்கா கொடுத்துவிட்டுக் காணாமற்போவான்.

பிறகு. வெகுநேரம் கழித்து வருவான்: "எங்கே போனாய்?" என்று கேட்டால், ஏதாவது சொல்லிச் சமாளிப்பான்.

அம்மாவுக்கு ஆத்திரமும் அழுகையும் அதிகமானபோது, வாசல் பக்கம் சத்தம். தீனாவின் அப்பா வந்துவிட்டார். விடயம் அறிந்து அதிர்ச்சியடைந்தார்.

"வேலைப் பளுவில் மகனைக் கோட்டைவிட்டோமே...? என்று வேதனைப்பட்டார்.

இருவரும் மகனைத் தேடிப் புறப்பட்டனர்.

எவ்வளவு நேரம் தேடியும் தீனா தென்படவில்லை. மற்ற பையன்கள் விளையாடும் இடங்களில் தீனா இல்லை.

அப்படியென்றால், எங்கேதான் போகிறான்? அவன் படிக்கும் பள்ளிக்கூடத்துக்குச் சென்று விசாரிப்பது என முடிவுசெய்தார்கள்.

அங்கே, மாணவர்கள் யாரும் இல்லை. விளையாட்டு ஆசிரியர் வீட்டுக்குக் கிளம்பிக்கொண்டிருந்தார். "இப்பெல்லாம் பசங்க முன்ன மாதிரி இல்லை. வீட்டுக்குத் தெரியாம சினிமாவுக்குப் போயிருக்கலாம்"" என்று சொல்லி, அவர்களை மேலும் கலவரப்படுத்தினார்.

பிறகு அவரும் தேட வந்தது, அவர்களுக்கு ஆறுதலாக இருந்தது. ஒரு தெருவில் தீனாவைப் பார்த்துவிட்டார்கள். "அவனைக் கண்காணிப்போம். அப்போதுதான் என்ன செய்றான்னு தெரிஞ்சு திருத்தலாம்" என்றார் ஆசிரியர்.

தீனா பார்க்க முடியாத தொலைவில் மறைந்துகொண்டு கவனித்தனர். தீனாவின் கையில் ஒரு மூங்கில் கூடை இருந்தது.

அவன் வீடு வீடாகச் சென்றான்.



ஏதோ சொல்கிறான்... சில வீடுகளில் பலகாரங்களைக் கொடுக்கிறார்கள். சில வீடுகளில் திட்டுவது தெரிந்தது. சிலர் அவனைக் கண்டுகொள்ளவே இல்லை.

ஒரு வீட்டில் நாய் குரைத்து விரட்டியது. அம்மா, தாங்க முடியாமல் அவனிடம் செல்ல எத்தனித்தார்.

"நோ... வெயிட்" என்றார், விளையாட்டு ஆசிரியர். "உங்களுக்கு இந்தக் காலப் பசங்களைத் தெரியாது.

இந்தப் பண்டங்களை டாஸ்மாக் வாசலில் விற்று, அந்தப் பணத்தில் சினிமாவுக்குப் போவாங்க.

பின்னாடியே போய், முழு கேங்கையும் பிடிக்கணும்" என்று மேலும் திகிலை ஏற்படுத்தினார்.

தீனாவைப் பின்தொடர்ந்தார்கள். அவன் பல வீதிகளைக் கடந்து, ஒரு கட்டடத்தினுள் நுழைந்தான்.

அது, பார்வையற்றோர் இல்லம். அம்மா, அப்பா மற்றும் ஆசிரியர் மூவருமாக வாசல் அருகே சென்றனர். "தீனா அண்ணன் வந்துட்டார்" என்று உள்ளிருந்து சத்தம் கேட்டது.

"ரகு, இந்தா பலகாரம். ரஃபீக்... இது உனக்கு. புவனா, இதோ இது உனக்கு" உள்ளிருந்து கேட்ட தீனாவின் குதூகலக் குரல் ஆச்சரியப்படுத்தியது.

இவர்கள் உள்ளே நுழைந்தார்கள். தீனா நின்றிருந்த இடத்துக்கு அருகே, கட்டிலில் ஒரு பாதிரியார் படுத்திருந்தார்.

காலில் மாவுக்கட்டு. தன் பெற்றோரையும் ஆசிரியரையும் அங்கே பார்த்த தீனாவுக்கு பேச்சே வரவில்லை.

"வாங்க, நீங்கதான் தீனாவோட பேரன்ட்ஸா?" பாதிரியார் நிமிர்ந்து படுக்க, தீனா உதவினான்.

"பக்கத்தில் இருக்கும் விளையாட்டு மைதானத்தில் கிரிக்கெட் விளையாட வருவோம்.

ஒருநாள் பந்து இங்கே விழுந்துருச்சு. எடுக்க வந்தேன். அதிலிருந்து பழக்கம்" - தீனா விளக்க முயன்றான்.

"ஞாயிற்றுக்கிழமைகளில் தீனா இங்கே வருவான்.

பார்வையற்ற இந்தக் குழந்தைகளுக்கு உதவி செய்வான், பேப்பர் படிச்சுக்காட்டுவான்" என்ற பாதிரியார் தொடர்ந்தார்.

"பத்து நாள் முன்னாடி, தடுக்கி விழுந்ததில் எனக்கு கால் எலும்பு முறிஞ்சுபோச்சு.

இந்தக் குழந்தைகளுக்கு என்னைத் தவிர யாருமே இல்லை.

தீனாதான் பள்ளி முடிஞ்சு இங்கே வந்து, எனக்கும் குழந்தைகளுக்கும் உதவியா இருக்கான்.

பண்டிகைக்கு எதுவும் செய்ய முடியலை.

தீனா வீடு வீடாகப் போய்... இனிப்பு, பலகாரம் வாங்கி வந்திருக்கான்" என்றவரின் குரல், நன்றியால் தழுதழுத்தது.

"யு ஆர் கிரேட் தீனா. "பசங்க எதைச் செய்தாலும் அது தப்பாகத்தான் இருக்கும்ன்னு நினைச்சது என்னோட பெரிய தப்பு" என்ற ஆசிரியர், தீனாவைத் தட்டிக் கொடுத்தார்.

அப்பா, தீனாவின் தலையைப் பெருமையோடு கோதிவிட்டார். "உங்ககிட்டச் சொல்லாதது தப்புதான்.. ஸாரி" என்ற மகனை, அம்மா தழுவிக்கொண்டார்.

அடுத்த நாள் தீபாவளியை. அவர்கள் அங்கேதான் கொண்டாடினார்கள்.

☆☆☆☆☆☆☆☆☆☆☆

## 05.2014 29 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1453 - ஒட்டோமான் படைகள் கான்ஸ்டான்டினோபில நகரைக் கைப்பற்றி பைசண்டைன் பேரரசை முடிவுக்குக் கொண்டுவந்தனர்.
- 1660 - இரண்டாம் சார்ல்ஸ் பிரித்தானியாவின் மன்னனாக மீண்டும் முடிசூடினான்.
- 1677 - வேர்ஜீனியாவில் குடியேறிகளுக்கும் உள்ளூர் பழங்குடிகளுக்கும் இடையில் அமைதி உடன்பாடு ஏற்பட்டது.
- 1727 - இரண்டாம் பீட்டர் ரஷ்யாவின் மன்னனாக முடிசூடினான்.
- 1790 - ரோட் தீவு ஐக்கிய அமெரிக்காவின் 13வது மாநிலமாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.
- 1848 - விஸ்கொன்சின் ஐக்கிய அமெரிக்காவின் 30ஆவது மாநிலமாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.
- 1864 - மெக்சிக்கோவின் முதலாம் மாக்சிமிலியன் முதற தடவையாக மெக்சிக்கோ வந்து சேர்ந்தான்.
- 1867 - ஆஸ்திரிய-ஹங்கேரிப் பேரரசு அமைக்கப்பட்டது.
- 1869 - பிரித்தானியாவில் பகிரங்க மரணதண்டனை தடை செய்யப்பட்டது.
- 1886 - வேதியியலாளர் ஜோன் பெம்பர்ட்டன் முதற் தடவையாக கொக்கக் கோலாவுக்கான விளம்பரத்தை அட்லாண்டா ஜேர்னல் இதழில் வெளியிட்டார்.
- 1903 - சேர்பியாவின் மன்னன் அலெக்சாண்டர் ஒபரெனோவிச் மற்றும் அராசி திராகா இருவரும் படுகொலை செய்யப்பட்டனர்.
- 1919 - ஐன்ஸ்டீனின் சார்புக் கோட்பாடு சோதிக்கப்பட்டது. பின்னர் இது உறுதிப்படுத்தப்பட்டது.
- 1947 - இந்தியத் தரக்கட்டுப்பாட்டு நிறுவனம் அமைக்கப்பட்டது.
- 1953 - முதற்தடவையாக சேர் எட்மண்ட் ஹில்லறி, ஷேர்ப்பா டென்சிங் இருவரும் எவரெஸ்ட் சிகரத்தை ஏறி சாதனை படைத்தனர்.
- 1982 - இலங்கை மட்டக்களப்பில் சுவாமி விபுலானந்த இசை நடனக் கல்லூரி ஆரம்பிக்கப்பட்டது.
- 1988 - அமெரிக்க ஜனாதிபதி ரொனால்ட் ரேகன் முதற தடவையாக சோவியத் ஒன்றியத்துக்கு விஜயம் செய்தார்.
- 1990 - போரிஸ் யெல்ட்சின் ரஷ்யக் குடியரசின் ஜனாதிபதியானார்.
- 1999 - டிஸ்கவரி விண்ணோடம் பன்னாட்டு விண்வெளி நிலையத்துடனான தனது முதலாவது இணைப்பை வெற்றிகரமாக முடித்தது.
- 1999 - 16 ஆண்டுகள் இராணுவ ஆட்சியின் பின்னர் நைஜீரியாவில் ஜனாதிபதி மக்கள் தெரிவு செய்தனர்.

### பிறப்புகள்


- 1872 - சிவயோக சுவாமி, ஈழத்துச் சித்தர் (இ. 1964)
- 1917 - ஜோன் எஃப். கென்னடி, ஐக்கிய அமெரிக்காவின் 35 ஆவது குடியரசுத் தலைவர் (இ. 1963)
- 1984 - கார்மெலோ ஆந்தனி, அமெரிக்கக் கூடைப் பந்து ஆட்டக்காரர்

### இறப்புகள்

- 1500 - பார்த்தலோமியூ டயஸ், போர்த்துக்கேய நாடு காண் பயணி
- 1987 - சரண் சிங், இந்தியக் குடியரசின் ஏழாவது பிரதமர் (பி. 1902)
- 1994 - எரிக் ஹோனெக்கர், கிழக்கு ஜேர்மனியின் கடைசி ஜனாதிபதி (பி. 1912)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தக் குளத்தில் கல்லெறிந்தவர்கள்



55

...கண்களுக்குள் ஓவியம் தீட்டும் கலா மாளிகை அவர் இல்லம்.

சினிமாவின் சின்னங்களே இல்லாத சித்தன்ன வாசல்.

அதற்கு முழு முதற்காரணம் அவர் துணைவியார் முத்துலட்சுமி அம்மையார்.

நற்குணத்தின் வடிவம் அவர்; நான் வணங்கும் மாதரசி.

அவர்கள் வீட்டுக்குள் வளர்க்கும் செடிகள் கூட ஒரு குழந்தை கண் திறந்தது மாதிரி கலாபூர்வமாக இருக்கும்.

ஏவி.எம். படத்திற்கு இடுகிற மல்லிகைச் சரத்தைக்கூட இடப்புறமும் வலப்புறமும் ஏற்ற இறக்கம் இல்லாதவாறு பார்த்துக் கொள்ளும் உன்னத ரசனை அவர்கள் ரசனை.

ஒருவர் பெறும் பட்டம் ஒரு தலைமுறைக்குத்தான்; ஒருவர் ஈட்டும் செல்வம் இரண்டு தலைமுறைக்குத்தான் என்பார்கள்.

காலமாற்றங்களும் கருத்து மாற்றங்களும் நிகழ்ந்து வரும் காலகட்டத்திலும் தங்கள் நிறுவனத்தை நிமிர்த்தி, நிறுத்திக் கொண்டிருப்பது அவரின் அன்பும் அணுகுமுறையும்தாம்.

சில வாசகங்களுக்கு வரலாறு இருக்கிறது.


சிலருக்கு சில வாசகங்கள் பொறித்துக் கொள்வதற்கும் குறித்துக் கொள்வதற்கும்தாம்.

விநாயக சதுர்த்தி முடிந்ததும் விநாயகரைக் கிணற்றில் வீசி எறிந்து விடுகிற மாதிரி சில வாசகங்கள் எழுதி முடிக்கப்பட்ட உடனேயே இறந்து விடுகின்றன.

ஆனால் "முயற்சி திருவினையாக்கும்" என்ற முத்திரை வாசகம் சரவணன் அவர்களால் அன்றாடம் அர்த்தப்படுத்தப்படுகிறது.

ஒவ்வொன்றிலும் முழுமை காண

## ஏ.வி.எம்.சரவணன்



வேண்டும் என்ற முனைப்பு தெரிகிறது.

அவர்கள் வீட்டுத் திருமண விழாக்களில் விருந்தாளிகள் சாப்பிட்டுக் கொண்டிருந்த அதேநேரத்தில் விருந்தாளிகளின் ஓட்டுநர்களுக்கும் உணவு சேர்ப்பிக்கப்பட்ட போது அவர்களின் சிந்தனையையும் செயலையும் எண்ணிச் சிலிர்த்துப் போனேன்.

ஒரு ஜனவரி முதல் நாளில் அவரும் நானும் விருதுகள் வாங்க விரைந்து கொண்டிருந்தோம்.

எங்கள் காரை இன்னொரு வாகன ஓட்டி இடித்ததுமில்லாமல் எங்களையும் திட்டிக் கொண்டிருந்தான்.

எங்கள் காரை இடித்ததைக் கூட மன்னிக்க முடிந்த என்னால், அவன் எங்களைத் திட்டியதைச் சகித்துக் கொள்ள முடியவில்லை.

அவனை விடவும் கெட்ட வார்த்தை பேசி இறங்கினேன்.

சரவணன் சார் என்னைத் தடுத்தார்.

"நாம் அவனை இடிக்கவில்லை என்று மாத்திரம் எழுதி வாங்கிக் கொள்ளுங்கள்" என்றார்.

விபத்தில்கூடத் தெளிவாய் இருக்கிற அவரது கூர்த்த மதி கண்டு வியந்து போனேன்.

தந்தையைப் பின்பற்றினாலும் சரி அல்லது தலைவனைப் பின்பற்றினாலும் சரி, அவர்களைப் புரிந்து கொண்டு பின்பற்ற வேண்டும்.

சரவண்ன் சார் தன் தந்தையைப் பின்பற்றுகிறார்; அவரின் மதிப்பறிந்து பின்பற்றுகிறார்; அவரை அங்குலம் அங்குலமாய் ஆராய்ந்து பின்பற்றுகிறார். ஒருநாள் அவர் தந்தையைப் பற்றி என்னிடம் சொல்லிக் கொண்டே வந்தவர் திடீரென்று வார்த்தைகள் விக்கி அழுது விட்டார்.

அவர் கண்கள் நனைய- கன்னம் நனைய- கைக்குட்டை நனைய நினைவுகள் நனைந்தன.

அவர் சொன்னார்:

"என் தந்தையார் தேவைப்பட்டால் கடல் போல் செலவழிப்பார். ஆனால் எள் முனையளவு விரயப்படுவதையும் விரும்பமாட்டார். அவர் மரணப்படுக்கையில் கடைசியாய்ச் சொன்ன வாசகம் என்னப்பா! பாத்ரூம் லைட் அநாவசியமா எரியுது; ஆஃப் பண்ணுங்கப்பா."

கற்றுக் கொள்ள வேண்டும்; எல்லோரும் இதைக் கற்றுக் கொள்ள வேண்டும்.

ஓர் ஏழை இருதய நோயாளிக்கு அவசரமாய் அறுவைச் சிகிச்சை.

பணம் தேவை.

ஐந்தாறு பேரைச் தொலைபேசியில் அழைத்தேன். ஐந்தாவது நிமிடம் ஆயிரம் ரூபாய் அனுப்பி வைத்தவர் சரவணன் சார் மட்டும்தான்.

குணமான அந்த இதயம் இன்னும் அவரை வாழ்த்திக் கொண்டே இருக்கிறது.

எனக்குத் தெரிந்து ஓர் இதயம்; எனக்குத் தெரியாமல் எத்தனை இதயங்களோ!

(தொடரும்)

-வைரமுத்து-

# உங்கள் பிறந்த எண் 03 இல் கூட்டெண் 06 இன் பலன்கள்



16

### தோற்றம்

இவர்கள் குருவுடன் சுக்ரன் இணைந்து தரும் பலனைப் பெற்றிடுவர். உயரமாக அழகாக சதைப்பிடித்த மேனியுடன் கம்பீரம் விளங்கத் தோன்றுவர். சிறிய மூக்கு. அழகான ஆனால் லேசான மாறு கண்ணுடன் இருப்பர். பொன்னிறம் அமைந்திருக்கும். மிகச் சிலரே குட்டையாக இருப்பர். காரணம் சந்திரனோ சனியோ ஆகும்.

கழுத்து சிறியதாக, பற்கள் சற்று பெரியவையாக இருக்கும். மார்பிலும் பின் பட்டைகளிலும் இடுப்பிலும் சதைபிடித்த இளம் தொந்தியுடன் இருப்பார். கைகள் நீண்டிருப்பனவாகும். விரல்களும் நீளமானவை. உள்ளங்கையும் உடம்பும் மெத்தென்றும் மென்மையாகவும் இருக்கும். விரல்கள் நன்கு வளையும் கால்களில் பலமிருக்காது. கைகளும் கடும் வேலைக ளுக்கு உதவாது. வழுக்கை விழும். பின் வழுக்கை உண்டு.

### குணம்

இவர்கள் சாஸ்திரம், கலை அறிவுள்ள குடும்பத்தில் பிறந்திருப்பர். கல்வி அமையும். ஆனாலும் தடைப்படலாம். ஆனாலும் கலைஞானமும் சொந்த அறிவும் இருக்கும். உலகில் அனுபவப் படிப்பு மிகும். சுயமாக நிறையப் படிப்பர். இவர்கள் சாதாரணமாக வாழ்க்கையைத் தொடங்கினாலும் மிகப் பெரிய நிலையை அடைந்திடுவர். பேச்சு வன்மை மிக்கவராவர்.

தேவகுருவுடன் அசுரரும் சேர்ந்து ஒன்றுக்கொன்று பொருந்தாத பகை எண்ணுடன் இருப்பதால் இவ்வேறுபட்ட கருத்து அல்லது ஒன்றுக்கொன்று ஒவ்வாத இருவகை மனமும் குணமும் வாழ்க்கையும் உள்ளவராவர்.

தம் கருத்திற்கேற்ப சாமர்த்தியமாகப் பேச வல்லவர். தாம் சுகமடைய, பதவி பெற, புகழ் பெறச் சாதகமாகவே பேச்சைப் பயன்படுத்துவர். பிறரைப் பேசிக் குழப்பி விடுவர். சிரித்தபடியே வருவர். போவர். ஆனால் சாப்பாடு, தூக்கம் இவருக்கு பெரிதில்லை. புகழாசை மேலும்மேலும் உழைக்க பல வகையில் பொருள் சேர உதவும். பிறரைப் பேச்சாலும் எழுத்தாலும் தூண்டி விட்டுத் தம் வேலையை முடித்துக் கொண்டு விடுவர். தமக்குப் பாதகமானதைப் பற்றிப் பேசார். தோல்விகளை சாமர்த்தியமாக மூடி மறைத்து விடுவார்.

ஏற உதவிய ஏணி போன்ற மனிதர்களையும் முரட்டுத்தனமாக எதிர்த்துப் பகைப்பர். இதனால் போட்டிகளை தாமே உண்டாக்கிக் கொண்டு சிரமப்படுவர். தோற்பர். தற்பெருமை, தந்திரம் மிக்கவரானாலும் தப்பாகப் பேசி மாட்டிக் கொள்ளச் செய்யும்.

குடும்பப் பாசம் இருக்கும். அதற்கு நேர் எதிரான பொதுவாழ்க்கையிலும் நாட்டமுண்டாகும். கலையில் ஈடுபடும் ஆர்வமும் இருக்கும். அரசியல் ஈடுபட்டார்வமும் மோதும். இதனால் இவர்கள் உள்ளொன்றும் வெளியொன்றுமாக வாழ்க்கை நடத்துவர். முற்பகுதி வாழ்க்கை போல பிற்பகுதி நேர்மையாயிராது. இருந்தாலும் ஆற்றல்மிக்க இவர்கள் அசுரத்தனமாக இயங்கி வெற்றி பெற்றுச் செல்வமும் சேர முன்னேறுவர். புகழும் திறமையும் சுகமும் பதவியுமாக நன்றாகவே வாழுவர்.

இவருக்கு சாதகமானவர் நண்பர்கள் என்றும், எதிரானவர்கள் விரோதிகள் என்றும் வைத்துக் கொண்டு இருப்பார்.

### தொழில்

கலையும் கலை சார்ந்த தொழிலும் இவருக்கு மிகப் பொருத்தமாகும். எழுத்தால் பேச்சால் பிழைக்க முடியும். எதையும் எவ்வளவு ஆற்றலிருப்பினும் முழுமையாகச் செய்துவிடாது இவர்தம் போகநாட்டம், புகழ் நாட்டம் தடை செய்யும். குடும்பப் பாசம் பொது வாழ்க்கையில் சரியாக ஈடுபடவிடாது. அரசியல் இலாப நாட்டம் கலையை முழுமையாக ஈடுபட்டுச் செய்ய விடாது. இப்படி ஒன்றுக்கு ஒன்று முரணான வெற்றி, தோல்விகளுடன் பழி, பாராட்டுகளுடன் வேலையுடனும் வேலை இல்லாமலும் எனக் காலம் கழிப்பர்.

மேலேறுதலும் கீழே விழுதலும் ஆக வாழ்க்கை போகும். ஆனாலும் செல்வம் குறையாது. சுகம் காண நாடும் மனத்தால் அலுவலகங்களில் பணிபுரிவோரும் கலைத் தொழில் வேலை பார்ப்போரும் இன்பமாகப் பொழுதைப் போக்குவர். பொறுப்பாகக் கடமையாற்றாமல் நற்பெயரை நலிவுறச் செய்து கொள்ளுவார். காலம் கடத்துவர். வாய்ப்புகளை இழப்பர்.

சொந்தத் தொழிலிலும்கூட அதிகம் அலட்டிக் கொள்ள மாட்டார். ஜவுளி, வைரம், எழுத்து, தொலைக்காட்சி, வானொலி, அரசியல், அழகு ஆடம்பரப் பொருள், வாசனை பொருட்கள், ஹோட்டல், கல்யாண மண்டபம், கல்விக் கூடம், பயிற்சி சாலைகள் போன்ற வியாபாரங்கள் நடத்துதல் நல்ல அதிர்ஷ்டம் தருவனவாகும். பேராசிரியர், ஆய்வாளர் ஆகவும் முடியும்.

### குடும்பம்

பெரிய குடும்பத்தில் பிறந்து பெரிய குடும்பமாகவே வாழ்வர். பிற பெண் தொடர்பும் வைத்திருப்பர். பெண்களால் பிரச்சினைகளடைந்தாலும் அவர்களை விரோதித்துக் கொண்டாலும் பெண்களை மிகவும் விரும்புவார். குடும்பத்தில் போராட்டங்கள் ஏற்படும். மகன்களுடன் பிணக்கேற்படும். உற்றாரும் மற்றாரும் இவருக்கு அஞ்சி லாபம் கருதிச் சேர்ந்திருப்பர். ஆனால் இவர் குடும்பத்தார் இவரால் எல்லா வசதியும் பெற்று உயர்ந்திடுவார். கடைசி வரை சுகானுபவமும் வசதிமிக்க வாழ்வும் ஆக வாழ்வார்.

### நோய்

கால்கள் வலுவிழக்கும். சிறுநீரகக் கோளாறு, வாயுத் தொல்லை,, தோல் வியாதி, குறைந்த இரத்த அழுத்தம், கண் கோளாறு, மனம் ஒரு நிலையில் நில்லாது போதல், இதயக் கோளாறு, சர்க்கரை நோய், செரியாமை ஆகிய நோய்கள் வரும். இவற்றைச் சார்ந்த கோளாறுகளை விவரித்தால் மிகும்.

(தொடரும்)

-கணித்தவர்-ஸ்வாமி-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வியில் வெற்றி காண்போம்

மனித வாழ்வில் கல்வி மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது. கல்வியே எமது வாழ்வை மேன்மையடையச் செய்கிறது. கல்வியால் அறிவையும் பகுத்தறியும் திறனையும் பெறுகின்றோம். எமது நாட்டில் தமிழ் மக்கள் கல்வியை கண்ணெனப் போற்றுகின்றனர்.



என்னதான் துன்பம் நேர்ந்தாலும் துயரங்கள் அடைந்தாலும் கல்வியைக் கைவிடாது தொடர்வதற்கு கடுமையாக உழைக்கின்றார்கள்.

'பிச்சை புகினும் கற்கை நன்றே' என்பதற்கு ஏற்றவாறு எம் நாட்டு மக்கள் வாழ்கின்றனர்.

இத்தகைய பொக்கிஷமான கல்வியை சிறந்த வழியிலே குறைந்த காலத்தில் அடைய வேண் டுமானால் சிறந்த கற்றல் முறை களை நாம் பயன்படுத்த வேண்டும். பாடசாலைகளிலும் சரி தனிப்பட்ட கல்வி முறைகளிலும் சரி ஓடி யோடிப் படித்தாலும் கல்வியை கற் பதற்கும் முறைகள் உண்டு. இந்த முறைகள் எவையென அனை வரும் அறிந்தால் வெற்றி நமதே.




கல்வித் தரிசனம்

கற்றவற்றை கிரகித்து கற்பதற்கு நமது நேரத்தை நல்ல முறையில் பயன்படுத்த வேண்டும். இது மட்டுமல்லாமல் தினசரி கற்றவற்றை மீட்டல் செய்து மனதில் பதிய வைப்பது மிக முக்கியம். கல்வியில் சிறந்த பெறுபேறு பெற்றவர்களின் ஆலோசனைகளை பின்பற்ற வேண்டும்.

மனதை ஒருமுகப்படுத்தல் மிகவும் அவசியம் ஆகும். எதிர்காலத் திட்டமிடல் ஆழ்மனதில் ஒவ்வொரு மாணவர்களுக்கும் இருக்க வேண்டும். இச் சிந்தனை இருந்தால் அகமும் புறமும் இணைந்து ஓரிடத்தில் அமைதியாக அமர்ந்து நேர அட்டவணை தயாரிக்க வேண்டும். பாடங்கள் அனைத்தையும் விருப்புடன் கற்க வேண்டும். தமக்கு எந்தப் பாடம் கடினம் எனத் தெரிகிறதோ அந்தப் பாடங்களுக்கு கூடிய நேரம் ஒதுக்க வேண்டும். படிப்பதற்கு என்று ஒரு நேர அட்டவணையைக் கடைப் பிடித்தால் நாம் நமது நேரத்தையும் சக்தியையும் சிறந்த முறையில் பயன்படுத்துவோம். நேரத்தை வீணடிப்பதைத் தவிர்ப்போம்.

கடினமான பாடங்களை புறம் தள்ளாமலிருப்போம். பரீட்சை நெருங்கும்போதும் தினசரி காலையில் செய்யும் 10 நிமிட தியான நிலையில் கற்றவற்றை நினைவுகூர்வதும் சிறந்த பயிற்சியே. எப்போதும் புத்தகம், கொப்பிகளுடன் கூட இருப்பதை தவிர்ப்போம். படிக்க வேண்டிய கொப்பிகளை, குறிப்புக்களை குறைந்தளவு கண்களுக்கு எதிரே வைத்துப் படித்தல் திருப்திகரமான மன நிலையை ஏற்படுத்தும்.

உங்கள் மனதில் நீங்கள் எதிர்பார்க்கும் தொழில் திட்டத்தை கண்முன்னே (அகக்கண்ணால்) கண்டுகளித்து கண்களால் படித்துக் கிரகித்தல் ஆழமாகப் பதிந்துவிடும். வார நேரசூசிகையை ஒவ்வொரு வாரமும் புதிதாக அமைத்துக் கொள்ளுங்கள். வீட்டில் தனியானதொரு அறையையோ, அல்லது வீட்டில் உள்ள ஒரு பகுதியையோ உங்களுக்கு என ஒதுக்கி தூய்மையாக வைத்திருங்கள். இலகுவான பாடம், கடினமான பாடம் என மாறி மாறி படித்தல் நன்று. குறைந்தது ஒரு மணித்தியாலம் படித்த பின்பு ஐந்து நிமிடம் ஓய்வெடுக்க வேண்டும். கல்வி கற்பதற்கு உகந்த நேரம் பொழுது சாயும் நேரமும் விடிற் காலை நேரமும் ஆகும்.



எந்தவொரு பாடத்தையும் கற்று முடித்த பின்னர் திருப்தியான மன நிறைவு ஏற்படுமிடத்து மீண்டும் ஒரு தாளில் படித்தவற்றை எழுதிப்பாருங்கள். இது மீட்டல் கல்வி ஆகும். மீட்டல் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது.

வெற்றி கண்ட பல மாணவர்களின் வெற்றியின் அத்திவாரம் மீட்டல் செய்து கற்கும் கல்வியாகவே இருக்கின்றது. கற்கும் போது பின்வரும் முறையை கடைப்பிடிக்க வேண்டும் அதா வது SQ3R கற்றல் முறையாகும். வெற்றியடைந்த மாணவர் கள் பலரின் கற்றல் முறைகள் பற்றி ஆராய்ந்த அமெரிக்க உள வியல் அறிஞர்கள் இவற்றைத் தொகுத்து SQ 3R கற்றல் முறை யாகும். வெற்றியடைந்த மாண வர்கள் பலரின் கற்றல் முறைகள் பற்றி ஆராய்ந்த அமெரிக்க உள வியல் அறிஞர்கள் இவற்றைத் தொகுத்து SQ3R கற்றல் முறை என அழைப்பர்.

S-survey- பார்வையிடு
Q-Question- வினா எழுப்பு
R-Read- வாசித்து விளங்கு
R-Recite- சொல்லிப்பார்
R-Revise- மீட்டல் செய்

இம்முறையை கல்வி கற்கும் போதே கற்றுக் கொள்ள வேண்டும். இத்தகைய முறையை ஒவ்வொரு மாணவர்களும் நாளாந்தம் கைக்கொள்வதன் மூலம் கற்றலில் அதாவது கல்வியில் உன்னத நிலையை அடைய முடியும்.

அதாவது கற்க வேண்டிய புத்தகங்களின் உள்ளடக்க அலகுகளை கண்களால் பார்வையிடவேண்டும். என்ன விடயம் தரப்பட்டுள்ளது, பொருளடக்கம்,முன்னுரைகள், முடிவுரைகள்,பின் இணைப்புக்கள், துணை நூல் பட்டியல் , சொற்பட்டியல் ஆகிய தலைப்புக்களை கவனிக்க வேண்டும்.

கவனித்த விடயங்கள் ஊடாக நூலின் ஆசிரியர் என்ன பிரச்சினைகளுக்கு தீர்வு கூறுகிறார் என ஆராய்வதுடன் எவ்வித மான வினாக்களுக்கு விடை தருகிறார் எனவும் சிந்திக்க வேண்டும்.

சிந்தித்தவற்றை குறிப்பேட்டில் எழுதிக் கொள்ள வேண்டும். வினாக்களுக்கு விடை தேடி வாசித்து புரிந்து கொள்ள வேண்டும். புரியாத சொற்கள் எதிர்ப்பட்டால் அகராதியை பயன்படுத்த வேண்டும்.

வாசித்து முடித்தவற்றை நிறைவு என்ற திருப்தி கண்ட பின் ஒரு தாளில் எழுதிப் பார்க்க வேண்டும் அல்லது சொல்லிப் பார்க்க வேண்டும்.

அன்றாடம் படித்த விடயங்களை (Revise) மீட்டல் செய்து பயிற்சிகளிலும் ஈடுபட்டால் கற்றல் திறன் சுலபமாக்கப்படும். எளிதில் புரிந்து கொள்ளும் திறனும் உருவாகும்.

எனவே, SQ3R+U எனப் பின்பற்றி கல்வியைக் கற்போம். மதிப்பிற் குரியவர்கள் ஆவோம். (U=use) SQ3R இம் முறையை பயன்படுத்துவோம்.

செல்வி.எம்.செல்வராஜா(D.O)
(B.A, M.A in tamil,
முன்பள்ளி கல்வியியலாளர் டிப்ளோமா)

கல்வித் தரிசனம் பகுதிக்கு
துறைசார்ந்தவர்களிடமிருந்து
தரமான ஆக்கங்கள்
கோரப்படுகின்றன.
அனுப்ப வேண்டிய முகவரி:-
வலம்புரி
கல்வித் தரிசனம்
இல.3.2 ஆம் ஒழுங்கை.
பிறவுண் வீதி.
யாழ்ப்பாணம்.
(ஆ-ர்)

# ராஜபக்ஷவின் வருகையை எதிர்த்தது தவறு

காரணம் கூறுகிறார் கேணல் ஹரிகரன்



மோடியின் மேடைப் பேச்சுக்களை நாம் உற்றுக் கவனித்தால் சில விடயங்களைப் புரிந்து கொளள முடியும்.

இந்தியப் பாரம் பரியத்தின் வேர்களை வளர்த்தெடுக்க வேண்டும் என்ற எண்ணம் அவருக்குள் ஊறிப்போய் இருப்பதை அதில் நாம் உணர முடியும்.

அவரின் அந்த உணர்வுதான், சார்க் நாடுகளின் தலைவர்களை பதவியேற்புக்கு அழைக்க வைத்துள்ளது.

இந்திய இரத்தத்தில் ஊறிப்போய் உள்ள பாரம்பரியப் பழக்கத்தின்படி விடுக்கப்பட்ட அழைப்பாக மட்டுமே இதைப் பார்க்க வேண்டும். அயல் வீட்டுக்காரனோடு தீராத பகை இருந்தாலும், நம் வீட்டில் நடக்கும் சுப நிகழ்ச்சிகளுக்கு அவர்களை அழைப்போம அல்லவா? அதுபோன்றது தான் இந்தச் செயல்.

இந்த நிகழ்வால் பாகிஸ்தான்-இலங்கை உடனான வெளியுறக் கொள்கைகள் அடியோடு மாறி விடும் என்றோ அற்புதம் நிகழ்ந்து விடும் என்றோ எதிர்பார்ப்பதிலும், இது மிகப்பெரிய இர்ாஜதந்திர நடவடிக்கை என்று பாராட்டுவதிலும், எந்த அர்த்தமும் இல்லை. அப்படி எதுவும் நடந்துவிடவும் முடியாது.

வெளியுறவுக் கொள்கைகள் தொடர்பான முடிவுகள், இரு நாட்டுப் பிரச்சினைகள் தொடர்பான பேச்சு வார்த்தைகள், அதற்கான ஆலோசனைகள், திட்டங்கள் எல்லாம் முற்றிலும் வேறு முகம் கொண்டவை.

அதே சமயம் தமிழக அரசியல் கட்சிகள் ராஜபக்ஷவின் வருகையை இவ்வளவு கடுமையாக எதிர்த்தன,

இங்குள்ள தமிழர்கள் மற்றும் இலங்கைத் தமிழர்களின் ஒட்டு மொத்த நலன்களுக்கு விரோதமானது.

இவர்கள் அனைவரும் தமிழர்களின் நலனில் அக்கறை காட்ட வேண்டும் என்று உண்மையாக நினைத்திருந்தால், நிச்சயமாக அவ்வளவு கடுமையாக ராஜபக்ஷ வருகையை எதிர்த்திருக்க மாட்டார்கள்.

தமிழக முதலமைச்சர் மற்றும் ஏனைய தமிழக அரசியல் கட்சிகளின் இந்த எதிர்ப்பு, அங்கு முள் வேலி முகாம்களுக்குள் அடைக்கப்பட்டு இருக்கும் தமிழர்களுக்கு இன்னும் மோசமான விளைவுகளைத்தான் ஏற்படுத்தும்.

முள்வேலி முகாம்களுக்குள் இருக்கும் தமிழர்களை அங்கிருந்து வெளிக்கொண்டுவர வேணடுமானால், அந்த நாட்டில் தனி பெரும் பான்மையுடன் இருக்கும் ராஜ பக்ஷவோடு சுமுக உறவை வளர்த்தால் மட்டுமே சாத்தியம்.

அப்படிப்பட்ட உறவை ஏற்படுத்த, இதுபோன்ற சமயங்களில் இவர்கள் அமைதியாக இருக்க வேண்டும்.

அதைவிடுத்து எதிர்ப்பதும் கோஷம் போடுவதும் கொடும்பாவி எரிப்பதும் கட்சிக்கு ஆள் சேர்க்கத்தான் பயன்படுமே தவிர, இலங்கைத் தமிழர்களின் நலனுக்கு உதவாது.

இன்றும் இலங்கையில் கொழும்பு உட்பட முக்கியமான நகரங்களில் வாணிபம் செய்துகொண்டிருப்பவர்களில் பெரும்பாலானவர்கள், தமிழ்நாட்டுத் தமிழர்கள். அது இங்குள்ள அரசியல்வாதிகள் அனைவருக்கும் தெரியும்.

அப்படிப்பட்ட சூழலில் இவர்கள் தெரிவிக்கும் எதிர்ப்பு என்ன மாதிரியான விளைவுகளை ஏற்படுத்தும் என்பதை யாரும் சிந்திப்பது இல்லை.

இன்றுள்ள உலக அரசியல் சூழலில் இந்திரா காந்தி பங்களா தேஷில் செய்த போர் அரசியலை செய்ய முடியாது.

நம்மால் மட்டு மல்ல... அமெரிக்காவால்கூட அப்படிச் செய்ய முடியாது.

அதனால்தான் சிரியா, லிபியா, உக்ரைன், வடகொரிய விவகாரத்தில் அமெரிக்கா அடக்கி வாசிக்கிறது. அதுபோல், விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் நடத்தியது போன்ற போராளி இயக்கத்தை இனிமேல் எந்த நாட்டிலும் யாரும் நடத்த முடியாது.

இதை எல்லாம் நன்றாக யோசித்துப் புரிந்துகொண்டு, தங்களின் அடிப் படையான அரசியல் நிலைப்பாட்டை தமிழக அரசியல் கட்சிகள் மாற்றி அமைக்க வேண்டும்.

மேலும், தமிழக அரசியல் கட்சிகள் ஒன்றைப் புரிந்துகொள்ள வேண்டும்.

இலங்கைத் தமிழர் பிரச்சினை மட்டுமே தமிழகத்தின் பிரச்சினை அல்ல. இங்குள்ள பல பிரச்சினைகளில் அதுவும் ஒரு பிரச்சினை. அதைப் புரிந்துகொள்ளாமல், ராஜபக்ஷவின் வருகையைக் காரணம் காட்டி, வலுவான பிரதமராக உருவெடுத்து இருக்கும் மோடியின் அழைப்பை நிராகரித்ததன் மூலம், தமிழகத்தின் நலனையும் இவர்கள் நிராகரித்துள்ளனர்.

ஏனென்றால், தமிழகத்தின் தயவில் மத்திய அமைச்சரவை நடந்துகொண்டிருந்தபோது, இவர்களில் 12 பேர் அங்கு அமைச்சர்களாக இருந்தபோதே, தமிழகத்துக்கு ஒரு நன்மையும் நடக்கவில்லை.

இப்போது தொடக்கத்திலேயே மத்திய அரசை அவமதித்துவிட்டு, எந்த முகத்தோடு தமிழகத்துக்குத் தேவையான திட்டங்கள், நிதியுதவி ஆகியவற்றைப் போய் கேட்பார்கள்? மத்திய அரசோடு சுமுக உறவு, அயல் நாடுகளோடு இணக்கமான போக்கு ஆகியவற்றை வளர்க்க இவர்கள் முன்வர வேண்டும்.

அதுவே தமிழகத்துக்கும் தமிழர்களுக்கும் நன்மையை ஏற்படுத்தும் என தீர்க்கமாக சொல்கிறார் கேணல் ஹரிகரன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென்கொரிய மருத்துவமனையில் தீ விபத்து

## 21 பேர் உயிரிழப்பு

(சியோல்)

**தென்கொரியாவின் தலைநகர் சியோல் அருகே ஹயோசரங் நகரத்தில் உள்ள அடுக்குமாடி மருத்துவமனையில் நேற்று முன்தினம் ஏற்பட்ட தீ விபத்தில் 21 பேர் உயிரிழந்துள்ளனர்.**



தென்கொரியாவில் மருத்துவமனையில் ஏற்பட்ட தீ விபத்தில் 21 நோயாளிகள் பலியாகினர்.

தென்கொரியாவின் தலைநகர் சியோல் அருகே ஹயோசரங் நகரம் உள்ளது. அங்குள்ள ஒரு அடுக்குமாடி மருத்துவமனையில் நேற்று முன்தினம் நள்ளிரவில் திடீரென தீ விபத்து ஏற்பட்டது.

அந்த தீ "மளமள"வென பரவியது.

அதை தொடர்ந்து முதல் மாடியில் படுக்கையில் இருந்த நோயாளிகள் பத்திரமாக மீட்கப்பட்டனர்.

இதற்கிடையே 2 ஆவது மாடிக்கு பயங்கரமாக தீ பரவியது.

இதனால் கடுமையான புகை மூட்டம் ஏற்பட்டது.

எனவே, உள்ளே புகுந்து நோயாளிகளை காப்பாற்ற முடியவில்லை.

தீயணைப்பு படையினருக்கும் தகவல் தெரிவிக்கப்பட்டது.

அவர்களும் விரைந்து வந்து தீயை அணைத்தனர்.

இருந்தும் 21 பேர் உயிரிழந்தனர்.

அவர்களில் 20 பேர் நோயாளிகள். ஒருவர் பணியில் இருந்த தாதிபெண் ஆவார்.

தீ விபத்தில் பலியான அனைவரும் 70 மற்றும் 80 வயதுக்குட்பட்ட முதியவர்கள்.

கடுமையான புகை மூட்டம் மற்றும் வயது முதிர்வு காரணமாக இவர்களால் தப்பி ஓட முடியவில்லை.

தென் கொரியாவில் சமீப காலமாக பேரிடர்களால் அதிக அளவு உயிரிழப்பு ஏற்பட்டுள்ளது.

கடந்த மாதம் கடலில் படகு மூழ்கியதில் பாடசாலைக் குழந்தைகள் உட்பட 300 பேர் பலியாகினர்.

2 நாட்களுக்கு முன்னதாக பஸ்சில் தீப்பிடித்ததில் 7 பேர் கருகி உயிரிழந்தனர்.

41 பேர் காயம் அடைந்தனர்.

தற்போது மருத்துவமனையில் தீப்பிடித்து 21 பேர் பலியாகியுள்ளனர்.

படகு விபத்துக்கு தென் கொரிய ஜனாதிபதி பார்க் நியுன் மன்னிப்பு கேட்டார்.

பாதுகாப்பு ஏற்பாடுகளை மேம்படுத்துவதாக உறுதி அளித்துள்ளார்.

இச்சம்பவத்துக்கு பொறுப்பேற்று பிரதமர் சங் ஹாங்-வன் பதவியை இராஜினாமா செய்தார்.

## ஏமனில் அல்கொய்தா முக்கிய தலைவர் சுட்டுக்கொலை

(சனா)

ஏமனில் அல்கொய்தா தீவிரவாதிகள் தொடர்ந்து தாக்குதல் சம்பவங்களில் ஈடுபட்டு வருகிறார்கள்.

தீவிரவாதிகளை ஒடுக்கும் நடவடிக்கையில் ஏமன் இராணுவம் அதிரடியாக களம் இறங்கியுள்ளது.

ஏமனில் தீவிரவாதிகள் ஆதிக்கம் நிறைந்த பெய்ட் அல்-அதாரி மற்றும் மாணி ஹரம் மாவட்டங்களில் இராணுவ வீரர்கள் அதிரடி தாக்குதலில் ஈடுபட்டனர்.

அப்போது தீவிரவாதிகளுக்கும், இராணுவத்தினருக்கும் இடையே கடும் சண்டை நடந்தது.

இதில் பல்வேறு தீவிரவாத தாக்குதல்களில் தொடர்புடைய அல்கொய்தா தீவிரவாத அமைப்பின் முக்கிய தலைவர் சலே அல் டெயிஸ் உட்பட 5 பேர் கொல்லப்பட்டனர்.

இந்த சண்டையில் இராணுவ அதிகாரிகள் 2 பேரும் பரிதாபமாக உயிரிழந்தனர்.

தீவிரவாத முகாம்களில் இருந்து வெடிபொருட்களும், கார் குண்டுகளும், பயங்கர ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டுள்ளன.

## ஆப்கானிலிருந்து அமெரிக்க படைகள் வாபஸ்

### ஒபாமா திட்டம்



(வோஷிங்டன்)

2016 ஆம் ஆண்டில் ஆப்கானிஸ்தானில் உள்ள அமெரிக்க படைகளை வாபஸ் பெற அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா திட்டமிட்டுள்ளார்.

அதற்கு முன்னதாக இந்தாண்டு இறுதிக்குள் 9 ஆயிரத்து 800 அமெரிக்க வீரர்களை திரும்ப பெறவும் திட்டமிட்டுள்ளார்.

ஒபாமா வரும் 2017 இற்கு முன்னதாகவே அவரது பதவிக் காலம் முடிந்துவிடும்.

அமெரிக்க வரலாற்றிலேயே நீண்ட போராக 2011 இல் ஈராக்கில் நடந்தது.

ஈராக்கில் நடந்த கடுமையான சண்டைக்கு பின்னர் தான் குடியரசு கட்சிக்கு வெற்றி கிடைத்தது என ஒபாமாவின் வெள்ளை மாளிகையின் ரோஸ் கார்டன் விமர்சித்துள்ளது.

ஆப்கானியர்கள் தங்கள் நாட்டை பாதுகாக்க வேண்டிய நேரம் வந்து விட்டது.

அமெரிக்க படைகள் ஆப்கானிஸ்தானில் தங்க நிலையான இடமாக அங்குள்ளது என கூற முடியாது என்றும் அதற்கு அமெரிக்காவும் பொறுப்பு இல்லை எனவும் ஒபாமா தெரிவித்தார்.

## நைஜீரியாவில் தீவிரவாத தாக்குதலில் 24 பாதுகாப்பு படையினர் மாண்டனர்



(டமாடுரு)

நைஜீரியாவின் வட கிழக்கு நகரமான புனியாடியில் உள்ள பாதுகாப்பு படையினரின் முகாம் மீது போகோஹாரம் தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தியதில் பாதுகாப்பு படையினர் 24 பேர் பலியானார்கள.

இவ் இடத்திற்கு அருகில் கடந்த பெப்ரவரி மாதம் பொதுமக்கள் 59 பேரை தீவிரவாதிகள் சுட்டுக்கொன்றனர்.

புனியாடியில் தாக்குதல் நடத்த தீவிரவாதிகள் கவச வாகனத்திலும், ஹைலக்ஸ் டிரக்குகளிலும் வந்ததாக அங்கு வசிக்கும் நேரடி சாட்சி ஒருவர் தெரிவித்துள்ளார்.

அப்பாவி மக்களை மட்டுமே குறி வைத்து கொன்று வந்த போகோஹாரம் தீவிரவாதிகள் பட்டியலில் தற்போது இராணுவமும் இடம் பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

இம்முறை தீவிரவாதிகள் பாதுகாப்பு படைகளையும், இராணுவ தளங்களையும், உயர்நீதிமன்றம் மற்றும் அம்மாவட்ட தலைமை பொறுப்பிலுள்ள அப் ஹசனின் இல்லத்தையும் தாக்கியுள்ளனர்.

வடக்கு நைஜீரியாவை இஸ்லாமியர்களுக்கான தனி நாடாக அறிவிக்கக்கோரி போகோஹாரம் தீவிரவாதிகள் நீண்ட நாட்களாகவே தாக்குதலில் ஈடுபட்டுவருகின்றனர்.

இது வரை ஆயிரக்கணக்கானோர் தீவிரவாதிகளால் கொல்லப்பட்டுள்ளனர்.



பிரதமர் நரேந்திரமோடி டில்லியில் உள்ள முன்னாள் பிரதமர் மன்மோகன் சிங்கை அவரது இல்லத்தில் சென்று சந்தித்தபோது....

## வியன்னாவில் ஈரான் அணுசக்தி திட்டம் மீதான அடுத்தசுற்று பேச்சுவார்த்தை

### ஐரோப்பிய ஒன்றியம் தகவல்

(புருஸ்செல்)

ஈரான் அணுசக்தித் திட்டம் மீதான ஐரோப்பியக் கவலைகளைத் தீர்ப்பது குறித்த அடுத்த சுற்று பேச்சுவார்த்தை வியன்னாவில் எதிர்வரும் ஜூன் மாதம் 16ஆம் திகதி முதல் 20 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளதாக ஐரோப்பிய ஒன்றியம் நேற்று அறிவித்தது.

ஜூலை மாதம் 20 ஆம் திகதி காலக்கெடு குறிக்கப்பட்டுள்ள இந்தப் பேச்சுவார்த்தையின் தொடர்ச்சிக்கு ஒரு முன்னோடியாக நேற்றுமுன்தினம் ஈரானின் வெளியுறவுத்துறை அமைச்சர் முகமது ஜாவத் சரிப் இஸ்தான்புல்லில் கேதரின் ஆஷ்டனைச் சந்தித்தார்.

மேற்கத்திய அரசுகள் அணு சக்தித் திட்டம் குறித்த பேச்சுவார்த்தையில் தாங்களிடம் அதிகம் எதிர்பார்ப்பதாக அவர் தெரிவித்துள்ளார்.

அணுசக்தி ஆற்றலை அதிகரிக்க அதன் மூலப்பொருளான யுரேனியத்தை வளப்படுத்த ஈரான் விரும்புகின்றது.


ஆனால் ஈரானின் அணுசக்தித் திட்டம் எப்போதுமே அமைதிக்கான பாதையில் இருக்கவேண்டும் என்று கருதும் மேற்கத்திய நாடுகள் யுரேனியம் செறிவூட்டப்படும் அளவை பேச்சுவார்த்தையில் உட்படுத்தியுள்ளன.

இந்த இரண்டும் ஒருங்கிணைந்து செயற்பட தான் முயற்சிப்பதாக சரிப் தெரிவித்தார்.

இஸ்தான்புல்லில் நடைபெற்ற மிக நீண்ட மற்றும் பயனுள்ள விவாதங்களுக்குப் பின்னர் அடுத்தகட்ட பேச்சுவார்த்தை அடுத்த மாதம் 16 ஆம் திகதியிலிருந்து 20 ஆம் திகதி முடிய வியன்னாவில் நடைபெறும் என்று கேதரின் ஆஷ்டனின் செய்தித் தொடர்பாளர் குறிப்பிட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிது புதிதாக கிளம்பும் போர்க்குற்ற ஆதாரங்கள்!



இலங்கையில் போரின்போது நடந்த மனித உரிமை மற்றும் மனித குலத்திற்கு எதிரான மீறல்கள் குறித்து விசாரணை நடத்துவதற்கான ஐ.நா. விசாரணைக்குழு எந்த நேரத்திலும் அறிவிக்கப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இம்மாத இறுதிக்குள் இந்த அறிவிப்பு பெரும்பாலும் வெளியாகிவிடும் என்று நம்பப்படுகின்ற நிலையில், இந்த விசாரணைக்குழுவை உருவாக்கும் பணிகள் ஜெனிவாவில் இறுதிக் கட்டத்தை நெருங்கியுள்ளன.

இந்த நிலையில், போரின் இறுதிக்கட்டத்தில் நிகழ்ந்த போர்க்குற்றங்களை வெளிப்படுத்தும் புதிய ஆதாரங்கள் பலவும் வெளிவரத் தொடங்கியுள்ளன.

போர் முடிவுக்கு வந்து கடந்த 18 ஆம் திகதியுடன் ஐந்து ஆண்டுகள் நிறைவடைந்துள்ளன.

இந்தப்போரின் இறுதிக் கட்டத்தில் எடுக்கப்பட்ட சில ஒளிப்படங்களை கடந்த வாரம் பிரித்தானியத் தமிழர் பேரவை வெளியிட்டிருந்தது.

விடுதலைப்புலிகளின் தொலைக்காட்சி செய்தி வாசிப்பாளர் இசைப்பிரியாவும் மற்றும் ஒரு பெண்ணும் இராணுவப் பதுங்குகுழியொன்றுக்குள் அமர வைக்கப்பட்டிருக்கும் காட்சிகளும், வேறு சுமார் 20 இற்கும் அதிகமான ஆண், பெண் போராளிகள், ஆடைகள் களையப்பட்ட நிலையில் நீர் காணப்படும் குழியொன்றுக்குள் அமரவைக்கப்பட்டுள்ள காட்சிகளும் இந்த ஒளிப்படங்களில் பதிவாகியுள்ளன.

கடந்த ஐந்து ஆண்டுகளில் வெளியாகிய போர்க்குற்றங்களுடன் தொடர்புடைய ஒளிப்படங்களின் தொடர்ச்சி என்று இதனைக் கூறலாம். இசைப்பிரியா தொடர்பாக வெளியாகும் மூன்றாவது ஆதாரத் தொகுப்பு இதுவாகும்.

முதலில் வெளியான படங்களில் அவர் உடைகள் களையப்பட்ட நிலையில், கைகள் பின்புறம் கட்டப்பட்டு, சுட்டுக்கொல்லப்பட்டுக் கிடக்கும் காட்சிகளை வெளிப்படுத்தின. பின்னர் வெளியான வீடியோ ஒன்றில் மேலாடை களையப்பட்ட நிலையில், நீர் நிறைந்த பகுதியொன்றிலிருந்து அவர் இராணுவத்தினரால் வெளியே இழுத்து வரப்படும் காட்சிகள் பதிவாகியிருந்தன.

அப்போது அது விடுதலைப் புலிகளின் சோடிப்பாக இருக்கலாம், நாடகமாக இருக்கலாம் என்று தட்டிக் கழித்திருந்தது இராணுவத் தரப்பு.

இப்போது அவர் உயிரோடு பிடிக்கப்பட்டதற்கான இன்னொரு ஆதாரமாக அவர் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் படங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

கொல்லப்பட்டுக் கிடக்கும் காட்சிகளில் காணப்பட்ட அதே அரைகுறை ஆடைகளுடன் கைகள் பின்புறம் கட்டப்பட்ட நிலையில் இந்தப் படங்களில் இசைப்பிரியா காணப்படுகிறார்.

அவருக்கு அருகில் படமொன்றில் காணப்படும் மற்றொரு பெண், ஆடைகள் களையப்பட்டு வெறும் துணியால் போர்த்தப்பட்டிருந்த காட்சியும் இன்னொரு படத்தில் ஆடைகள் களையப்பட்ட ஆண் போராளிகள் மத்தியில் பெரும்பாலும் ஆடைகள் களையப்பட்ட நிலையில் அமர வைக்கப்பட்டுள்ள காட்சியும் பதிவாகியுள்ளன.

அந்தப் பெண்ணின் படத்தைப் பார்த்து அவரது பெற்றோர் அடையாளம் கண்டுள்ளனர்.

மல்லாவியைச் சேர்ந்த குணலிங்கம் உசாளினி என்று அவர் அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இவர் 2008 ஆம் ஆண்டில் விடுதலைப் புலிகளால் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டவர் என்றும் இவரது பெற்றோர் இவரை முள்ளிவாய்க்காலில் இறுதியாக சந்தித்திருந்ததாகவும் கூறியுள்ளனர்.

மேலும் சனல் 4 தொலைக்காட்சி முதன்முதலாக வெளியிட்ட நிர்வாணமாக்கப்பட்ட நிலையில் கைகள் பின்புறம் கட்டப்பட்ட ஆண்கள், தலையில் சுட்டுக்கொல்லப்படும் காட்சிகளுடன் தொடர்புடைய படங்களே இவையெனக் கருதப்படுகிறது.

அந்த நிகழ்வுக்கு முன்னதாக உயிரோடு பிடித்து வைத்திருந்த போது எடுக்கப்பட்ட படங்களாகவே இவை தெரிகின்றன.

இருபதுக்கும் அதிகமான போராளிகள் ஆடைகள் களையப்பட்ட நிலையில் நீர் காணப்படும் குழியொன்றுக்குள் தடுத்து வைக்கப்பட்டுள்ளதை இந்தப் புதிய ஆதாரங்கள் வெளிப்படுத்துகின்றன.

இந்தப் படங்களில் காணப்படும் சில போராளிகள் ஏற்கனவே அடையாளம் காணப்பட்டவர்கள்தான் என்பதும் குறிப்பிடத்தக்கது.

அவர்களில் விடுதலைப் புலிகள் திருகோணமலை மாவட்ட தளபதியாக இருந்த உதயன் என்பவரும் அடங்கியுள்ளார்.

அதைவிட அமரவைக்கப்பட்டுள்ள ஆண்களில் ஒருவர் சிறுவனாக இருப்பதையும் காண முடிகிறது.

முள்ளிவாய்க்கால் நினைவு நாளன்று வெளியாகியுள்ள இந்தப் படங்கள், போரின் இறுதிக்கட்டத்தில் சரணடைந்தவர்கள் பலருக்கு நேர்ந்த அவலத்தை இழைக்கப்பட்ட கொடுமைகளை வெளிப்படுத்தியுள்ளது.

இந்தப் படங்கள் குறித்து கருத்து வெளியிட்டுள்ள பாதுகாப்பு அமைச்சின் பேச்சாளர் பிரிகேடியர் ருவான் வணிகசூரிய இது குறித்து உடனடியாக எதையும் கூற முடியாது என்று கடந்த வாரம் பதிலளித்திருந்தார்.

அதாவது, முதன்முறையாக இலங்கை இராணுவம், போர்க் குற்றங்கள் தொடர்பாக தம்மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டு ஒன்றை உடனடியாகவே நிராகரிப்பதை தவிர்த்துக் கொண்டுள்ளது.

சனல் 4 வீடியோக்கள் மற்றும் போர்க்குற்றங்களை வெளிப்படுத்தும் ஒளிப்படங்கள் வெளியாகின்ற போதெல்லாம் அதை உடனடியாக போலியானது; திரிக்கப்பட்டது என்று நிராகரிப்பதையே இலங்கை இராணுவமும் அரசாங்கமும் இதுவரை வழக்கமாக கொண்டிருந்தன.

இராணுவத்தினது பெயரைக் கெடுப்பதற்காக இவை வெளியிடப்படுவதாக கூறி இவற்றை உடனடியாகவே நிராகரித்து அந்த ஆதாரங்களின் உண்மைத் தன்மையை ஆராய முனைவதில்லை.

ஆனால், முதன்முறையாக ஆராய்ந்து பார்த்துத்தான் இதன் உண்மைத் தன்மையை அறிய வேண்டும் என்று பிரிகேடியர் ருவான் வணிகசூரிய குறிப்பிட்டுள்ளார்.

இது இந்த ஐந்து ஆண்டுகளில் போர்க்குற்றங்கள் பற்றிய குற்றச்சாட்டுக்களால் அரசாங்கத்துக்கும் இராணுவத்துக்கும் ஏற்பட்டுள்ள நெருக்கடியினால் ஏற்பட்டிருக்கும் உண்மையான மாற்றமாகும்.

அதற்காக பிடிகேடியர் ருவான் வணிகசூரிய இந்தப் படங்களை உண்மையென்று ஏற்றுக்கொண்டு விட்டதாக கருத முடியாது.

வழக்கம் போலவே இராணுவத்தின் பெயரைக் கெடுப்பதற்காகவே திட்டமிட்டு இதுபோன்ற படங்கள் வெளியிடப்படுவதாக அவர் கூறியிருக்கிறார்.

ஆனால், ஏற்கனவே சனல்4 வெளியிட்ட வீடியோ குறித்து நடத்தப்படும் விசாரணையுடன் சேர்ந்து இது குறித்தும் விசாரணை நடத்தப்படும் என்று பொறுப்பாக பதிலளித்துள்ளார்.

இந்தக் கருத்து மேற்கு நாடுகளுக்குத் திருப்தியளித்திருக்கும் என்பதில் சந்தேகமில்லை. ஆனால், எப்போது இந்த உண்மைகள் வெளிச்சத்துக்குவரும்? இந்த விசாரணைகள் எப்போது முடிவடையும்? என்று அரசாங்கத்துக்கே வெளிச்சம்.

சனல் 4 வெளியிட்ட வீடியோ ஆதாரத்தைமுதலில் பொய்யானது, போலியானது என்று தமது தொழில்நுட்ப நிபுணர்களை வைத்து நிரூபித்திருப்பதாக இராணுவம் கூறியது.

ஆனால், 2012 ஆம் ஆண்டு ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில், இலங்கைக்கு எதிரான தீர்மானம் கொண்டு வரப்பட்டுள்ளது என்று அறிந்தவுடன், அதேயாண்டு தொடக்கத்தில் ஒரு இராணுவ நீதிமன்றத்தை அமைத்து விசாரணை நடத்துவதாக அரசாங்கம் அறிவித்திருந்தது.

இந்த இராணுவ நீதிமன்றம் 2013 ஆம் ஆண்டில் முதற்கட்ட அறிக்கையை கையளித்து போரின் போது படையினர் எந்த திட்டமிட்ட போர்க்குற்றங்களிலும் ஈடுபடவில்லை என்று கூறியிருந்தது.

அடுத்த கட்டமாக சனல் 4 வீடியோ பற்றிய குற்றச்சாட்டு குறித்து விசாரணை நடத்தி அறிக்கை சமர்ப்பிப்பதாக இராணுவ நீதிமன்றம் கூறி ஒன்றரை ஆண்டுகளாகப் போகின்றன. ஆனால், அந்த அறிக்கை இன்னமும் கையளிக்கப்படவில்லை.

இராணுவ நீதிமன்ற விசாரணைகள் இன்னமும் நடத்தப்படுகிறதா இல்லையா என்று கூடத் தெரியவில்லை.

அதனுடன் சேர்த்தே இந்த ஒளிப்படங்கள் குறித்து விசாரணைகளையும் இராணுவ நீதிமன்றம் மேற்கொள்ளும் என்று பிரிகேடியர் ருவான் வணிக சூரிய தெரிவித்துள்ளார்.

ஆனால், இராணுவ நீதிமன்றத்தின் தலைவராக இருந்த மேஜர் ஜெனரல் கிரிசாந்த டி சில்வா ரஷ்யாவுக்கான பிரதித் தூதுவராக கடந்த 17 ஆம் திகதி அரசாங்கத்தினால் நியமிக்கப்பட்டுள்ளார். அவர் வகித்து வந்த இராணுவத் தலைமை அதிகாரி பதவிக்கு கடந்த 17 ஆம் திகதி மேஜர் ஜெனரல் பிரசாந்த் சமரசிங்க நியமிக்கப்பட்டுள்ளார்.

எனவே, அவரது தலைமையிலான இராணுவ விசாரணை நீதிமன்றத்துக்கு என்ன நடந்தது? அது எவ்வாறு செயற்படுகிறது? யாருடைய தலைமையில் செயற்படுகிறது? இதன் விசாரணைகளும், அறிக்கையும் வெளிச்சத்துக்கு வருமா? என்பதெல்லாம் கேள்விகளாகவே இருக்கின்றன.

இராணுவ நீதிமன்ற விசாரணை அறிக்கைகளைக் கூட பகிரங்கப் படுத்துமாறு அமெரிக்கா கோரி வருகிறது. ஐ.நா. மனித உரிமைகள் பேரவைத் தீர்மானமும்கூட, அதனை ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் பணியகத்துடன் பகிர்ந்து கொள்ள வலியுறுத்தியுள்ளது. ஏனென்றால் இது எந்தளவுக்கு சுயாதீனத்தன்மை கொண்டது என்ற சந்தேகம் உலகம் முழுவதும் உள்ளது.

இந்த நிலையில் புதிய படங்கள் பற்றிய ஆதாரங்கள் குறித்து விசாரித்து அரசாங்கம் பதிலளிக்குமா என்பது சந்தேகம்தான்.

ஆனால், ஒரேயடியாக மறுக்காமல் கொஞ்சம் புத்திசாலித்தனமாக நடந்து கொண்டிருக்கிறது. அதே வேளை, போரின் இறுதிக் கட்டத்தில் விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் பா.நடேசன் மற்றும் புலித்தேவன் ஆகியோர் கொல்லப்பட்ட வெள்ளைக்கொடிச் சம்பவம் குறித்து மேலதிகமான சாட்சியங்கள் கிடைத்துள்ளதாக, தென்னாபிரிக்காவைச் சேர்ந்த மனித உரிமை சட்டத்தரணி யஸ்மின் சூகா கூறியுள்ளார்.

ஐ.நா. பொதுச் செயலர் பான் கீ மூன் நியமித்த நிபுணர் குழுவில் இடம்பெற்றவர்களில் ஒருவரான யஸ்மின் சூகா தலைமையிலான அமைப்பு ஒன்று, வெள்ளைக்கொடிச் சம்பவம் தொடர்பான ஆதாரங்கள் பலவற்றைத் திரட்டி ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் நவநீதம் பிள்ளையிடம் கையளித்துள்ளதாகவும் கூறப்படுகிறது.

அவரது அறிக்கையில், நடேசன், புலித்தேவன் ஆகியோர் சரணடைந்ததை நேரில் கண்ட நான்கு சாட்சிகளும், இவர்கள் சரணடைய உத்தரவாதம் கொடுத்த அப்போதைய வெளிவிவகாரச் செயலர் பாலித கொகன்னவுடன் நடத்தப்பட்ட தொலைபேசி உரையாடல் மற்றும் குறுஞ் செய்திப் பரிமாற்றங்களும் சான்றுகளாகச் சேர்க்கப்பட்டுள்ளன.

ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் நவநீதம்பிள்ளையினால் போர்க்கால மீறல்கள் குறித்து விசாரணைக் குழுவொன்று நியமிக்கப்படவுள்ள சூழலில் இந்தப் புதிய ஆதாரங்கள் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளன.

இத்தகைய ஆதாரங்களை அரசாங்கம் ஒரே அறிக்கையில் நிராகரித்துவிட்டுப் போகலாம். எனினும் சர்வதேச விசாரணையொன்று வரும்போது, அவை பொய்யென்று நிரூபிக்க வேண்டும். அதுதான் சர்வதேச சமூகத்தினால் ஏற்றுக் கொள்ளப்படும்.

அதற்கு ஐ.நா. விசாரணைகளுக்கு அரசாங்கம் ஒத்துழைத்தாக வேண்டும். ஆனால், ஐ.நா. விசாரணைக் குழுவை நிராகரிக்கும் இலங்கை அரசாங்கம் எவ்வாறு இவை பொய்யான குற்றச்சாட்டுக்கள் என்று நிரூபிக்கப்போகிறது?

-சுபத்ரா-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சட்டவிரோத ஆட்கடத்தற்காரர்கள் நியூசிலாந்தை இலக்கு வைத்துள்ளனர்



## பிரதமர் ஜோன் கீ தெரிவிப்பு

**சட்டவிரோத ஆட்கடத்தற்காரர்கள் நியூசிலாந்தை இலக்கு வைத்துள்ளதாக அந்நாட்டு பிரதமர் ஜோன் கீ தெரிவித்துள்ளார். இதுவரை காலமும் அவுஸ்திரேலியாவையே சட்டவிரோத ஆட்கடத்தற்காரர்கள் இலக்கு வைத்திருந்தனர் என அவர் குறிப்பிட்டுள்ளார்.**

அவுஸ்திரேலியா எல்லைப் பாதுகாப்பு நடவடிக்கைகளை கடுமையாக்கியுள்ளதனைத் தொடர்ந்து சட்டவிரோத ஆட்கடத்தற்காரர்கள் புகலிடக் கோரிக்கையாளர்களை நியூசிலாந்துக்கு அனுப்பி வைக்க முயற்சித்து வருவதாகத் தெரிவித்துள்ளார்.

இலங்கை மற்றும் இந்தோனேஷியா போன்ற நாடுகளிலிருந்து நியூசிலாந்து நோக்கிப் பயணிப்பது மிகவும் ஆபத்தானது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அவுஸ்திரேலியாவை நோக்கிப் படகு மூலம் பயணம் செய்வதை விடவும் நியூசிலாந்து நோக்கிய பயணம் சிரமமானது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எனினும், புகலிடக் கோரிக்கையாளர்களும், சட்டவிரோத ஆட்கடத்தற்காரர்களும் இந்த ஆபத்தை எதிர்நோக்கத் தயார் நிலையில் இருப்பதாக அவர் தெரிவித்துள்ளார்.

இந்த விடயத்தை மிகவும் உன்னிப்பாக அவதானித்து வருவதாகத் தெரிவித்துள்ளார்.

நியூசிலாந்து நோக்கிய பயணமானது மிகவும் கடினமானது ஏன் பதில் மாற்றுக் கருத்து இல்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எனினும், அவுஸ்திரேலியா தனது எல்லைப் பாதுகாப்பை கடுமையாக்கி வரும் காரணத்தினால் நியூசிலாந்து போன்ற வேறு நாடுகளின் பக்கம் சட்டவிரோத புகலிடக் கோரிக்கையாளர்களின் கவனம் திரும்பியுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

இதுவரையில் நியூசிலாந்துக்கு எந்தப் படகும் சென்றடைய வில்லை என்ற போதிலும் அண்மையில், நியூசிலாந்து நோக்கி படகு மூலம் பயணம் செய்ய முயற்சித்த 75 இலங்கைப் புகலிடக் கோரிக்கையாளர்கள் இலங்கை பொலிஸாரினால் கைது செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

சட்ட ரீதியாக நியூசிலாந்தில் குடியேறுவோரை வரவேற்பதாகவும் சட்டவிரோத புகலிடக் கோரிக்கையாளர்களை நிராகரிப்பதாகவும் நியூசிலாந்து பிரதமர் ஜோன் கீ தெரிவித்துள்ளார். (2)

# வெளிநாடுகளில் இலங்கை பணியாளர்களின் பாதுகாப்பை அரசாங்கம் உறுதி செய்யவேண்டும்

## மனிதவுரிமைகளுக்கான விசேட பிரதிநிதி

வெளிநாடுகளில் பணியாற்றி வரும் இலங்கையர்களின் பாதுகாப்பை அரசாங்கம் உறுதி செய்ய வேண்டுமென ஐக்கிய நாடுகள் அமைப்பு வலியுறுத்தியுள்ளது.

வெளிநாட்டு வேலை வாய்ப்பு நிறுவனங்கள் மற்றும் அதனுடன் தொடர்புடைய விடயங்களை சிறந்த முறையில் கண்காணிப்பதற்கு ஓர் பொறிமுறைமையை உருவாக்க வேண்டுமென ஐக்கிய நாடுகள் அமைப்பின் வெளிநாட்டுப் பணியாளர்களின் மனிதவுரிமைகளுக்கான விசேட பிரதிநிதி பிரான் கோயிஸ் கிரிபியாயு தெரிவித்துள்ளார்.



தொழில் வாய்ப்பு வழங்கும் நிறுவனங்கள், துணை முகவர்கள் போன்றவர்கள் தொடர்பில் தெளிவான கொள்கையொன்று உருவாக்கப்பட வேண்டியது அவசிமாகின்றது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

சுமார் 1.8 மில்லியன் இலங்கையர்கள் வெளிநாடுகளில் வாழ்ந்து வருவதாகத் தெரிவித்துள்ளார். உரிய வசதிகளின்றி உரிய சம்பளம் வழங்காது வெளிநாடுகளில் தொழில் வாய்ப்பு பெற்றுச் செல்லும் பணியாளர்கள் பாதிக்கப்படுவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

பெண்கள், இளைஞர்கள் மற்றும் கிராம மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தக் கூடிய திட்டங்களை இலங்கை அரசாங்கம் உருவாக்கிக் கொடுக்க வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார்.

வெளிநாடுகளில். இலங்கைப் பணியாளர்கள் துன்புறுத் தப்படுவதனை தடுத்து நிறுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென அவர் தெரிவித்துள்ளார். (2)

## வெளிவிவகார அமைச்சர் அல்ஜீரியா பயணம்

(கொழும்பு)

வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல். பீரிஸ் அல்ஜீரியாவிற்கு விஜயம் செய்யவுள்ளார்.

அல்ஜீரியாவில் நடைபெறவுள்ள அணிசேரா நாடுகளின் அமைச்சர்கள் மாநாட்டில், அமைச்சர் பீரிஸ் பங்கேற்கவுள்ளார். நேற்றைய தினமும் இன்றைய தினமும் அல்ஜீரியாவில் இந்த மாநாடு நடைபெறவுள்ளது. அணிசேரா நாடுகளின் வெளிவிவகார அமைச்சர்கள் இந்த மாநாட்டில் பங்கேற்க உள்ளனர்.

இம் மாநாட்டில் அமைச்சர் பீரிஸ் உரையாற்ற உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. மேலும், அல்ஜீரிய வெளிவிவகார அமைச்சருடன் இரு தரப்பு உறவுகள் குறித்து அமைச்சர் பீரிஸ் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார். ஏனைய வெளிவிவகார அமைச்சர்களுடனும் அவர் பேச்சுவார்த்தை நடத்துவார் எனத் தெரிவிக்கப்படுகிறது. (2)

# அரச நிறுவனங்களின் மீது மக்களின் நம்பிக்கை வீழ்ச்சி

(கொழும்பு)

அரசாங்க நிறுவனங்களின் மீதான மக்களின் நம்பிக்கை வெகுவாக வீழ்ச்சியடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இலஞ்ச ஊழல் தவிர்ப்பு ஆணைக் குழுவிற்கு கிடைக்கப்பெறும் முறைப்பாடுகளின் எண்ணிக்கை பாரியளவில் வீழ்ச்சியடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஆணைக்குழுவின் மீதான மக்களின் நம்பிக்கை வீழ்ச்சியடைந்தமை இவ்வாறு முறைப்பாடுகளின் எண்ணிக்கை குறைவதற்கு காரணம் என பெயர் குறிப்பிட விரும்பாத ஆணைக்குழுவின் உயர் அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

முறைப்பாடுகள் தொடர்பில் ஆணைக்குழு துரிதகதியில் காத்திரமான நடவடிக்கைகளை எடுப்பதில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

எவ்வாறெனினும், இந்தக் குற்றச்சாட்டை நிராகரிப்பதாக ஆணைக் குழுவின் பணிப்பாளர் நாயகம் லக்ஸ்மி ஜயவிக்ரம தெரிவித்துள்ளார்.

முறைப்பாடுகள் தொடர்பில் துரித கதியில் விசாரணை நடத்தப்பட்டு வருவதாகவும் உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எனினும், அரசியல் அழுத்தங்கள் மற்றும் பிற காரணிகளினால் விசாரணைகளை சுயாதீனமான முறையில் நடத்த சாத்தியம் கிட்டுவதில்லை என உள்ளகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (2)

# இன்று ஒரு தகவல்

## விண்வெளியும் மனநிலையும்

"ஒரு 20 அடி நீளம், 18 அடி அகலமும் உள்ள அறையொன்றினுள்ளே இரு நபர்களை வைத்து பூட்டுங்கள்", அவர்களுக்கும் வெளியுலகத்திற்கும் எதுவிதமான தொடர்புகளும் இருக்கக் கூடாது.

அனைத்தையும் துண்டிக்க வேண்டும். ஓரிரு மாதங்கள் வரை அவர்களை வெளியிலேயே விடக்கூடாது. இப்படியாகச் செய்தால், ஒரு கொலை நடைபெறுவதற்கான சூழ் நிலையை உருவாக்கிவிட்டது என்று அர்த்தம்.

ரஷ்ய விண்வெளி வீரர் ஒருவர் எழுதி வைத்திருந்த தினசரி குறிப்பேட்டில் இவ்வாறு இருந்தது. அவர் பெயர் வாலரி நியுமின். இவர் 1980 ஆம் ஆண்டு இன்னொருவருடன் கூட விண்வெளிக்குப் போய் திரும்பி வந்தவர்.

ரொக்கெட்டிலே விண்வெளிக்குச் சென்று சிறிது நாட்கள் அங்கே இருந்து விட்டு திரும்பி வரும்போது அவர்களது மனநிலை மிகவும் பாதிப்படைந்து காணப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ரொக்கெட்டிலே மிகவும் துணிச்சலாகத்தான் புறப்படுகிறார்கள். இருந்தாலும் ரொக்கெட் பயணிக்கும் பாதையோ எல்லையில்லாமல் பரந்துகிடக்கும் வானமாகும்.

அங்கே என்ன நடக்கும் என்று யாருக்குமே தெரியாது. எந்தக் கணனியென்றாலும் அதைத் துல்லியமாகக் கணக்கு சொல்லாது பயணிக்கு ரொக்கெட்டில் ஏதாவது கோளாறு நேர்ந்தால் வீதியில் ஓரமாக நிறுத்தி பழுதுபார்க்க முடியுமா? போனால் போனதுதான்.

சுவாசிப்பதற்கு போதியளவு வெளி கிடைக்காது. பகல் என்றால் வெப்பமாகவும், இரவென்றால் நினைத்துப் பார்க்க முடியாதளவு இருள் சூழ்ந்தும் காணப்படும்.

இது மாதிரியான அபாயத்தை மனதிலே சுமந்து கொண்டுதான் விண்வெளிவீரர்கள் ரொக்கெட்டிலே பயணிக்கிறார்கள்.

ரொக்கெட் எவ்வளவு பெரியது? ஒரு சிறிய கூடுதான் விண்வெளிவீரன் அமரும் இடமாக அமைந்திருக்கும். உள்ளே இருந்து அழுதாலும் சிரித்தாலும் தரையில் இருந்து தான் பதில் வரவேண்டும்.

1982 இலே இரண்டு விண்வெளி வீரர்கள் ஒரே விண்கலத்திலே புறப்பட்டார்கள்.

இவர்கள் இருவரும் விண்கலத்தினுள் அடி வைத்ததிலிருந்து பேசுவது கிடையாது. மிகவும் அவசியம் என்றால், ஓரிருவார்த்தைகள் பேசிக்கொள்வார்கள். இப்படியாக புழுக்கமான, இறுக்கமான மௌனமான சூழ்நிலையிலேயே விண்வெளி வீரர்கள் 211 நாட்களைக் கடத்தி இருக்கிறார்கள்.

இவர்கள் இப்படியாக பல்லைக் கடித்துக்கொண்டு, 211 நாட்களையும் விண்ணிலே செலவு செய்து விட்டு, தப்பினோம், பிழைத்தோம் என்று மீண்டும் பூமிக்கு வந்து சேர்ந்தார்கள்.

அந்த இருவரில் ஒருவர் தான் இதையெல்லாம் தனது தினக் குறிப்பில் எழுதி வைத்துள்ளார். இக் குறிப்பேடு 1983 ஆம் ஆண்டிலே சோவியத் யூனியனிலே புத்தகமாக வெளிவந்துள்ளது.

விண்வெளி வீரர்கள் மீண்டும் பூமியில் தரை இறங்கியதும் அவர்கள் இரத்தப் பரிசோதனைக் குட்படுத்தப்படுவர். அப்போது ஹைட்ரோ கார்ட்டிடுசோன், காட்டி கோலமன் ஆகிய வேதியல் பொருட்கள் இவர்களது உடம்பில் சுரந்து இருப்பது கண்டறியப்படும்.

இந்த வேதியியல் பொருளானது ஒரு சாதாரண மனிதன் பதட்டமடையும் போது ஏற்படுகிறது.


பின்னர் அவர் ஓய்வெடுக்கும்போது...... இப் பொருள் இயல் பாகவே மறைந்து விடும். ஆனால் விண்வெளி வீரர்களின் இரத்தத்திலே இது எப்போதுமே இருக்கிறது.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இணைய பாவனைக்கு தனியான சிம் அட்டையினை பயன்படுத்துங்கள்

## பொலிஸ் ஊடகப்பேச்சாளர் வலியுறுத்து



(கொழும்பு)

இணையத்தின் ஊடாக வங்கி சேவைகளை பயன்படுத்துவோர் கூடுதல் அவதானத்துடன் செயற்படுமாறு பொலிஸ் திணைக்களம் அறிவித்துள்ளது.

இணைய குற்றங்கள் அதிகரித்து வரும் நிலையில், பொதுமக்கள் விழிப்புடன் செயற்பட வேண்டும் என பொலிஸ் ஊடக பேச்சாளரும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருமான அஜித் ரோஹண நேற்று முன்தினம் தெரிவித்துள்ளார்.

இணைய பாவனைக்கென தனியான சிம் அட்டையை பயன்படுத்துமாறு பொதுமக்களுக்கு அவர் அறிவுறுத்தியுள்ளார்.

மேலும், இணைய வங்கிச் சேவைகளை பயன்படுத்தும் சந்தர்ப்பங்களில் குறித்த இணையத்தளங்களின் உண்மைத் தன்மையை இனங்காணுவது அவசியம் என்றும் வங்கிகளின் இணையத்தளங்கள் என சில போலியான இணையத்தள முகவரிகள் மின்னஞ்சல் மூலம் கிடைக்கப்பெறலாம் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

வங்கி கணக்கு விபரங்கள், கடவுச் சொல் விபரங்கள், மற்றும் தனிப்பட்ட விபரங்களை கோரி வரும் மின்னஞ்சல்களுக்கு பதிலளிக்க வேண்டாம் எனவும் குறித்த வங்கிகளின் உத்தியோகபூர்வ இணையத்தளங்களில் வங்கி சேவை நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அவர் கூறினார்.

இணைய குற்றங்களை கண்டறிவதற்காக உருவாக்கப்பட்டுள்ள புலனாய்வு துறையினரின் சிறப்பு பிரிவிற்கு சமூக வலைத்தளங்கள் தொடர்பில் 235 முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக ஊடக பேச்சாளர் தெரிவித்தார்.

இந்த முறைப்பாடுகளில் இணைய வங்கி தொடர்பில் 9 முறைப்பாடுகளும் மின்னஞ்சல் தொடர்பாக 34 முறைப்பாடுகளும் அடங்குவதாக அஜித் ரோஹண சுட்டிக்காட்டினார்.

இதேவேளை கைத்தொலைபேசி பாவனையாளர்கள் தமக்கான தொடர்புகளை பெற்றுக் கொள்ளும் போது அவற்றை பதிவு செய்து கொள்ள வேண்டும் என்று வலியுறுத்தப்பட் டுள்ளனர்.

இலங்கையின் தொலைத தொடர்பு ஒழுங்கமைப்பு ஆணைக்குழு இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளது.

இந்த கோரிக்கை கைத்தொலைபேசி விற்பனையாளர்களுக்கும் விடுக்கப்பட்டுள்ளது.

இதுவரைகாலமும் தமது தொலைபேசியை பதிவு செய்து கொள்ளாதவர்கள், #132# என்ற இலக்கங்களை அழுத்துவதன் மூலம் அவற்றை பதிவு செய்து கொள்ள லாம் என்றும் ஒழுங்கமைப்பு ஆணைக்குழு கேட்டுள்ளது.

இந்த கோரிக்கை, தேவையற்ற குற்றச்செயல்களை தடுக்கவே விடுககப்பட்டுள்ளதாக ஒழுங்கமைப்பு ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (2)

# இலங்கைக்கு நன்மதிப்பை சுஷ்மா ஏற்படுத்துவார்

## மீள்குடியேற்ற பிரதியமைச்சர் பெருமிதம்

(மட்டக்களப்பு)

இலங்கை குறித்து நன்கறிந்த வெளிவிவகார அமைச்சர் ஒருவர் இந்தியாவில் நியமிக்கப்பட்டுள்ளதாக மீள்குடியேற்ற பிரதியமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து கூறுகையில், அயல் நாடான இந்தியாவில் அரசியல் மாற்றம் ஏற்பட்டுள்ளது.

நட்புறவை இந்திய அரசாங்கம் பேணிக்கொண்டு மேலும் கூடுதலான அபிவிருத்திகளையும் கூடுதலான வளங்களையும் கொண்டிருப் பதானது இலங்கை அரசாங்கத்திற்கு கூடுதலான நன் மதிப்பை உலகத்தில் ஏற்படுத்துவதற்கு சிறந்த ஒரு களமாக தற் பொழுது இந்தியா மாற்றப்பட்டிருக் கின்றது.

நான் நினைக்கின்றேன் எங்களது மதிப்பிற்குரிய மோடியுடைய அரசாங்கம் சார்க் நாடுகளுடன் சிறந்த நட்புறவைப் பேணி சிறந்த ஒரு அமைதியான சூழ்நிலையை பிராந்தியத்தில் ஏற்படுத்துவதற்கு வழிவகுக்கின்ற ஒரு அரசாங்கமாக தற்பொழுது மாற்றமடைந்துள்ளது என்றார்.

அத்துடன், இந்திய வெளி விவகார அமைச்சராக சுஸ்மா சுவராஜ் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

அவர் ஏற்கனவே இங்கு வந்திருந்தபோது வன்னியில் உள்ள இடம்பெயர்ந்த முகாமிற்கு சென்றார்.

நிலைமைகளறிந்த ஒரு வெளிவவகார அமைச்சராக அவர் காணபபடுகின்றார் எனவும் தெரிவித்தார். (2)

## கும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.நல்லூர் நாவலர் வீதி மடத்தார் பதி உறையும் ஸ்ரீ சீரடி சாயி பாபாவின் புதிய உற்சவ மூர்த்திக்கான மகாகும்பாபிஷேகம் எதிர்வரும் ஜூன் மாதம் 12 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9மணி முதல் முற்பகல் 11.30 மணிவரை நடைபெறவுள்ளது.

அன்றையதினம் காலை மணி முதல் காலை 10 மணிவரை பால் காப்பு நடைபெறும்.

மாலை 4.30 மணிக்கு வசந்த் மண்டபப் பூசை, திருவூஞ்சல் நடைபெற்று பாபாவின் வீதி உலா இடம் பெறும்.

தொடர்ந்து24 நாட்கள் மாலை 4 மணிக்கு மண்டலாபிஷேகம் நடைபெறவுள்ளது. (அ)

# முடிந்தால் அரசில் இருந்து விலகுங்கள்

## வீரவன்சவிற்கு சவால் விடுப்பு

(கொழும்பு)

முடிந்தால் அரசாங்கத்தில இருந்து விலகுமாறு அண்மையில் தேசிய சுதந்திர முன்னணியில் இருந்து ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்து கொண்ட ஊவா மாகாண சபை உறுப்பினர் மிஹிமல் முனசிங்க அமைச்சர் விமல் வீரவன்சவிற்கு சவால் விடுத்துள்ளார்.

அரசாங்கத்தில் இருந்து கொண்டே அரசாங்கத்தை விமர்சிக்காது விலகுமாறு அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

பதுளை பகுதியில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அரசாங்கம் சரியான பாதையில் செல்லவில்லை எனவும் நாட்டில் குற்றச் செயல்கள் அதிகரித்துள்ளதாகவும் அமைச்சர் விமல் வீரவன்ச கடந்த சில நாட்களாக அரசாங்கத்தை விமர்சித்து வருகினறமை குறிப்பிடத்தக்கது. (2)

# எமது போர் வெற்றி துரோகச் செயலாகாது

## இராணுவத்தளபதி

போர் வெற்றியை துரோகச் செயலாக சில மேற்குலக நாடுகள் கருதுவதாக இராணுவத் தளபதி தயாரட் நாயக்க தெரிவித்துள்ளார்.

இராணுவத்தினருக்காக நடத்தப்பட்ட பயிற்சிப்பட்டறையொன்றின் நிறைவில் உரையாற்றிய போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

சிவிலியன்களை பயங்கரவாதத திலிருந்து மீட்டமையை சில மேற்குலக நாடுகள் துரோகச் செயலாக நோக்குகின்றன.

இராணுவத்தின் பணிகள் குறித்து உரிய பிரசாரம் அளிக்கப்படவில்லை.

உரிய முறையில் இராணுவத்தின் பணிகள் பிரசாரம் செய்யப்பட்டிருந்தால் மேற்குலக நாடுகளின் போலிக் குற்றச்சாட்டுக்களை தவிர்த்திருக்க முடியும் என்றார். (2)

# போதைப்பொருள் கடத்துவோர் தொடர்பான தகவல் அம்பலம்

(கொழும்பு)

போதைப் பொருட்கடத்தல் வலையமைப்புடன் இணைந்து இலங்கைக்கு போதைப் பொருள் அனுப்பும் வெளிநாட்டவர் தொடர்பாக தகவல்கள் வெளியாகியுள்ளது.

போதைப் பொருள் கடத்தும் 6 இலங்கை பிரஜைகள் பற்றிய தகவல்கள் பொலிஸ் போதைப் பொருள் தடுப்பு பிரிவினருக்கு கிடைத்துள்ளன.

இந்த போதைப் பொருள் கடத்தல் வலையமைப்பின் முக்கிய நபர்களில் ஒருவரான கொழும்பு மாளிகாவத்தை பகுதியை சேர்ந்த நபர் தற்போது பாகிஸ்தான் அல்லது டுபாய் ஆகிய நாடுகளில் ஒன்றில் இருப்பதாக போதைப் பொருள் தடுப்பு பிரிவுக்கு தகவல் கிடைத்துள்ளது என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார்.

இந்த சந்தேக நபரை கைது செய்வதற்காக சர்வதேச பொலிஸார் மூலமாக சிகப்பு அறிக்கை பிடி விராந்து பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே பொலிஸ் போதைப் பொருள் தடுப்பு பிரிவினரால் கைது செய்யப்பட்ட 422 பேருக்கு எதிராக மேல் நீதிமன்றங்களில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

மேலும் 585 பேருக்கு எதிராக நீதவான் நீதிமன்றங்களில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

போதைப் பொருள் குற்றச் சாட்டை எதிர்நோக்கிய 55 பேருக்கு கடந்த5 ஆண்டுகளில் மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் மேலும் 178 பேருக்கு ஆயுட் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. (2)

## புலிச்சந்தேக நபர்கள் 77 பேர் கைது

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் மஉருவாக்கம் பெறுவதாக கிடைக்கப்பெற்ற தகவலை அடுத்து மேற்கொள்ளப்பட்ட விசாரணை நடவடிக்கைகளில் இதுவரை 77 பேர் சந்தேகததின் பேரில் கைது செய்யப்பட்டுளளதாக பொலிஸ ஊடகப் பேச்சாளர் அஜித்ரோஹண தெரி வித்துள்ளார்.

கடந்த மார்ச் மாதம் 6 ஆம் திகதி தொடக்கம் இதுவரையான காலத்தில் இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

அதில் 47 சந்தேகநபர்கள் தொடர்பில விசாரணை நடத்தப்பட்டுவருவதாக அவர் கூறினார். அதில் 6 பெண்களும் அடங்குவதாக அவர் குறிப்பிட்டார். (2)

# பிரிவுத்துயர் பகிர்வு

### குட்டித்தம்பி திருநாவுக்கரசு



ஊரெழுவைப் பிறப்பிடமாகவும் உரும்பிராய்,கனடா ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட குட்டித்தம்பி திருநாவுக்கரசு (இளைப்பாறிய ஆசிரியர்) கடந்த 26 ஆம் திகதி திங்கட்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக் கிரிஸ்யகள் இன்று காலை 9 மணிக்கு Ogden Funeral Homes,4164 Sheppard Ave East,Agincourt,ON M1S 1T3,Canada என்னும் முகவரியில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனம் செய்யப்படும்.


### முத்துலிங்கம் நீதிராஜன்



யாழ்.உரும்பிராயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட முத்துலிங்கம்நீதிராஜன் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை அன் று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் வேம்பன் மயானத்தில் தகனம் செய்யப்படும்.

### துரைராசா யோகேஸ்வரன்



வவுனியாவைப் பிறப்பிடமாகவும் ஜேர்மனியை வசிப்பிடமாகவும்கொண்டதுரைராசாயோகேஸ்வரன் கடந்த 26 ஆம் திகதி திங்கட்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் ஜேர்மனியில் நடைபெறும்.

### திருமதி வேலுப்பிள்ளை ஆச்சிமுத்து



காரைநகர் கோவளத்தை பிறப்பிடமாகவும் வேதரடைப்பை வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை ஆச்சிமுத்து நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை அன் று காலமானார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்றுகாலை 9 மணிக்கு வேதரடைப்பு இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் சாம்பலோடை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

### திருமதி ஜெயராஜா யேசுதாசன் அனிவேர்ஜினியா



யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட ஜெயராஜா யேசுதாசன் அனி வேர்ஜினியா கடந்த 23 ஆம் திகதி வெள்ளிக்கிழமை அன்று காலமானார். அன்னாரின் திருப்பலி நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு Emmanuel Christian Tamil Fellowship,454,Manor Park Christian Centre High Street North,Manor Park,Greater London E12 6Rh,UKஎன்னும் முகவரியில் ஒப்புக்கொடுக்கப்பட்டு பின்னர் பூதவுடல் நல்லடக்கம் செய்யப்படும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பூநகரி பாடசாலைகளின் தரங்கள் மீள்பரிசீலனை



(பூநகரி)

பூநகரி பிரதேசத்திலுள்ள பாடசாலைகளின் தரங்கள், மாணவர்களின் தொகைக்கேற்ப மாற்றப்படுமென வடமாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராஜா தெரிவித்துள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை பூநகரி பிரதேசத்திலுள்ள பாடசாலைகளில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பில் ஆராயும் கூட்டமொன்று இடம்பெற்ற போது அங்கு உரையாற்றுகையிலே அமைச்சர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

பூநகரி பிரதேச பாடசாலைகள் மூன்று தசாப்தங்களுக்கு முன்னர் இருந்த நிலையில் தற்போது இல்லை. பாடசாலைகள் தரமுயர்த்தப்பட்டமையே இதற்கு காரணமாகும்.

முன்னர் பூநகரி மகாவித்தியாலம் மாத்திரமே உயர்தர பாடசாலையாகவும் ஏனைய பாடசாலைகள் ஆரம்பப் பிரிவு, இடைநிலை பிரிவுகளையும் கொண்டதாக காணப்பட்டன.

இவ்வாறான நிலையில் பாடசாலைகள் இருந்த போது தரமான கல்வி மாணவர்களுக்கு கிடைத்ததோடு ஆசிரியர்களுக்கு பற்றாக்குறையும் இருக்கவில்லை.

எனினும் இப்பிரதேசத்திலுள்ள கிராமப்புற பாடசாலைகளும் க.பொ.த. உயர்தரம் வரை தரமுயர்த்தப்பட்டமையினால் கல்வியில் பல தாக்கங்கள் ஏற்பட்டுள்ளன.

இந்நிலையில் பாடசாலைகளில் மாணவர்களின் தொகை வீழ்ச்சியடைந்து 10 மாணவர்களுக்கு ஒரு ஆசிரியர் என்ற அடிப்படையிலே பூநகரி பிரதேசத்தில் கற்பித்தல் இடம்பெற்று வருகின்றது.

பத்து மாணவர்களுக்கு ஒரு ஆசிரியர் என்ற விடயத்தை ஏற்றுக்கொள்ள முடியாதுள்ளது.

எனவே, பாடசாலை சமூகத்தினர், பெற்றோர்கள் இப்பிரதேச கல்வியில் நிலவும் இந்நிலைமையை உணர்ந்து கொள்ள வேண்டும்.

இவ்வாறாக மாணவர்களின் தொகையில் பாரிய வீழ்ச்சியும் ஆசிரியர் பற்றாக்குறையும் ஏற்படுவதற்கு பாடசாலைகள் தரமுயர்த்தப்பட்டதே காரணமாகிறது.

எனவே, பூநகரி பிரதேசத்திலுள்ள பாடசாலை நிலைமைகளை மீள்பரிசீலனை செய்து தரம் உயர்த்தப்படுவதில் மாற்று நடவடிக்கை தேவையென வலியுறுத்தப்படுகின்றது.

இதற்கு பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் உட்பட அனைவரும் ஒத்துழைப்பு வழங்குவது அவசியமாகும்.

இச் செயற்பாடானது இப் பிரதேசத்தின் கல்வி அபிவிருத்தியை முன்னேற்றுவதற்கான நடவடிக்கை. இதையிட்டு எவரும் முரண்படக்கூடாது என்றார்.

இக்கூட்டத்தில் கிளி/.வலயக் கல்விப் பணிப்பாளர் க.முருகவேல், பூநகரி கோட்டக்கல்விப் பணிப்பாளர் எஸ்.தர்மரத்தினம், பூநகரி பிரதேச சபைத் தலைவர் பி.ஸ்ரீஸ்கந்தராசா, ஓய்வுநிலை பூநகரி கொத்தணி அதிபர் க.குலசேகரம், வடமாகாண கல்வி அமைச்சின் திட்டமிடல் பணிப்பாளர் திருஞானசீலன் ஆகியோர் கலந்து கொண்டனர். (9-84)

## வலம்புரி செய்தியையடுத்து

# கிளி/பொருளாதார நிலைய சந்தை கட்டட வேலைகள் ஆரம்பம்



(கிளிநொச்சி)

கிளிநொச்சி பொருளாதார நிலைய சந்தைக்கான கட்டுமானப் பணிகள் வலம்புரி செய்தியையடுத்து ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இச் சந்தை அமைப்பதற்காக கடந்த 2011 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 20 ஆம் திகதி கிளிநொச்சி அம்பாள்குளப் பகுதியில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் அடிக்கல் நாட்டப்பட்டது.

மஹிந்த சிந்தனையின் தேசிய புத்துயிர் அமுலாக்கல் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழே இச் சந்தை அமைக்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டது.

இந்நிலையில், கட்டுமானப் பணிகள் இடம்பெறவில்லையெனவும் விரைவில் ஆரம்பிக்க வேண்டுமெனவும் வலியுறுத்தி கடந்த 2013 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 14 ஆம் திகதி வலம்புரி பத்திரிகை செய்தி வெளியிட்டிருந்தது.

இதன்பிரகாரம் பொருளாதார நிலைய சந்தைக்கான கட்டுமானப் பணிகள் தற்போது இடம்பெற்று வருகின்றன.

சந்தைக்கான இரு கட்டடங்களின் வேலைகள் பூர்த்தியடைந்துள்ள நிலையில் கட்டடங்களை மேலும் அமைப்பதற்கான அத்திபாரங்கள் அமைக்கும் வேலைகள் இடம்பெற்று வருகின்றன.


இக் கட்டட வேலைகள் நிறைவடைந்து பணிகள் ஆரம்பிக்கப்படும் பட்சத்தில் பிரதேச வியாபாரிகள், வர்த்தகர்கள் பயனடையவுள்ளமை சுட்டிக்காட்டத்தக்கது. (9-271)

## ஆலோசனை கூட்டம்

(கிளிநொச்சி)

உருத்திரபுரீஸ்வரர் ஆலயத்தின் ஆனி மஹோற்சவ திருவிழா ஆலோசனைக் கூட்டம் நாளை மறுதினம் சனிக்கிழமை ஆலய முன்றிலில் பிற்பகல் 2 மணிக்கு நடைபெறவுள்ளது.

இதில் மஹோற்சவ திருவிழாவின் அனைத்து உபயகாரர்கள், உருத்திரபுரம் பகுதி கிராம சேவையாளர்கள், உருத்திரபுரம் பாடசாலை அதிபர்கள், மங்கல வாத்திய உரிமையாளர், ஒலி, ஒளி அமைப்பாளர், சாத்துப்படி உரிமையாளர், பந்தல் உரிமையாளர் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு அறங் காவலர் சபைத் தலைவர் தி.இராசநாயகம் அறிவித்துள்ளார். (9-254)



வடக்கின் வசந்தம் திட்டத்தினூடாக பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் முழங்காவில் மகாவித்தியாலய தேசிய பாடசாலைக்கு 35 மில்லியன் ரூபா செலவில் 3 மாடிகளைக் கொண்ட கட்டடம் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளது. பூர்த்தியடைந்துள்ள இக் கட்டடத்தைப் படத்தில் காணலாம். (படம் :-பூநகரி செய்தியாளர்)

## மாணவனைக் காணவில்லை

(குருமன்காடு)

வவுனியா கல்மடு மகாவித்தியாலயத்தில் க.பொ.த. உயர்தரத்தில் கலைப்பிரிவில் கல்வி கற்று வந்த மகாலிங்கம் றஜீவன் (வயது 17) என்ற மாணவன் நேற்று முன்தினம் காணாமற் போயுள்ளதாக அறிய முடிகின்றது.

காணாமற்போன அன்று தரணிக்குளம் சாஸ்திரி கூழாங்குளம் எனும் முகவரியில் அமைந்துள்ள தனது வீட்டிலிருந்து அதிகாலை 5 மணிக்கு மரக்கறிகளை கொண்டு வவு. நகரப் பகுதியிலுள்ள தினசரி சநதை வியாபாரியிடம் கொடுத்துவிட்டு பின்னர், மரக்கறி விற்பனை நிலையத்துக்கு எதிர்ப்புறமாகவுள்ள (பாடசாலை உபகரணங்கள்) விற்பனை நிலையத்துக்கு சென்று வருவதாக கூறிவிட்டு சென்ற மாணவனே காணாமற் போயுள்ளதாக கூறப்படுகின்றது.

இந்தச் சம்பவம் தொடர்பில், வவுனியா பொலிஸ் நிலையத்திலும், தரணிக்குளம் பொலிஸ் நிலையததிலும் மனிதவுரிமைகள் ஆணைக குழுவிலும், வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தனிடமும் மாணவனின் பெற்றோரால் முறைப்பாடு செய்யப்பட்டது. (9-250)




## கண்டெடுப்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி அம்பாள் குளப்பகுதியில் காணாமற்போன மோட்டார் சைக்கிள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

கடந்த ஞாயிற்றுக்கிழமை அம்பாள் குளப்பகுதியில் மரணச்சடங்கு இடம்பெற்ற வீடொன்றின் முன்னால் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த வாகனங்களில் மோட்டார் சைக்கிளொன்று காணாமற் போயிருந்தது.

இது தொடர்பில் கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது.

இந்நிலையில் கடந்த திங்கட்கிழமை குறித்த மோட்டார் சைக்கிள் ஆட்களற்ற காணியொன்றினுள் போடப்பட்ட நிலையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. (9-271)

# பொதுமக்களுக்கு சீரான சேவையை வழங்க போக்குவரத்து சங்கங்கள் முன்வரவேண்டும்

கடந்தகால யுத்த இன்னல்களில் இருந்து மீண்டு சுதந்திர வாழ்க்கை வாழ முயற்சி செய்யும் எம் மக்களுக்கு போக்குவரத்து என்பது மிக முக்கியமானது. இந்த சேவையை சீராக வழங்க அனைத்து போக்குவரத்து சங்கங்களும் முன்வரவேண்டும என வடமாகாண மீன்பிடி போக்குவரத்து மற்றும் வர்த்தக வாணிப அமைச்சர் பா.டெனஸ்வரன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

வடமாகாணத்தின் 101 நாட்கள் வேலைத்திட்டத்தின் கீழ் வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களின் தனியார் பேருந்து உரிமையாளர் சங்கங்களின் நிர்வாகங்கள் புனரமைக்கப்பட்டுள்ளன. அதே போல் இன்னும் ஓரிரு நாட்களில் யாழ்ப்பாணம், மன்னார் ஆகிய மாவட்டங்களினதும் பேருந்து உரிமையாளர் சங்க கூட்டங்கள் விரைவில் நடைபெறவுள்ளது என்றும் அது தொடர்பான மேலதிக விபரங்களை யாழ்ப்பாணம நாவலர் வீதியில் அமைந்துள்ள வடமாகாண மீன்பிடி போக்குவரத்து மற்றும் வர்த்தக வாணிப அமைச்சில் பெற்றுக் கொள்ளலாம் என சம்பந்தப்பட்டவர்களுக்கு அறிவுறுத்தப் படுகின்றது.

அத்துடன் தனியார் மற்றும் அரசியல் செல்வாக்குகளுக்கு உட்பட்டு தனனிச்சையாக இயங்கும் சங்கங்கள மீது வடமாகாண போக்குவரத்து அதிகார சபையின் சுற்றுநிருபம் வெளியானதும் பொருத்தமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என அவர் தெரிவத்தார். (9-6)

## பயனாளிகள் இணைப்பு

(கிளிநொச்சி)

இலங்கை சமூக பாதுகாப்பு சபையின் சுயதொழில் ஓய்வூதிய திட்டத்தின் கீழ் பூநகரி பிரதேச செயலக பிரிவில் பயனாளிகளை இணைப்பதில் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் அதிக பங்களிப்பை வழங்கி வருகின்றனர்.

இதன்படி இவ்வருடத்தில் 599 பயனாளிகளை இணைத்துள்ளார்கள். இதில் கிராம அலுவலர்கள் 101 பயனாளிகளை இணைத்துள்ளனர்.

பிரதேச செயலரின் வழிகாட்டலின் கீழ் சமூக சேவைகள் அலுவலர் செ.சுரேந்திரா இந்த ஓய்வூதியத் திட்டத்தை கிராமம் கிராமமாகச் சென்று முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (9-254)

# மன்னார் மக்கள் எதிர்நோக்கும் மொழிப்பிரச்சினை எடுத்துரைப்பு

(குருமன்காடு)

பிரித்தானிய உயர்ஸ்தானிகராலயத்தின் அரசியல்துறை பொறுப்பாளர் டானியல் பெயின்டர் மற்றும் திட்டமிடல் பொறுப்பாளர் சஜானி ரணதுங்க ஆகியோர் நேற்றையதினம் புதன்கிழமை மன்னார் மாவட்டத்துக்கான விஜயமொன்றை மேற்கொண்டுள்ளனர்.

மன்னார் வாழ்வுதையத்தில் இடம் பெற்ற மொழி உரிமை தொடர்பான கலந்துரையாடலில் இவர்கள் கலந்து கொண்டு மன்னார் மாவட்ட மக்கள் எதிர்நோக்கும் மொழி தொடர்பான பிரச்சினைகள் தொடர்பில் கேட்டறிந்தனர்.

குறிப்பாக மன்னார் மாவட்ட அரச திணைக்களங்களில் இருந்தும ஏனைய மாவட்டங்களில் இருந்தும் தமிழ் பேசும் ஒருவருக்கு சிங்கள மொழியில் அனுப்பி வைக்கப்படும் கடிதங்கள், வைத்தியசாலையில் நோயாளர்கள் வைத்தியர்களுடன் உரையாடும் போது ஏற்படும் மொழிப பிரச்சினைகள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டதுடன் மன்னார் மாவட்டத்தில் இடம்பெற்றுவரும் காணி அபகரிப்பு தொடர்பிலும் தெளிவு படுத் தப்பட்டது. (9-250)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளிநொச்சியின் இரு பெரும் கல்லூரிகளின் மாபெரும் துடுப்பாட்டப் போட்டி-2014
# நீலங்களின் சமர்- Battle of Blues

**கிளி/கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலயம் எதிர் கிளி/ கிளிநொச்சி இந்துக்கல்லூரி**

**இடம்:- கிளி/ கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலய விளையாட்டு மைதானம்**

**காலம்:- 30,31/05/2014**

**நேரம்:- 30/05/2014/ தொடக்க நிகழ்வு பி.ப. 1.00 மணி**
**31/05/2014 இறுதி நாள் நிகழ்வு பி.ப. 4.00 மணி**



கிளி/ கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலயம்

**முன் வரிசை இடமிருந்து வலமாக**

இ.செந்தூரன் (பயிற்சியாளர்), திரு.ப.ஜோயல் பியசீலன் (விளையாட்டு முகாமையாளர்), திரு.மு.இரவீந்திரன் (அதிபர் கிளி/ கிளிநொச்சி ம.ம.வி), திரு.ந.நவரஞ்சன் (விளையாட்டுப் பொறுப்பாசிரியர், கிளி/கிளி.இந்துக் கல்லூரி), சி.டிலுக்சன் (அணித்தலைவர்), க.லகிதரன் (அணி உதவித் தலைவர்), இ.புதியவன், டொரிக்ஸ் தீபன், கரிகரன், த.விக்டர் புளோரின், கே.டனார்த்தன், த.சசிகரன், ந.ரிசாந்தன், சி.லக்சன், இ.குகனேஸ்வரன், பி.பிரதீப், கு.டசிந்தன், வை.ஜெனுப்பிரியன், வி.யுவராஜ்



கிளி/ கிளிநொச்சி இந்துக்கல்லூரி

**முன் வரிசை இடமிருந்து வலமாக**

திரு.சி.லெனின்(உதவிப்பயிற்றுநர்), திருமதி.க.தர்மகுலசூரியர் (பிரதி அதிபர்), தி.தர்சன், திரு.கி.விக்னராசா (அதிபர்), அ.மயூரன்( அணித்தலைவர்), கி.சிவச்செல்வன் (பொறுப்பாசிரியர்), சோ.கரிதரன்,

**பின் வரிசை இடமிருந்து வலமாக**

அ.டினேஸ், ச.பானுசன், பு.கிறிஸ்ரோ ரஞ்சித்குமார், வி.பிரவீன்ராஜ், ம.அஜித்ஜெரோம், க. கயூலன், ல.நிர்மலன் ஜெராட், க.கஜேந்திரன், [illegible], க.சசிராஜ், யூட்றொபின்சன்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாம் முன்னேற்றப் பாதையில் செல்வதே நம்மவர்களையும் முன்னேறச் செய்யச் சிறந்த வழி.
~ ஸ்ரீ அன்னை

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் பயன்தரும் கூட்டமாக மாறட்டும்

மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் அந்தந்த மாவட்டங்களின் அபிவிருத்தி உள்ளிட்ட சகல பிரச்சினைகளும் ஆராயப்படுவது வழக்கம்.

அதிலும் வட மாகாணத்தில் உள்ள மாவட்டங்களில் நடைபெறும் ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, வடக்கின் முதல்வர் சி.வி.விக்னேஸ்வரன் ஆகியோரின் இணைத்தலைமையில் நடைபெறுவது முக்கியமான விடயமாகும்.

இணைத்தலைமையில் நடைபெறும் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர்கள், மாகாண சபை உறுப்பினர்கள், பிரதேசசபைத் தவிசாளர்கள் எனப் பல தரப்பினரும் கலந்து கொள்வதுடன் அரச அதிகாரிகளும் பங்கேற்கின்றனர்.

இவ்வாறாக வடக்கு மாகாணத்தின் அரசியல் தலைமைகளும் அதிகாரிகளும் பங்கேற்கும் இக் கூட்டமானது பொதுமக்களுக்குப் பயன் தரும் கூட்டமாக இடம்பெறுவது அவசியம்.

எனினும் ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டங்கள் பல சந்தர்ப்பங்களில் கட்சிவாதம் சார்ந்து ஒருவரை ஒருவர் எதிர்த்து உரையாற்றுவதாக அமைகின்றதே தவிர ஆக்கபூர்வமான விடயங்கள் முன்னெடுக்கப்படுவதாகத் தெரியவில்லை.

அதிலும் ஒரு சிலர் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தாறுமாறாகக் கதைத்து கூட்டத்தின் இலக்கைத் திசை திருப்பி விடுகின்றனர். இத்தகையவர்களின் கதைகளைப் பார்க்கும் போது இவர்கள் எச் சந்தர்ப்பத்திலும் எதிர்ப்புவாத சிந்தனை கொண்டவர்களாக இருப்பதைக் காணமுடியும்.

முப்பது வருடகாலப் போராட்டத்தில் எங்களுக்கான கிடைப்பனவு எதுமில்லை என்பது மட்டுமல்ல, எங்களுக்கு எதிராக-எங்கள் இனத்தின் இருப்புக்குச் சவாலாக முன்னெடுக்கப்படும் விடயங்கள் எங்களை மிக மோசமாகப் பாதிக்கின்றது.

இந்நிலையில் நாங்கள் அரசியல் பேதங்களைத் தூக்கிப்பிடித்து எங்களை நாங்களே அழித்துக்கொள்ளாமல், எழுதாத யாப்பின் அடிப்படையில் எங்களுக்குள் ஒரு புரிந்துணர்வை ஏற்படுத்த வேண்டும்.

நாங்கள் எல்லோரும் தமிழர்கள். எனவே, யார் எந்தப் பக்கம் என்பதற்கு அப்பால், எங்கள் மக்கள் படும் துன்பத்தை நாங்கள் உள்ளுர உணர்கின்றோம். அப்படியாயின் கிடைக்கின்ற அத்தனை சந்தர்ப்பங்களையும் பயன்படுத்தி எங்கள் மக்களுக்கான சேவையைச் செய்வது எங்கள் ஒவ்வொருவரினதும் கடமையாகும்.

அண்டை நாடு உதவும் என்ற எதிர்பார்ப்போ அல்லது இந்தியப் பிரதமராக மோடி வந்தால் எங்களுக்கு ஏதும் கிடைக்கும் என்ற சிந்தனைகளோ அதீதமாக இருப்பது அர்த்தமற்றது.

மோடி பிரதமரானால் எங்களுக்கு ஏதேனும் நன்மை ஏற்படும் என்று எதிர்பார்க்கலாம். அதற்காக மோடி எல்லாவற்றையும் எங்களுக்குப் பெற்றுத் தருவார் என்று பூரணமாக நம்புவதோ! அப்படியான ஒன்றை எதிர்பார்த்திருப்பதோ! அர்த்தமற்றது.

இத்தகைய எதிர்பார்ப்புகள் பிரதமர் மோடியுடனும் பகையை ஏற்படுத்தி; எங்கள் தமிழகத்தின் உடன் பிறப்புக்களுடனும் பகைக்கும் சூழ்நிலையை ஏற்படுத்தும்.

எனவே எங்களை நாங்களே காப்பாற்ற வேண்டும். அதற்கு முதலில் எங்களுக்குள் ஒற்றுமையை உருவாக்குவது அவசியம். அந்த ஒற்றுமை ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் பிரதி பலிக்குமாயின் எங்கள் தமிழ் அதிகாரிகளும் உங்கள் மீது நம்பிக்கை கொண்டு அரசு முன்னெடுக்கும் சில தீய திட்டங்களை முறியடிக்கும் உபாயங்களைக் கூறுவர்.

இதை விடுத்து நீங்களே ஒருங்கிணைப்புக் கூட்டத்தில் ஒப்பாரி வைத்தால், அதிகாரிகள் என்னதான் செய்யமுடியும்? ஆகையால் ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தை அறிவு பூர்வமாக-நல்ல சிந்தனைகளை முன்வைத்து, எங்கள் மக்களுக்குப் பயன்கிடைக்கும் வகையில் நடத்துங்கள்.

# அரசாங்கம் சில சருகுப் புலிகளை புலிகளாக நடமாடவிட்டிருக்கின்றது

### விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் குற்றச்சாட்டு

(கிளிநொச்சி)

விடுதலைப்புலிகளைத் தோற்கடித்த இலங்கை அரசாங்கம் இப்போது மீளவும் புலிகள் உயிர் பெறுவதாகச் சர்வதேசத்துக்குக் காட்ட முயற்சிக்கின்றது. இதற்காகத் தன்வசம் உள்ள சில சருகுப் புலிகளைப் புலிகளாக நடமாடவிட்டு, அவர்களுடன் தொடர்பு கொண்டார்கள் என்ற பெயரில் பலரைக் கைதுசெய்யும் நாடகத்தை அரங்கேற்றிக் கொண்டிருக்கிறது என்று வட மாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் குற்றம் சாட்டியுள்ளார்.

நேற்று புதன்கிழமை காலை 11 மணியளவில் கிளிநொச்சி மாவட்டச் செயலகத்துக்கு முன்னால் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஏற்பாடு செய்திருந்த நில அபகரிப்புக்கு எதிரான கவனயீர்ப்புப் போராட்டத்தில் கலந்து கொணடு உரையாற்றும்போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

போர் முடிந்து ஐந்து வருடங்கள் கடந்துவிட்டன என்பது உண்மைதான். ஆனால், ஆயுத ரீதியாக இலங்கை அரசாங்கம் தமிழ் மக்கள் மீது தொடுத்த போர் முடிவுக்கு வந்துள்ளதே தவிர, தமிழ் மக்கள் மீதான ஆக்கிரமிப்புப் போர் இன்னமும் நின்றபாடில்லை. போர்க் காலத்தைவிட வேகமாகத் தமிழ் மக்களின் நிலங்கள் அரசால் ஆக்கிரமிக்கப் பட்டுக் கொண்டிருக்கிறது.

எம்து மக்களைப் பலவந்தமாக அவர்களின் சொந்த நிலங்களில் இருந்து விரட்டியடித்துவிட்டு அந்த இடங்களில் படையினர் முகாமகளை அமைத்து வருகின்றனர். இராணுவத்தை வெளியேற்றி விட்டுத் தீங்கள் சொந்த இடங்களிலேயே தங்களை மீள்குடியேற்ற வேண்டும் என்று எமது மக்கள் ஜனநாயக ரீதியாகப் போராடி வருகிறார்கள். படையினரின் பிரசன்னம் தொடர்ச்சியா கத் தேவை என்று உலக நாடுகளுக்குக் காட்டி, நிரந்தரமாகவே எமது பகுதிகளில் இராணுவத்தை நிலைநிறுத்துவதற்காக அரசாங்கம் புலிகள் மீளிணைகிறார்கள் என்று புனைய ஆரம்பித்துள்ளது. இதனை மேலும் சோடிப்பதற்காகப் புலிகளுடன் தொடர்பு வைத்திருந்தார்கள் என்று சொல்லிப் பலரைக் கைது செய்தும் வருகிறது. ஜனநாயக ரீதியாகப் போராட முற்படுபவர்களுக்கும் புலிச்சாயம் பூசி பொய்வழக்குப் போட்டுக் கைது செய்கிறது.

இராணுவம் எமது மக்களுக்குச் சொந்தமான நிலங்களில் இருந்து வெளியேறியே ஆகவேண்டும். அரசாங்கத்தின் முடிக்குரிய காணிகளாக இருந்தாலும்கூட, அங்கு படையினர் நிலைகொள்வது பொதுமக்களுக்குப் பாதிப்பை ஏற்படுத்துமாக இருந்தால் அங்கிருந்தும் அவர்கள் வெளியேறுவதுதான் நீதியானது என்று முதலமைச்சர் நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன் தெளிவுபடுத்தியிருக்கிறார்.

அரசு மேற்கொள்ளும் திட்டமிட்ட நில அபகரிப்பை எப்பாடுபட்டாயினும் தடுத்தாக வேண்டும். இல்லாவிடில், தமிழ் மக்கள் தமது தாயகத்திலேயே சிறுபான்மையினராகி ஒட்டுமொத்த இலங்கைத் தீவும் சிங்கள பௌத்த பெருந்தேசிய இனத்துக்கு என்றாகிவிடும். எனவே இராணுவத்தின் திட்டமிட்ட நில அபகரிப்புக்கு எதிராக எமது போராட்டத்தை மேலும் விரைவும் விரிவும் படுத்த வேண்டும். இதற்குக் கட்சி வேறுபாடு இல்லாமல் நாம் அனைவரும் ஒன்றிணைய வேண்டும் என்றும் தெரிவித்தார். (செ-6)

## திருட்டு மின்சாரம் அபராதம் விதிப்பு

(சாவகச்சேரி)

சட்ட விரோதமாக மின்சாரம் பெற்ற மூவருக்கு தலா 10 ஆயிரம் ரூபாயும் மின்சார சபைக்கு இழப்பிட்டுத் தொகையாக தலா 47 ஆயிரத்து 800 ரூபாய் அபராதமும் செலுத்துமாறு சாவகச்சேரி நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

திருட்டு மின்சாரம் பெற்றவர்கள் தென்மராட்சியின் கைதடி, நுணாவில், நாவற்குழி ஆகிய பகுதிகளை சேர்ந்தவர்கள் என தெரிய வருகின்றது.

குறித்த பிரதேசத்தில் இம் மூவரும் அண்மைக் காலமாக சட்ட விரோதமாக மின்சாரத்தைப் பெற்று வந்துள்ளனர்,.

மேற்படி பிரதேசங்களில் திருட்டு மின்சாரம் பெறுகின்றமை தொடர்பில் சாவகச்சேரி பொலிஸாருக்கு இரகசிய தகவல் கிடைத்தமைக்கு அமைய அவர்கள் திடீர் சோதனையில் ஈடுபட்டனர்.

இதன்போது கடந்த 20-ம் திகதி மூவரும் கைது செய்யப்பட்டதுடன் மின் இணைப்புகளும் துண்டிக்கப் பட்டன.

மேற்படி மூவருக்கும் எதிராக அன்றைய தினமே சாவகச்சேரி நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு நேற்று முன்தினம் வரை ஒத்திவைக் கப்பட்டது.

இதனை அடுத்து குறித்த மூவரும் நேற்று முன்தினம் மீண்டும் நீதி மன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டனர். வழக்கை விசாரித்த நீதவான் ஸ்ரீநிதி நந்தசேகரம் மேற்படி அபராதத்தை விதித்த [illegible] உத்தரவிட்டுள்ளார். (அ-29)

# 13 ஆவது திருத்தம் தொடர்பில் நரேந்திர மோடி பேசினார்

### யாழ்.மாநகர முதல்வர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் அழைப்பை வட மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் நிராகரித்து வரலாற்றுத் தவறிழைத்துள்ளார் என யாழ்.மாநகர சபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா சாடியுள்ளார்.

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் பதவியேற்பு விழாவிற்கு இலங்கையிலிருந்து சென்ற குழுவோடு சென்று நாடு திரும்பிய நிலையில் ஊடகங்களிடம் கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கையிலிருந்து பிரதிநிதிகள் வரவேண்டும் என்ற நோக்குடன் பாரதப் பிரதமர், ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவினூடாக வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனை இலங்கையிலிருந்து செல்லும் குழுவோடும் வருகை தருமாறு அழைப்பு விடுத்திருந்தார்.


எனினும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு கடந்த காலங்களில் விட்ட வரலாற்றுத் தவறுகள் போல் இம்முறையும் வரலாற்றுத் தவறிழைத்துள்ளது.

மோடி- மகிந்தவிற்கு இடையிலான சந்திப்பின் போது 13 ஆவது திருத்தச் சட்டம் நடைமுறைப்படுத்தப்படுவது தொடர்பில் ஆராயப்பட்டதோடு இலங்கையில் போருக்குப் பின்னரான காலத்தில் இடம்பெறுகின்ற அபிவிருத்தித்திட்டங்கள், கல்வி முன்னேற்றம் தொடர்பிலும் ஆராயப்பட்டன என அவர் மேலும் தெரிவித்தார். (2-4)

## சத்திய தரிசனம்



தெய்வீகத்தின் வழிகள் எப்போதுமே புரிந்து கொள்ள இயலாத அளவிற்கு மர்மமானவை. தெய்வீகத்தின் கருணை எங்ஙனம் வேலை செய்கிறது என உணர்ந்து கொள்ளுதல் மிகக்கடினம் தனது பக்தர்கள் துயருற்று மீளமுடியாமல் தவிக்கும் போது இறைவன் உடனடியாக வந்து. அக்கடினமான சூழலிலிருந்து அவர்களை மீட்ட கணக்கற்ற நிகழ்ச்சிகள் இருக்கின்றன. பக்தர்களுக்கு இன்று சில வடிவங்கள் தெய்வீகமாக மனதில் பதிந்து போயிருக்கின்றன அந்த வடிவத்தின் மேல் வைத்த பக்தியை ஒரு சடங்காக நினைத்துச் செய்கிறார்கள். உனது தானம் வழிபாடு இவையெல்லாம் பற்றி இறைவனுக்கு எந்த விதமான ஈடுபாடும் இல்லை. உங்களது தானம், செல்வம் இவற்றையெல்லாம் வருமானவரி அலுவலகத்திற்கு காட்டுங்கள் இறைவன் விரும்புவதெல்லாம் அன்பு ஒன்றைத்தான். அன்பின் மேல் வரியும் கிடையாது.



## அறிந்து கொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்

### தரையில் உட்கார்ந்து சம்மணமிட்டு சாப்பிடுவது ஏன்?...

மனிதர்கள் தரையில் அமர்ந்து சாப்பிடும் பழக்கம் ஆதி காலத்திலிருந்தே உள்ளது. சாப்பாட்டு மேசையில் உட்கார்ந்து தொலைக்காட்சி பார்த்துக் கொண்டோ அல்லது படுக்கையில் உட்கார்ந்து கொண்டோ சாப்பிடுவது வசதியாக இருப்பது போல் நமக்குத் தோன்றலாம்.

ஆனால், கால்களை குறுக்காக மடக்கி, சம்மணம் போட்டு கட்டாந்தரையில் உட்கார்ந்து சாப்பிடுவது அழகு மட்டுமல்ல, ஆரோக்கியமும் கூட என்பது நம் முன்னோர்கள் கண்டறிந்த உண்மை! தரையில் உட்கார்ந்து சாப்பிடுவது மிகவும் நல்லது என்பதற்கான சில காரணங்கள் கூறப்பட்டுள்ளது. அவையாவன,

செரிமான சக்தி அதிகரிக்க, உடல் எடையைக் குறைக்க, மிகவும் இலகுத் தன்மையாளராக மாற்ற,குடும்பப் பிணைப்பை அதிகரிக்க, உடல் தோரணை முன்னேற, முழங்கால்கள், இடுப்பெலும்புகள் வலுப்பெற, மனதைத் தளர்த்தி, நரம்புகளை சாந்தப்படுத்த, இதயத்தை பலப்படுத்தவாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடமாகாண பாடசாலைகளுக்கிடையிலான ஆண்களுக்கான கரப்பந்தாட்ட போட்டி



யாழ்.கோப்பாய் மகா வித்தியாலயம்



யாழ்.புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தா கல்லூரி



யாழ்.சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரி



யாழ்.புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தா கல்லூரி



யாழ்.புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தா கல்லூரி



யாழ்.சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி

வடமாகாண பாடசாலைகள் ஆண்கள் கரப்பந்தாட்டப் போட்டியில் முதலிடம் ஒன்று, இரண்டாமிடங்கள் இரண்டு பெற்று யாழ்ப்பாணம் புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தா கல்லூரி அணி ஆதிக்கம் செலுத்தியுள்ளது.

வடமாகாணக் கல்வித் திணைக்களத்தின் ஏற்பாட்டில் வடமாகாணப்பாடசாலைகளுக்கிடையிலான விளையாட்டுப் போட்டிகள் 5 கட்டங்களாகத் தற்போது இடம்பெற்று வருகின்றன.

முதலாம் கட்டப் போட்டிகளான மரதனோட்டப் போட்டிகள் முல்லைத்தீவு மாவட்டத்தில் முடிவடைந்த நிலையில் இரண்டாம் கட்டப் போட்டிகள் தற்போது முல்லைத்தீவு மாவட்டத்திலேயே இடம்பெற்று வருகின்றன.

இதில் ஆண்களுக்கான கரப்பந்தாட்டப்போட்டிகள் முல்லை.வித்தியானந்தா கல்லூரி மைதானத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம் பெற்றது.

15 வயதுப்பிரிவு ஆண்களுக்கான போட்டியில் யாழ்.கோப்பாய் மகா வித்தியாலயம் முதலிடத்தினையும், புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தா கல்லூரி அணி இரண்டாமிடத்தினையும், யாழ்.ஆவரங்கால் மகாஜன வித்தியாலயம் மூன்றாமிடத்தினையும் பெற்றன.

17 வயதுப்பிரிவு ஆண்களுக்கான போட்டியில் யாழ்.சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரி அணி முதலிடத்தினையும், யாழ்.புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தா கல்லூரி அணி இரண்டாமிடத்தினையும், யாழ்.ஆவரங்கால் மகாஜன வித்தியாலயம் மூன்றாமிடத்தினையும் பெற்றன.

19 வயதுப்பிரிவு ஆண்களுக்கான போட்டியில் யாழ்.புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தா கல்லூரி முதலிடத்தினையும், யாழ்.சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி இரண்டாமிடத்தினையும், மனனார் றிசாத் பதியுதீன் மகா வித்தியாலயம் மூன்றாமிடத்தினையும் பெற்றுக் கொண்டன. (க)

# யாழ்ப்பாணக் கல்லூரியை வென்றது கிளிநொச்சி மகா வித்தியாலயம்



கிளிநொச்சி மகா வித்தியாலயத்திற்கும் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிக்கும் இடையே ஆண்டுதோறும் நடைபெறும் நட்புரீதியான கிரிக்கெட் போட்டியில் கிளி/ம.வி 7 இலக்குகளால் வெற்றி பெற்றது. அண்மையில் கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலய மைதானத்தில் இப்போட்டி நடைபெற்றது.

25 பந்துப்பரிமாற்றங்கள் கொண்ட இப்போட்டியில் நாணயச்சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ்ப்பாணக் கல்லூரி அணி 18.1 பந்துப்பரிமாற்றங்களில் அனைத்து இலக்குகளையும் இழந்து 104 ஓட்டங்களைப்பெற்றது.

துடுப்பாட்டத்தில் யாழ்ப்பாணக் கல்லூரி அணி சார்பாக நிருசன் அதிரடியாக 48 ஓட்டங்களை அதிகபட்சமாகப் பெற்றார்.

பந்து வீச்சில் கிளி/ம.வி. சார்பாக மிதுசன், கீர்த்திகன், நிருத்திகன் ஆகியோர் தலா 2 இலக்குகளையும் யதுசன், குருகுலன் தலா ஒரு இலக்குகளையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு 105 ஓட்டங்களை வெற்றியிலக்காக கொண்டு ஆடிய கிளி/ம.வி. அணி 16 பந்து பரிமாற்றங்களில் 3 இலக்குகளை மட்டும் இழந்து 7 இலக்குகளால் வெற்றி பெற்றது.

துடுப்பாட்டத்தில் சனுசன் 25 ஓட்டங்களையும் ஆட்டமிழக்காது துவாரகன், மிதுசன் ஆகியோர் முறையே 33, 16 ஓட்டங்களை அதிகபட்சமாகப் பெற்றனர்.

கடந்த 2012 ஆம் ஆண்டு கிளிநொச்சியில் நடைபெற்ற போட்டியில் கிளி/ம.வி. அணியும் 2013 வட்டுக்கோட்டையில் நடைபெற்ற போட்டியில் யாழ்ப்பாணக் கல்லூரி அணியும் இம்முறை கிளி/ம.வி. அணியும் வெற்றி பெற்றுள்ளன. இதனைத் தொடர்ந்து நடைபெற்ற பழைய மாணவர்களுக்கான போட்டியில் கிளி/ம.வியின் பழைய மாணவர் அணி வெற்றி பெற்றமை குறிப்பிடத்தக்கது. (க)

## இன்றைய போட்டி

யாழ்.மாவட்ட தாச்சி சங்க அனுசரணையுடன் தாவடி காளி அம்பாள் விளையாட்டுக் கழகம் நடத்தும் மின்னொளியிலான மாபெரும் தாச்சி சுற்றுப் போட்டியின் இன்றைய லீக் போட்டியில் மறுமலர்ச்சி அணியும் வள்ளுவர் அணியும் மோதவுள்ளன.

இப் போட்டி இரவு 7 மணிக்கு தாவடி காளி அம்பாள் விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது. (கு)

# மைலோ கிண்ண வலைப்பந்து இன்று ஆரம்பம்

வடமாகாண பாடசாலைகளுக்கு இடையிலான 13, 14, 16, 18 வயதுப்பிரிவு பெண்களுக்கான மைலோ வெற்றிக் கிண்ணத்துக்கான வலைப்பந்தாட்ட சுற்றுப் போட்டித் தொடர் இன்று வியாழக்கிழமை கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய மைதானத்தில் இடம்பெறவுள்ளது. (கு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நடப்புச் சம்பியன் மும்பையை வென்றது சென்னை சுப்பர் கிங்ஸ்

ஐ.பி.எல். சீசன் 7 எலிமினேட்டர் சுற்றில் மும்பைக்கு எதிரான ஆட்டத்தில் சென்னை சுப்பர் கிங்ஸ் அணி 7 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. முன்னதாக நாணயச்சுழற்சியில்வென்றசென்னை அணி முதலில் பந்து வீச்சை தேர்வு செய்தது. இதனை அடுத்து களமிறங்கிய மும்பை அணி நிர்ணயிக்கபட்ட 20 ஓவர்களில் 8 விக்கெட்டுகளை இழந்து 173 ஓட்டங்கள் எடுத்தது.

மும்பை அணியில் அதிக பட்சமாக சிம்மென்ஸ் 44 பந்துகளில் 5 பவுண்டரி, 4 சிக்சர், உள்பட 67 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தார். மைக்கேல் ஹஸி 39, கோரி அண்டர்சன 20, ரோகித் சர்மா 20 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தனர்.


சென்னை அணியின் பந்து வீச்சில் மோகித் சர்மா 3, ஜடேஜா 2, நெக்ரா 2, அஸ்வின் 1 விக்கெட்டுகள் வீழ்த்தினர். இதனை அடுத்து 174 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய சென்னை அணி 18.4 பந்துகளில் 3 விக்கெட்டுகளை இழந்து 176 ஓட்டங்கள் எடுத்து வெற்றி பெற்றது.

சென்னை அணியில் அதிக பட்சமாக ரெய்னா 33 பந்துகளில் 4 பவுண்டரி, 2 சிக்சர் உள்பட 54 ஓட்டங்கள் எடுத்து இறுதிவரை ஆட்டமிழக்காமல் வெற்றியை உறுதி செய்தார். டேவிட் ஹஸி 29 பந்துகளில் 2 பவுண்டரி, 3 சிக்சருடன் 40 ஓட்டங்கள் எடுத்து இறுதி வரை ஆட்டமிழக்காமல் களத்தில் இருந்தார். வேய்ன் ஸ்மித் 20, டு ப்ளஸ்சிஸ் 35, மக்கலம் 14 ஓட்டங்கள எடுத்து ஆட்டமிழந்தனர். இந்த வெற்றியின் மூலம் குவாலிபயர் 2-ல் பஞ்சாப் - சென்னை அணிகள் வரும் நாளை 30-ம் திகதி விளையாட உள்ளன.

இப்போட்டியின் ஆட்டநாயகனாக சென்னை அணியின் ரெய்னா தெரிவானார். (க)

## இன்றைய போட்டி

கொற்றாவத்தை சிவானந்தா விளையாட்டு கழகத்தினால் பருத்தித்துறை உதைப்பந்தாட் லீக்கின் அனுமதியுடன் யாழ்.மாவட்ட ரீதியாக ஒன்பது பேர் கொண்ட உதைபந்தாட் சுற்றுப்போட்டி நடத்தப்படுகின்றது. இன்று வியாழக்கிழமை நடைபெறவுள்ள போட்டியில் பிற்பகல் 3.30 மணிக்கு கலட்டி விளையாட்டு கழகத்தை எதிர்த்து உரும்பிராய் சென் மைக்கல் விளையாட்டு கழகமும் மாலை 4.30 மணிக்கு ஆதிசக்தி விளையாட்டு கழகத்தை எதிர்த்து பொம்மஸ் விளையாட்டு கழகமும் மோதவுள்ளது. (க)



# இறுதிப் போட்டிக்குள் கொல்கத்தா



பஞ்சாப்பை வீழ்த்தி கொல்கத்தா அணி இறுதிப் போட்டிக்கு முன்னேறியது. முன்னதாக நாணயச் சுழற்சியில் வென்ற பஞ்சாப் அணி கப்டன் பெய்லி முதலில் பந்து வீச்சை தேர்வு செய்தார். இதனையடுத்து களமிறங்கிய கொல்கத்தா அணி 15.4 ஓவர்களில் 5 விக்கெட் இழப்பிற்கு 113 ஓட்டங்கள் எடுத்திருந்த போது மழை குறுக்கிட்டதால் போட்டி நிறுத்தப்பட்டது. மழை நின்றபின் போட்டி மீண்டும் தொடங்கிய நிலையில், 20 ஓவர்களில் கொல்கத்தா அணி 8 விக்கெட்டுகளை இழந்து 163 ஓட்டங்கள் எடுத்தது. 164 எடுத்தால் வெற்றி என்று களமிறங்கிய பஞ்சாப் அணி 20 ஓவர்களில் 8 விக்கெட்டுகளை இழந்து 138 ஓட்டங்கள் எடுத்து தோல்வி யுற்றது.

இப்போட்டியின் ஆட்டநாயகனாக உமேஸ் யாதவ் தெரிவானார். (க)

## இராணுவத்தை...

கஜேந்திரகுமார் பொன்னம்பலம், பொதுச்செயலாளர்செ.கஜேந்திரன ஆகியோரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சுரேஷ் பிரேமச்சந்திரன், சி.சிறிதரன், வடமாகாண சபை அமைச்சர்கள் பொ.ஐங்கரநேசன், த.குருகுலராஜா, வடமாகாண சபை உறுப்பினர்கள் எம்.கே.சிவாஜிலிங்கம், து.ரவிகரன், சு.பசுபதிப்பிள்ளை, ஜனநாயக மக்கள் முன்னணியின் ஊடகச் செயலாளர் சி.பாஸ்கரா ஆகியோருடன் ஏராளமான பொதுமக்களும் கலந்து கொண்டிருந்தனர்.

கடந்த 26ஆம் திகதி ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்தக் கவனயீர்ப்புப் போராட்டம், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் கிளிநொச்சி மாவட்ட அமைப்பாளர் த.ஜெகதீஸ்வரன் பயங்கரவாதக் குற்றத்தடுப்புப பிரிவினரால் கைது செய்யப்பட்டதைத் தொடர்ந்து நேற்றை திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டிருந்தது. இந்நிலையில் நேற்றுக் காலை திட்டமிட்ட படி இந்தக் கவனயீர்ப்பு போராட்டம் இடம்பெற்றது.

இந்நில அபகரிப்புக்கு எதிரான கவனயீர்ப்பு போராட்டத்தில், எமது நிலமும்எமது வீடும்எமக்கு வேண்டும். இராணுவமே வெளியேறு, பயங்கரவாத தடைச்சட்டம் ஜனநாயக தலைமைகளை நசுக்குவதற்காவோ?, சர்வதேசமே ஜெகதீஸ்வரனின் விடுதலைக்கு நடவடிக்கை எடு, சுயநிர்ணய உரிமையை அங்கீகரி, எங்கள் நிலமும் எங்கள் வீடும் எமக்கு வேண்டும் போன்ற பல கோஷங்களை தங்களது கையில் தாங்கிய படி போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்தப் போராட்டம் இடம்பெற்ற பகுதியில் பெருமளவான இராணுவத்தினர் குவிக்கப்பட்டிருந்த அதேவேளை இராணுவப் புலனாய்வுத் துறையினரும் அதிகளவில் பிரசன்னமாகியிருந்தனர்.(செ-6,250,271)

## போராட்ட...

வீதியில் நின்ற ஒருவர் கணக்குப் பார்த்ததில், அந்தப் போராட்டத்தில் வெறும் 42 பேர் தான் கலந்து கொண்டிருந்தனர். சாவகச்சேரியிலிருந்து பஸ்ஸில் கொண்டுவரப்பட்டவர்கள் தான் கிளிநொச்சியில் காணி கேட்டுப் போராட்டம் நடத்தியுள்ளனர். கிளிநொச்சியில் இருந்து யாரும் அதில் கலந்து கொண்டதாக எங்களுக்குத் தெரியவில்லை என்றார் வணிகசூரிய.

கிளிநொச்சியில் விடுதலைப் புலிகளின் மாவீரர் தினம் நடத்திய இடத்தை ஒட்டிய காணியை வழங்குமாறு கோரியே அவர்கள் போராட்டம் நடத்தினார்கள் என்றும் அவர் கூறினார்.

விடுதலைப் புலிகள் தமது தலைமைப் பிரதேசமாகப் பயன்படுத்திவந்த காணியையே இப்போது இவர்கள் கேட்கிறார்கள். அந்தக் காணியை இராணுவம் கைப்பற்றி தற்போது அங்கே நிலைகொண்டிருக்கிறது. இந்த காணிப்பிரதேசத்திற்கு பல உரிமையாளர்கள் இருந்தபோதிலும், எவரிடம் காணி உரிமைப் பத்திரங்கள் கிடையாது. பலரும் உரிமை கோருகின்றனர் என்றார் இராணுவப் பேச்சாளர்.

சட்டப்படியான ஆவணங்கள் மூலம் உரிமை உறுதிப்படுத்தப்பட்டுள்ள 108 ஏக்கர் காணிப்பிரதேசம் கடந்த நாட்களில் கிளிநொச்சிப் பிரதேச மக்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.(செ-11)

## நாடா?...

பொருளாதாரம் போன்ற அன்றாடம் மக்கள் வாழ்க்கையுடன் சம்பந்தப்பட்ட சகல துறைகளும் மகிந்த ராஜபக்ஷ நிர்வாகத்தின் கீழ் பாரதூரமாக வீழ்ச்சியடைந்துள்ளன.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கம் என்ற முறையில எதிர்நோக்கி வரும் நெருக்கடிகள் அந்த முன்னணி முடிவை நோக்கி நெருங்கியுள்ளதை காட்டுகிறது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு உண்மையான உரித்துடையவர்களுக்கு அந்த கட்சியில் இடமில்லை என்ற அளவுக்கு அரசாங்கத்தின் நெருக்கடி உக்கிரமடைந்துள்ளது.

முக்கியமாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை உருவாக்கிய பண்டாரநாயக்கர்களை கூட எதிரியாக கருதும் அதன் இன்றைய தலைமைத்துவத்திற்கு எதிராக குரல் கொடுக்கும் அந்த கட்சியின் மீது உண்மையான அன்பு கொண்டுள்ள கட்சியினருக்கு பெரும் அழுத்தங்கள் கொடுக்கப்பட்டு வருகின்றன.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு உரித்துடைய உண்மையான கட்சியினரின் கோரிக்கைகளுக்கு செவிசாய்க்காத அரசின் உயர் மட்டத்தில் உள்ள சிலர், நாட்டில் உள்ள ஏனைய கட்சிகளின் ஐக்கியத்தை சிதைக்க முயற்சித்து வருகின்றனர்.

சகல துறைகளிலும் உள்ள மக்கள் அரசாங்கத்திற்கு எதிராக குரல் கொடுக்க ஆரம்பித்துள்ளனர்.

சர்வதேச ரீதியிலும் அரசாங்கம எரிமலைக்கு அருகில் இருப்பதால் இந்த நிலைமை மேலும் மோசமடையும். அரசாங்கத்தின் வீழ்ச்சி ஆரம்பித்து விட்டது.

நாடு எதிர்நோக்கும் துரதிர்ஷ்டவசமான நிலைமைக்கு அரசாங்கத்தின் உயர்மட்டத் தலைவர்களின் ஒருதலைப்பட்சமான நடவடிக்கைகள் பொறுப்பின்றிய நடத்தையுமே காரணம்.

இலங்கை என்பது தமது தனிப்பட்ட சொத்து என்று நினைத்தே அவர்கள் செயற்பட்டு வருகின்றனர்.

இதனால் நாடா அல்லது ராஜபக்ஷ குடும்பமா முக்கியம் என்பதை தீர்மானிக்க வேண்டிய காலம் வந்துள்ளது எனவும் கரு ஜயசூரிய தனது அறிக்கையில் கூறியுள்ளார்.(செ-11)

## மன்மோகன...

மாற்றம் ஏற்பட்டாலும் அந்த நாட்டை சேர்ந்த வெளிநாட்டு தூதுவர் பதவிகளில் எந்த மாற்றமும் ஏற்படாது.

இந்தியாவில் 121 கோடி மக்களை பிரதிநிதித்துவப்படுத்துவதற்காக அந்நாட்டு புதிய பிரதமர் வெறும் 23 அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்களை மட்டுமே நியமித்துள்ளார். முழு அமைச்சர்களின் எண்ணிக்கை 45 பேர் மட்டுமே.

ஆனால் இரண்டு கோடி மக்கள் தொகையை கொண்ட இலங்கையில் அமைச்சரவை அந்தஸ்துள்ள 65 அமைச்சர்கள் உட்பட 123 க்கும் மேற்பட்ட அமைச்சர்கள் இருக்கின்றனர். இலங்கை ஜனாதிபதி இந்தியாவை பார்த்து வெட்கப்பட வேண்டும்.

இந்தியாவிலும் ராஜபக்ஷ ஒருவர் ஆட்சிக்கு வந்துள்ளதாக அண்மையில் அமைச்சர் பசில் ராஜபக்ஷ தெரிவித்திருந்தார்.

இந்திய பிரதமரின் தேர்தல் கருப். பொருள் நல்லாட்சி என்பதாகும். அது இலங்கையில் போன்று ராஜபக்ஷவினரின் நிர்வாகத்தை அமுல்படுத்துவதல்ல.

இந்தியாவில் இதுவரை ஆட்சி செய்து வந்த அரசாங்கங்கள் ஏனைய அரசியல் கட்சிகளின் ஆதரவுடனேயே ஆட்சி நடத்தி வந்துள்ளன.

பாரதிய ஜனதா கட்சி எந்த கட்சியின் ஆதரவின்றி ஆட்சியமைக்கும் பலத்தை பெற்றுள்ளது.

பண்டாரநாயக்கவுக்கோ, சிறிமாவோ பண்டாரநாயக்கவுக்கோ, சந்திரிகா பண்டாரநாயக்கவுக்கோ, மகிந்த ராஜபக்ஷவுக்கோ இப்படியான வெற்றியை பெற முடியவில்லை.

இந்தியாவின் புதிய பிரதமர் பதவியேற்பதை முன்னிட்டு இலங்கையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள சகல இந்திய மீனவர்களையும் விடுதலை செய்யுமாறு ஜனாதிபதி உத்தர விட்டிருந்தார். இதில் வேடிக்கை என்னவெனில் இலங்கை இந்திய மீனவர்கள் எவரும் தடுப்பில் இல்லை.

போதைப் பொருள் குற்றம் தொடர்பில் கைது செய்யப்பட்ட மூன்று இந்தியர்கள் மாத்திரமே இலங்கையில் தற்போது தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இலங்கையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இந்திய மீனவர்களின் எண்ணிக்கை பற்றி கூட ஜனாதிபதி அறியாது இருப்பது கவலைக்குரிய விடயம்.

இந்தியாவின் மோடியின் அரசாங்கத்தை போல் இலங்கையிலும ஒரு அரசாங்கம் ஏற்பட வேண்டும். அதற்கான பொது மேடை உருவாக்கப்பட வேண்டும். பொது வேலைத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டும்.

அரசாங்கத்தில் இருக்கும் சிலர் இதற்கு சிறந்த ஒத்துழைப்புகளை வழங்குவர். அரசாங்கத்தின் முக்கிய அமைச்சர் உட்பட 17 பேர் அரசாங்கத்தில் இருந்து விலகி எதிர்க் கட்சியில் இணைய உள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

எனினும் அரசாங்கத்தில் இருக்கும் 60 பேர் கொண்ட அணி எதிர்க்கட்சியில் இணைய தயாராக உள்ளது. இதனால் பொது மேடை ஒன்றை உருவாக்கி எவ்வித சிரமமும் இன்றி இந்த அரசாங்கத்தை விரட்டும் வேலைத்திட்டத்தை முன்னெடுக்க முடியும் என்பது எமது நம்பிக்கை எனவும் அசாத் சாலி குறிப்பிட்டுள்ளார். (செ-11)

## வடக்கில்...

தானிகர் நேற்றைய தினம் யாழ்ப்பாணத்தில் வைத்து சந்தித்து கலந்துரையாடினார்.

இந்தச் சந்திப்பு தொடர்பாக வடக்கு மாகாண சபையின் முதலமைச்சர் விடுத்துள்ள் செய்திக் குறிப்பில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த செய்திக்குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இலங்கைக்கான அவுஸ்ரேலிய உயர்ஸ்தானியர் றொபின் மூடி அத்துடன் அவுஸ்ரேலிய வெளிநாட்டலுவல்கள் வாணிபம் திணைக்கள மேலதிக செயலாளர் பிரைஸ கட்சசன் மேலும் அதே திணைக்கள பணிப்பாளர் சூ.க்ரேவ்ஸ் ஆகியோர் இலங்கையில் செயற்திட்டங்களுக்குப் பொறுப்பான உள்ள இன்னொரு அலுவலர் ஆகியோர் தாங்கள் வட மாகாணத்தில் அவுஸ்ரேலிய உதவியுடன் செய்து கொண்டிருக்கும் செயற்திட்டங்கள் பற்றிப் பார்வையிட நேற்று யாழ்ப்பாணத்திற்கு வந்திருந்தனர்.

வட மாகாண சபை தங்களிடமிருந்து ஏதாவது உதவி எதிர்ப் பார்க்கின்றார்களா? வட மாகாண சபை தனித்து இயங்கப் போதுமான சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளதா? என்பதையும் அறிந்து கொள்ள விருப்பம் இருப்பதாகத் தெரிவித்தார்கள்.

வடக்கு மாகாண சபையானது அரசியல் ரீதியாக தனித்து இயங்க பல முட்டுக்கட்டைகள் அரசினால் விதித்திருப்பதாக அவற்றை நான் எடுத்துக் கூறினேன். பிரதம செயலாளர் சம்பந்தமாகச் சட்டப்படி நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. பிரதம செயலாளர், முதலமைச்சர் அனுசரணையுடன்தான் பதவிப் பொறுப்பை ஏற்கமுடியுமென்றும் அவ்வாறு வட மாகாணத்தில் நடைபெறவில்லை எனவும் எடுத்துக் கூறினேன். எவ்வளவு தான் வட மாகாணத்திற்கு முன்னுரிமை வழங்கப்படுவதாக ஜனாதிபதியும் ஆளுநரும் கூறினாலும் அது நடைமுறையில் நடைபெறவில்லை என்பதையும் எடுத்துக் கூறினேன்.

அதேவேளை ஆற்றல் மேம்பாட்டுத் திட்டங்கள் எமக்கு அவசரமாகத் தேவைப்படுவதை எடுத்துக் கூறியபோது அது சம்பந்தமாகத் தாம் பரிசீலித்து ஏதேனும் உதவி செய்வதாக உயர்ஸ்தானிகர் கூறினார். போரினால் பாதிக்கப்பட்ட விதவைகள், வறியவர்கள், வறுமையில் வாடுவோர் சம்பந்தப்பட்ட நல்ல திட்டங்களை வகுத்து அவர்களின் வாழ்க்கையில் மேன்மை பெற நடவடிக்கை எடுக்க [illegible] தையும் எடுத்துக் கூறி[illegible]ப்பட்ட விதங்களில் இவர்களுக்கு உதவி செய்யலாம் என்பதையும் கூறினேன்.

வட மாகாணத்தில் மிகப்பெரிய பிரச்சினை எமது நிலவளங்கள் நீர்வளங்கள் என்பவற்றை இராணுவம் கையகப்படுத்தியுள்ளதால ஏற்பட்டுள்ளது என்பதை எடுத்துத் கூறினேன். அரசாங்கம் தமக்கத் தேவையான செயற்திட்டங்களைச் செய்படுத்த முன்வருகின்றதே தவிர மக்களுக்குத் தேவையான செயற் திட்டங்களை மக்களின் பிரதிநிதிகள் மூலம் அறிந்து செயற்படுத்த முன்வரவில்லை என்பதைக் கூறினேன்.

மேலும் என்னுடனான சந்திப்பையடுத்து தாம் இங்கிருந்து கிளிநொச்சி சென்று தமது உதவி மூலம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள சில செயற்திட்டங்களைப் பார்வையிட்டுவிட்டு கொழும்பு செல்வதாக அவுஸ்ரேலிய உயர்ஸ்தானிகர் கூறினார் என்று வடக்கு மாகாண முதலமைச்சர் அனுப்பி வைத்துள்ள செய்திக்குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை அவுஸ்ரேலிய உயர்ஸ்தானியர்கள் வடக்கு ஆளுநா ஜி.ஏ.சந்திரசிறியையும் அவரது அலுவலகத்தில் சென்று சந்தித்து கல[illegible] க்தக்கது. (செ-4,6)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

UK ஆங்கிலப் பாடநெறிகள்
ADVANCE LEARNING ENGLISH
CAMBRIDGE ENGLISH
சிறுவர் முதல் பெரியோர் வரை வெவ்வேறான பாடநெறிகள்.
சர்வதேச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ். அடிப்படையில் இருந்து கற்கலாம்.
ஒக்ஸ்போட் பல்கலைக்கழகத்தின் ஆங்கிலத் தகுதிகாண் பரீட்சை இலவசமாக.
பிரிவொன்றில் 07 மாணவர்கள் மட்டுமே. மல்ரி மீடியா வசதியுள்ள வகுப்பறை.
0779866409
(6508)
ALISON DIGILITE Supported by YES! Suvadi
51/3, (பொற்பதிப் பிள்ளையார் கோவிலருகில்) பொற்பதி வீதி, கொக்குவில். 0779866409

ஒலிநாடா வெளியீடு
காலத்தால் அழியாத கானங்கள் வரிசையில்
"யார் அந்த நிலவு" "அன்புள்ள மான்விழியே" யைத் தொடர்ந்து
அ.கேதீஸின் மீழிசையில் நெல்லை விஜயன் வழங்கும்
"நினைத்தேன் வந்தாய்" ஒலிநாடா வெளிவருகிறது
தொடர்புகளுக்கு: 0778469169
(C-7505)

## அதிகா...

பது எனக்கு தெரியாது.

இந்தியாவின்வெளி நாட்டு கொள்கைகள வகுக்கப்படும் போது இந்திய மாநிலங்களுடன் கலந்துரையாடி தீர்மானிக்க வேண்டும் என்பது பாரதிய ஜனதா கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனத்தில குறிப்பிடப்பட்டுள்ளது.

இதன்காரணமாக இந்திய பிரதமர் தமிழகத்தின் நிலைப்பாடுகளை கவனத்தில் கொள்ளாது இருக்க முடியாது.

13-வது அரசியல் அமைப்புத் திருத்தம் பற்றி ஐக்கிய தேசியக் கட்சி நன்கு அறியும். இலங்கையில் அதிகார பரவலாக்கம் ஒன்று அவசியம். அதிகாரப் பரவலாக்கம் மூலம் நாட்டில் அபிவிருத்தி ஏற்படும்.

இந்தியா சுதந்திரமடைந்த பின்னர், அந்நாட்டில் அதிகாரங்கள் பகிரப்பட்டதால் இந்தியா வேகமாக முன்னேறியது. முதலீடுகளை செய்வதில்இந்தியாவில் மாநிலங்களுக்கு இடையிலும் தற்போது போட்டியான நிலைமை ஏற்பட்டுள்ளது எனவும் லக்ஷ்மன் கிரியெல்ல குறிப்பிட்டார். (செ-11)

க.பொ.த உயர்தர மாணவர்களுக்கான
மாபெரும் தொடர் கருத்தரங்கு
வரலாறு
S.S.தாஸ் B.A(Hons) sp.Dip in His
1வது கருத்தரங்கு
Note: 30.05.2014 வெள்ளி 9-2
- கையேடுகள் வழங்கப்படும்.
- சிறப்பான எதிர்பார்க்கை வழங்கப்படும்
- மாதிரிப் பரீட்சைகள் நடத்தப்பட்டு புள்ளிகள் மதிப்பிடப்படும்.
தொடர்புகளுக்கு: 075 2040061
NEC மணிக்கூட்டு வீதி, யாழ்.நகர்.
(C-7504)

## 31 ஆம் நாள் நினைவலைகளும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



### கனகசபை சுப்பிரமணியம்

தோற்றம் :- 17.12.1932
மறைவு :- 29.04.2014

29.04.2014 அன்று சிவபதம் அடைந்த எங்கள் குடும்பத்தலைவரின் அந்தியேட்டிக்கிரியைகள் இன்று (29.05.2014) கீரிமலை புனித தீர்த்தக் கரையில் நடைபெறவுள்ளது. வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் 31.05.2014 சனிக்கிழமை 11.00 மணியளவில் எமது பன்னாலை இல்லத்தில் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்களும் குடும்பசகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம்.

அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம் :- திருமதி சு.தங்கரத்தினம் (பவாக்கா)
திரு.திருமதி சு.சயந்தன் குடும்பம்
திரு.திருமதி சு.ஜெயரஞ்சன் குடும்பம்
திரு.திருமதி சு.ஜெயந்தன் குடும்பம்

'சிவபதி'
பன்னாலை, தெல்லிப்பழை.
021 205 9701
(6500)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



### திரு. பசுபதி ரவீந்திரநாதன்

B.Sc, PGDE, M.Sc. (SLTS I, SLPS 2 II)

மாங்குளம் மத்திய கல்லூரியை மாட்சிமை பெறநெறிப் படுத்தும் - நம் அதிபர் முதுவிஞ்ஞானமாணிப் பட்டம் பெறும் இந்நாளில் முழுமனதார வாழ்கவென வாழ்த்துகின்றோம்.

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் நடைபெறும் பொதுப் பட்டமளிப்பு விழாவில் விஞ்ஞான முதுமாணி (M.Sc) பட்டம் பெறும் எமது பாடசாலை அதிபர் திரு ப.ரவீந்திரநாதன் அவர்களை மேலும் பற்பல பட்டங்கள் பெற்றுயர வாழ்த்துகின்றோம்.

ஆசிரியர் நலன்புரிச் சங்கம்
மு/மாங்குளம் மத்திய மகா வித்தியாலயம்
மாங்குளம்.
(6507)

வடக்கில் பிரமாண்டமான
புதியதோர் அத்தியாயத்துடன்
ANDRA
பிறிண்டேர்ஸ்





T-Shirt & Cap Printing
அழகிய வடிவமைப்புடன் கூடிய
விருதுகள், நினைவுச் சின்னங்கள், பதக்கங்கள், வெற்றிக் கேடயங்கள்
Awards, Shields, Medals, Trophies,
T-Shirt Printing, ,ID Card Printing & Mug Printing
புத்தகங்கள், சஞ்சிகைகள், துண்டுப் பிரசுரங்கள், போஸ்ரர்கள், லேபிள்கள் மற்றும் சகலவிதமான அச்சுப் பதிப்புக்கள்



Hotline 0776622981
(C-7502)
பிரதான அலுவலகம் : 379. கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். 021 222 8929
356A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். 021 221 7279
கிளைகள்
165. மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். 021 221 9929
470/2. கண்டி வீதி (A9), கிளிநொச்சி. 021 720 1275

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 29.05.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org